9

y the Madras Text-Book Committee for Class use.
Gazette, Part I - B, dated 4th April 1933, page 178).

தமிழ்நாட்டு நாயக்க மன்னர் சரித்திரத் தொடர் 1.

விசுவநாத நாயக்கர்

புதுக்கோட்டை
மஹாராஜா கலாசாலைத் தமிழாசிரியர்
பண்டித, நா. கனகராஜையர், வித்துவான்
எழுதியது

OFFICE OF THE REGISTRAR
23 MAY 1934
MADRAS

V21195
N34
85875

T. G. கோபால் பிள்ளை
தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி
பதிப்புரிமை] 1934 [விலை அணா 9

தமிழ்நாட்டு நாயக்க மன்னர் சரித்திரத் தொடர் 1.

விசுவநாத நாயக்கர்

புதுக்கோட்டை

மஹாராஜா கலாசாலைத் தமிழாசிரியர்

பண்டித, நா. கனகராஜையர், வித்துவான்

எழுதியது

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றது.

OFFICE OF THE REGISTRAR
23 MAY 1934
MADRAS

T. G. கோபால் பிள்ளை

தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி

1934

[விலை அணா 9

ப்புரிமை]

THE B. N. PRESS,
EDUCATIONAL PRINTERS
MADRAS.

85875

நூன்முகம்

புதுமை புதுமையாக இந்நாளிலே தோன்றுகின்ற இயந்திரத் தொழில்களும், சாஸ்திர ஆராய்ச்சிகளும் தேச முன்னேற்றத்திற்காவன என்று அறிஞர்களாற் பாராட்டப்படுகின்றன. ஒரு நாட்டினர் தமது பூர்வ சரித்திரத்தைப் பல துறைகளாலும் ஆராய்ந்து நன்கு அறிந்துகொள்வதும் நாட்டின் முன்னேற்றத்திற் கமைந்த பேருதவியேயாம் என்பது அறிஞர் கருத்து. தமிழகம் எனப் பல நூற்றாண்டுகளாகப் புகழ்பெற்றிலங்கும் நம் நாட்டில் முன்னாளில் அரசு புரிந்தோர் இத்தனைபேர் என்று கணக்கிட்டுரைத்தல் இயல்வதன்று. பலப்பல காலங்களில் பல்வேறு மரபினர் ஆண்டனரென்று இந்நாளைய ஆராய்ச்சியால் நாம் அறிகின்றோம்.

தமிழகத்தே ஆட்சி புரிந்திருந்தோருள் சேர சோழ பாண்டிய மரபினர் மிகத் தொல்புகழ் படைத்தவர். எனினும், இத்தமிழ்ப் பழங்குடி அரச மரபினரில் ஒருவரேனும் இந்நாளில் இலர். சமீப காலத்தில் விஜயநகர சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்திய மன்னர் பெருமக்களின் அதிகாரத்துக்கடங்கிச் சிற்றரசரா யாண்ட சோழ பாண்டியரும் மறைந்தனர். அவர்கட்குப்பின் தமிழகத்தில் அரசுரிமைபூண்டு வாழ்ந்த 'நாயக்கர்' மரபினருள் முதன் மன்னராக வந்த விசுவநாதர் சரிதம் இச்சிறு புத்தகத்தில் அடங்கியுள்ளது.

இந்நாளில், அறிஞர் பலர் நாயக்க மரபினரது வரலாற்றை நன்கு ஆராய்ந்து, தமிழ்மொழியிலும் ஆங்கில மொழியிலும் பல புது நூல்கள் இயற்றி உதவியுள்ளனர். அவற்றுள், சரித்திர அறிஞர் ஸ்ரீமான் சத்தியநாத ஐயர் அவர்கள் எழுதிய பாண்டிய நாயக்கர் சரிதம் என்ற ஆங்கிலநூலும்,

டாக்டர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்கள் வெளியிட்ட விஜயநகர சரித்திர ஆதாரங்கள் என்ற பன்மொழி நூலும், பம்பாய் ராஜதானியில் சிறந்த சரித்திர அறிஞராக விளங்கியிருந்த ஹீராஸ் அவர்கள் வெளியிட்ட அரவீடு வம்சம் என்ற ஆங்கில நூலும், சில வாண்டுகட்கு முன்னர் தமிழ்ப்புலவர் ஸ்ரீமான் முத்துசாமி ஐயர் அவர்கள் செய்யுள் நடையில் இயற்றி வெளியிட்டுள்ள விசுவநாதம் என்ற நாடக நூலும், தமிழ்ப்புலவர் ஸ்ரீமான் ம. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் வெளியிட்ட விசுவநாதன் என்ற சிறு நாடகநூலும், சேலம் ஸ்ரீமான் பகடால நரசிம்மலு நாயுடு அவர்கள் எழுதிய பலிஜவாரு புராணம் என்ற தமிழ் நூலும் விசுவநாதர் சரித்தை நன்கு விளக்கி உரைக்கின்றன.

விசுவநாதர் சரித்திரத்தில், இந்நாளைய சிறுவர்களுக்கு அறிவு புகட்டத்தக்க நீதிபோதம் நன்கு அமைந்துள்ளமையின், அன்னாரது சரிதையைத் தொடர்புபெற வசனநடையில் எழுதவேண்டுமென்ற கருத்துத்தூண்ட இந்நூல் என்னால் எழுதப் பெற்றுளது. சரித்திரப் போக்கிற்குச் சிறிதும் மாறுபடாமல் சிறுவர்கட்கு ஊக்கமூட்டும் பொருட்டுச் சிற்சில புதுமைகள் இடையிடையே இந்நூலில் கலந்து எழுதப் பெற்றுள்ளன. சரித்திர வரலாறுகளில் சமீபகாலத்திலே மிக்க ஆராய்ச்சிசெய்து அரவீடு வம்ச சரித்திரம் எனும் நூலை வெளியிட்ட ஆசிரியர் ஹீராஸ் அவர்களின் கொள்கைகளைப் பெருபாலும் தழுவியே இந்நூல் அமைந்துள்ளது. மைசூர் கெஜட்டீரில் வெளிவந்துள்ள வரலாறுகளும் இந்த ஹீராஸ் அவர்கள் கொள்கைகளையே தழுவி யிருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

நாகம நாயக்கர் குமாரராகிய விசுவநாத நாயக்கர், விஜய நகர சாம்ராஜ்யாதிபதியான கிருஷ்ண தேவராயர் காலத்தில்

மதுரைக் கரசராயினர் என்பது பலரது கொள்கையாகும். இக்கொள்கைக்குரிய பலவகை ஆதாரங்களையும் ஆராய்ந்து, ஆசிரியர் ஹீராஸ் அவர்கள் முடிவாக வெளியிட்ட கருத்தே இந்நூலில் தழுவிக்கொள்ளப் பெற்றிருக்கிறது. 'பலிஜவாரு புராணம்' எழுதிய பகடால நரசிம்மலு நாயுடுகாரு கருது கின்றபடி, நாகம நாயக்கரது வமிசத்தார் க்ஷத்திரியராதல் வேண்டும். கணியூர் சாஸனம் ஒன்றின் வாயிலாக நாகம நாயக்கர் தம்மைக் காசியப கோத்திரத்திற் பிறந்தவராகக் கூறிக் கொள்வதை அறியலாகும். விசுவநாதர் கிருஷ்ண தேவராயரிடம் அடைப்பக்காரராக விருந்தாரென்று சிலர் கருதுவர். இந்நாளிலும் நமது சக்கரவர்த்தியார்க்குச் சுதேச மன்னரது மக்கள், விசேஷ காலங்களிலே அருகிலே பணியாளர்போன்று இருக்க அமர்த்தப்படுவதாக நாம் அறிகிறோம். இதுபோன்றே சிறந்த வீரராகிய நாகம நாயக்கரது குமாரர், கிருஷ்ண தேவராயர் அன்பைப்பெறுமாறு இளம்பருவத்திலே அருகிலிருந்து பணிபுரியுமாறு அமர்த்தப் பெற்றிருக்கலாமென்பதை நாம் கருதவேண்டும். சக்கரவர்த்திக்கு அருகிற் பணி பூண்டிருந்த காரணத்தால், அவர் குடிக்குக் குறைவேதும் ஏற்படக் காரணமில்லை.

விஜய நகரத்திலே அச்சுத தேவராயர் ஆட்சிபுரிந்த காலத்திலேதான் நாகம நாயக்கர்க்கும் விசுவநாத நாயக்கர்க்கும் போர் நிகழ்ந்ததென்பது ஆசிரியர் ஹீராஸ் அவர்களது கொள்கையாம். சந்திரசேகர பாண்டியர் தம் மைந்தனோடு சென்று விஜயநகர சாம்ராஜ்யாதிபதியிடம் தம் குறையைக் கூறிக் கொண்டார் என்று இவர் கருதுகின்றனர். 'விசுவநாதர் கிருஷ்ணதேவராயர் காலத்திலேயே அரசு தாங்கினர்' என்ற பழைய கொள்கையோடு இது மாறுபட்டதேயாயினும், தக்க ஆதாரங்களோடு ஆராய்ந்து முடிவு கட்டப்பட்டுள்ளமையால்

இங்குத் தழுவிக்கொள்ளப் பெற்றது. சந்திரசேகர பாண்டியர் விசுவநாதரை அபிமான புத்திரராக அங்கிகரித்துக் கொண்டதாகக் கூறுவது பழங்கொள்கையோடு மாறுபட்டதே.

'கேரளநாட்டுப் போர்', 'பரவர் கலகம்' என்ற அத்தியாயங்களிலுள்ள விஷயங்களிற் பெரும்பான்மையானவை ஆசிரியர் ஹீராஸ் அவர்களது நாலிற்கண்ட செய்திகளே. இவற்றுட் சில மைசூர் கெஜட்டீரிலும் வெளிவந்துள்ளன.

இவ்வாறு பலதிறப்பட்ட சரித்திர உண்மைகளேயும் ஏற்ற விடங்களில் அமைத்து இச்சரித்திர சம்பந்தமான புத்தகம் எழுதப் பெற்றிருக்கிறது. தென்னட்டுச் சரித்திரங்களே நன்கு ஆராய்ந்து, இதுபோன்ற சரித்திர சம்பந்தமான நூல்கள் சிலவற்றை எழுதிவரக் கருதியுள்ளேன். யான் எழுதிய தமிழ்ப்புலவர் வரலாறு, பாண்டிய மன்னர், சோழ மன்னர் ஆகிய சிறு நூல்களே அன்புடன் ஏற்றுக்கொண்ட தமிழகத்தார்க்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகும். மாணவர்கட்கு ஏற்றவையாகும்படி எழுதிவரும் இந்நூல்களில் காணப்படும் குற்றங்களே அறிஞர் பொறுப்பர் என நம்புகின்றேன்.

இச்சிறு நூலேயும் இதுபோன்ற வேறு சிலவற்றையும் வெளியிட ஏற்றுக்கொண்ட திரிசிரபுரத்துப் பிரசுரகர்த்தர் ஸ்ரீமான் T. G. கோபால் பிள்ளே அவர்கட்கும், இந்நூல் அச்சியற்றப் பெறுவதில் ஒப்புநோக்குதல் முதலிய அரிய உதவிகள் புரிந்த திருச்சிராப்பள்ளி, ஆல் ஸெயிண்ட்ஸ் எஸ். பி. ஜி. பெண் போதனுமுறைப் பாடசாலேத் தமிழாசிரியர் ஸ்ரீமான் வி. நரசிம்ம ஐயர் அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றி உரியதாகும்.

இங்ஙனம்,
கனகராஜையர்.

18—8—'32
புதுக்கோட்டை

பொருளடக்கம்

அத்தியாயம்			பக்கம்
1.	பூர்விக சரித்திரம்	...	1
2.	தந்தையும் மைந்தனும்	...	11
3.	சந்திரசேகரரும் விசுவநாதனும்	...	24
4.	சக்கரவர்த்தியும் நாகமரும்	...	32
5.	தமிழ் நாட்டுத் தலைமை	...	41
6.	விசுவநாத பாண்டியன்	...	52
7.	பாளைய வகுப்பு	...	60
8.	கம்பப் போர்	...	69
9.	பஞ்ச பாண்டியர்	...	78
10.	உள்நாட்டு நிலைமை	...	87
11.	சேர நாட்டுப் போர்	...	95
12.	பரவர் கலகம்	...	107
13.	இளவரசும் முதியவரசும்	...	115

கடவுள் வாழ்த்து

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணங்களே.

—இராமாயணம் - கம்பர்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

—சேக்கிழார்



விசுவநாத நாயக்கர்

விசுவநாத நாயக்கர்

முதல் அத்தியாயம்

பூர்விக சரித்திரம்

"அருளுரு வாகிய வமலனை வணங்கிப்
பொருளுறு மவன்புகழ் புகன்று துதித்துமே."

இயற்கைச் செல்வியின் ஆநந்தத் தாண்டவம் நிகழலாயிற்று. பார்ப்போர் மனத்துள் அதிசயம் விளைக்கவல்ல காட்சிகள் தோன்றின. நிர்மலமான ஆகாயம் முதலில் காணப்பட்டது. பூரணசந்திரன் தனது வெள்ளிய கதிர்களோடு தோன்றி, அமிருதம் பொழிவதுபோல நிலவைச் சொரிந்தனன். பின் மறுகணத்திலேயே மற்றொரு புதுமை விளைந்தது. பெருங் காற்றொன்று வீசி எங்கிருந்தோ மேகக் கூட்டங்களைக் கொண்டுவரத் தொடங்கியது.

சிறிது போழ்திற்குமுன் சந்திரன் விளக்கம் பெற்று ஆட்சிசெய்த வான அரங்கில், இப்போது மேக மண்டல அதிகாரம் தொடக்கமாயிற்று. நண்பகலிலே ஆயிரங் கதிர்களோடு ஒளி வீசித் திகழும் சூரியனையே மறைத்துத் தம் அதிகாரத்தைச் செலுத்தும் மேகங்கள், இராவிலே பதினாறே கலைகளோடு விளங்குஞ் சந்திரனை அடக்கி வென்றிகொள்வது ஒரு வியப்பாகுமோ?

வலிய பகையரசன் வாட்டிய காலத்தே, தன்னரசையும் நாட்டையு மிழந்து, மறைந்து ஒழுகும் அரசன்போலச் சந்திரனும் மேகங்களினிடை மறைந்தொழுகினன். அவ்வாறு அவ்வரசன் பகையரசனிடத் தொடுங்குங்கால், அவனது பரிவாரங்களும் உடனொடுங்குதல் போலச், சந்திரன் மேகங்களால் மறைக்கப்பட்டொடுங்க, நக்ஷத்திரங்களும் உடன் மறைந்தன.

எங்கு நோக்கினும் மேகங்களே நிறைந்து தோன்றின. போர்முகத்துப் படைவீரர் வீசும் வாள், வேல் முதலிய படைகள்போல மின்னல்கள் மின்னின. மற்றும் ஆண்டொலிக்கும் முரசம் முதலிய வாத்தியங்களி னொலியும், போர் வீரரது ஆரவாரமும்போல இடிமுழக்கம் எழுந்தது. அஞ்சா நெஞ்சு படைத்த கள்வரும் காவலரும் ஒழிய, மற்றை மக்கள் அனைவரும் தத்தம் மனையகங்களில் ஒடுங்கினர். அப்போர் முகத்து வீரர் எய்யும் அம்பு முதலிய ஆயுதங்களை யொத்து மழை பொழியலாயிற்று.

இவ்வண்ணம் அதிசய மமைந்து, எவர் மனத்தையுங் கலங்கச் செய்வதாயிருந்த இயற்கைக் காட்சியை கண்டானாயினும், சிறிதேனும் அஞ்சாது, மதுரை நகரத்துக்கு அழகு செய்து விளங்கும் வைகைமா நதியின் வடகரையோரமாக வீரன் ஒருவன் விரைந்து சென்றுகொண்டிருந்தான்.

அவனைத் தாங்கிச் சென்ற குதிரை இடிக்கும் மின்னலுக்கும் அஞ்சிநடுங்கி, மழையால் நனைந்து துன்புற்றதாயினும் வெகு வேகமாகவே சென்றது. இரவிலே மழையையும் பொருட்படுத்தாது சென்ற அவ்வீரன், வடதிசையாக வழியை நன்கு அறிந்தவன்போலத் தன்னை மறந்து செல்வானாயினன்.

அவன் மனமுயற்சியின் பெருமையை மதித்து இடங் கொடுத்ததுபோல மழையுங்குறைந்தது. அவன் இரவெல்லாம் உறக்கமின்றியே பிரயாணம் செய்து, சூரிய உதயத்துக்குமுன் சோணாட்டை யடுத்துள்ள காடுகளை படைந்தான்; அங்கு ஒரு மறைவான இடங்கண்டு குதிரையை மேயவிட்டுத் தானும் களைப்பாறினன்; சிறிதுநேரம் சென்றதும் அருகிலே ஓடியதோர் காட்டாற்றிலே மூழ்கி, அங்கிருந்த பழங்களிற் சிலவற்றைப் பறித்துண்டு பசி தீர்ந்தான்; எவர் கண்ணிலும் படாமல் மாலைக்காலம் வரும் வரையில் அங்கு மறைந்திருந் தான்; பிறகு காட்டோரமாகச் சென்ற ஒரு வழியைப்பற்றி, முன்போலவே குதிரைமீது இவர்ந்து பிரயாணம் செய்தான்; இவ்வண்ணம் பகற்காலங்களில் மறைந்திருப்பதும், இரவிலே பிரயாணம் செய்வதுமாக, ஒரு பட்ச காலத்தில் ஹிந்து சாம் ராஜ்ய சக்கரவர்த்தியாகிய கிருஷ்ண தேவராயர் வாழும் விஜய நகரத்தை அடைந்தான்.

கிருஷ்ண தேவராயர், பகைவரை வணங்கச் செய்து, சிற்றரசர்களைச் செம்மையாக வாழ்வித்து, ஆந்திர மொழியி லும் ஆரிய மொழியிலும் அநேக காவிய நாடகங்களை யியற்றி, அருங்கலை விநோதராய் வாழ்ந்து வந்தார். சரண்புக வருவார் எவரேயாயினும், அவரை அருளோடு ஆதரிக்கும் பெருந் தகைமை வாய்ந்த அம் மன்னர்பிரானிடம், சாலுவ திம்மரசு என்ற அறிஞர் அமைச்சுத் தொழில் பூண்டு நாடாட்சிப் பொறுப்பைத் தாங்கி வந்தார். எண்ணிறந்த படைஞர்க ளாற் காவல் செய்யப்பெற்ற விஜயநகர இராஜதானி நகரிலே, பலநாட்டவரும் பலமதத்தவரும் வியாபாரத்தின் பொருட்டு வந்து சகோதர பாவத்தோடு வாழ்ந்து வந்தனர். இரவும்

பகலும் அடைபடாத வாயில்களையுடைய அரண்மனையிலே உருவிய வாளுடன் வீரர் பலர் காவல் செய்திருந்தனர்.

பாண்டிய நாட்டிலிருந்து தனியனாய் வந்த வீரன், சக்கரவர்த்தியின் அரண்மனை வாயிலை அடைந்தான். தன் முக வாட்டத்தை ஒருவாறு மறைத்துக்கொண்டு, காவலரைப் பார்த்துத் தான் சக்கரவர்த்தியைக் காண வந்திருப்பதாய்த் தெரிவித்தான். அங்கு நின்ற காவலருள் முதியான் ஒருவன் முன் வந்து, "ஐய! வாருங்கள் உள்ளே செல்வோம். உட்புறக் காவலனிடம் யான் தங்களைச் சேர்க்கின்றேன். அங்கிருந்து அமைச்சர் தலைவரைக் கண்டு, அவர் அனுமதி பெற்று அரசர் பெருமானைக் காணலாகும்" என்று கூறி அழைத்துச் சென்றான்.

அமைச்சர் தலைவராகிய திம்மரசு, தம் காரியாலயத்தில் அழகியதோர் இரத்தின கம்பளத்தின்மீது வீற்றிருந்தார். உருவிய வாளுடன் வீரர் பலர் அருகில் நின்றனர். எழுதும் தொழிலினர் பலர் அவர் கூறியவற்றைக் கேட்டு, ஓலைகளில் எழுதிக் கொண்டிருந்தனர். வந்த வீரனை அழைத்துக் கொண்டு வாயில் காவலன் அங்கு வந்து நின்றான். திம்மரசு வீரனைக் கூர்ந்து நோக்கினர்; ஆதனத்திலிருந்து சிறிது எழுந்து, "ஐய! பாண்டிய மன்னரே, வருக! வருக! இவண் அமர்க! இன்று, முன் அறிவியாமலே இங்கு வர நேர்ந்த அபூர்வ சம்பவம் யாதோ? மன்னர்பிரானைக் காணவந்தீரோ?" என்று உபசரித்து விசாரித்தனர்.

மதுரை நகரிலிருந்து இரவோடிரவாய்ப் பிரயாணம் செய்து வந்த வீரனாகிய பாண்டிய மன்னன், அமைச்சர் தலைவரை வணங்கி, "அன்பின் மிக்க அமைச்சப் பெரியீர்! யான் உருமாறி அல்லற்பட்டு வந்திருப்பினும், விரைவிலே என்னை

இன்னான் என அறிந்து கொண்டீர். யான் இப்பொழுது என் விண்ணப்பம் ஒன்றை அரசர் பெருமானிடம் நேரிலே தெரிவிக்க வந்தேன். நீவிரும் உடனிருந்து என் விண்ணப்பத்தைக் கேட்க வேண்டும்'' என்று கூறினன். அது கேட்ட திம்மரசு உடனே எழுந்து, மன்னர் மன்னராகிய கிருஷ்ண தேவ ராயரிடம் பாண்டியனை அழைத்துக்கொண்டு சென்றார்.

அரச மாளிகையின் ஒருபால் உள்ள பெரியதோர் மண்டபத்தில், அன்று தம்மைக் காண வந்த சிற்றரசரோடு அளவளாவியிருந்த கிருஷ்ண தேவராயர், திம்மரசு பாண்டிய மன்னருடன் வருவது கண்டு, அன்பு கலந்த முகமலர்ச்சியோடு வரவேற்றார். பாண்டியன் வணங்கற்குரிய முறைப்படி மன்னர் பெருமானை வணங்கி நின்றான். இருவர்க்கும் அவரவர்க்கேற்ற இருக்கைகளைக் காட்டிய பிறகு, கிருஷ்ண தேவராயர் வந்த மன்னனோடு பேசத் தொடங்கினர்.

சக்கரவர்த்தி:—அமைச்சர் தலைவரே! இவர் பாண்டிய மன்னர் சந்திரசேகரர் அல்லரோ? மிக்க துயருற்ற முகக் குறியுடன் வந்திருக்கின்றாரே. என்ன காரணம் என்று விசாரித்தீரா?

திம்மரசு:—அரசே! அவர் நேரிலே ராஜ ஸந்நிதானத்தில் தெரிவித்தற்குரிய செய்தி ஒன்று உண்டு என்றார். யான் இங்கு அழைத்து வந்தேன்.

சக்கரவர்த்தி:—சந்திரசேகரரே! நீவிர் இங்குத் தெரிவிக்க விரும்பும் செய்தி யாதோ?

பாண்டியன்:—மன்னர் மன்னரே, உலகம் தோன்றிய காலம் முதலாகத் தமிழ் நாட்டில் அரசுரிமை பூண்டு வந்த பாண்டியர் குடியிலே பிறந்த யான், இன்று நாடும் நகரும்

இழந்து, பகலிலே வெளியில் நடத்தற்கும் இயலாத நிலைமையில் இங்கு வந்திருக்கிறேன். முன் ஒரு சந்தர்ப்பத்தில் எங்கள் குடிக்கு நேரிட்ட பேரிடர் நீவிர் அறியாததன்று. வட நாட்டிலிருந்து முகம்மதிய வகுப்பினர் வந்து, எம் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு, எம்மைக் காட்டுக்குத் துரத்தினர். அவர்கள் டில்லி மன்னனாகிய அல்லாவுடீன் என்பான் தூண்டுதலால் மாலிக்காபர் என்ற வீரன் தலைமையில் எம் நாட்டுக்கு வந்து, நகரங்களைப் பாழ்படுத்திக் கோயில்களை இடித்து அழித்து அதிக்கிரமம் செய்தனர். கையிற் கிடைத்த பொருள்களை வாரிக்கொண்டு அவர்கள் போய்விட, என் முன்னோர் திரும்பவும் அரசுரிமையைத் தாங்கினர். சில ஆண்டுகள் கழிந்தபின் மற்றொரு முகமதியர் படை வந்து எம் நாட்டைச் சூறையாடியது. அக்கூட்டத்தின் தலைவன் எம் மரபை அழித்துத் தன் ஆட்சியை நிலை நாட்ட முயன்றான். அம்முகம்மதியர் சிலர் எம்மைக் காடாளச் செய்து, எம் பாண்டிய நாட்டைத் தாமே உரிமை செய்துகொண்டு ஆண்டனர். இத்தகைய வீழ் நிலையில் எம் குடியினர் மயங்கியிருந்த காலத்தே நும் அரச பரம்பரையின் முதல்வராகிய புக்கராயர் குமாரர் கம்பராயர் என்பார் எம் நாட்டுக்கு வந்து, முகமதியரோடு பெரும்போர் புரிந்து, அவர்களை யழித்துத், திரும்பவும் எம் குடியினர் அரசுபெற உதவி புரிந்தார். அன்று முதல் யாங்கள் விஜய நகர மன்னர்க்கு அடங்கிய சிற்றரசராய் வாழ்ந்து வருகின்றோம். எம்குடியினர் என்றும் ஒருவர் செய்த நன்றியை மறக்கும் இயல்பினரா யிருந்ததில்லை. பகைவர் வந்த காலத்தே உதவி புரிந்து எம்மைத் தலைதூக்

கச்செய்த மன்னர் வழியில் வந்த மன்னர் பெருமானே! இன்று யானடைந்த துயரத்தின் காரணத்தை இன்னது என்று கூறுகின்றேன்! செவிசாய்த்தருள்க! நீவிர் விதித்த கப்பத்தைக் கட்டி என்போலவே நுமக்குக்கீழ்ச் சிற்றரசாய்ச் சோழ நாட்டை ஆண்டுவரும் வீரசேகர சோழர் என்னோடு காரணமின்றிப் பகைமை பூண்டு, என்னைப் போர்க்கழைத்தார். குடிப்பழி நேரிடாவண்ணம் யானும்போருக்குச்சென்றேன். அவர் தம் படைச்செருக்காலும் தந்திரத்தாலும் என் படைஞரை சூழ்ச்சியால் வயப்படுத்தி என் நாட்டைக் கைக்கொண்டார். நான் நிற்கநிலையின்றி உடுத்த உடையோடு இங்கு வந்துற்றேன். சோழமன்னர் இப்போர்க்கெழ நியாயமில்லை. என்னிடம் அவர் பகைகொள்ள ஒருவகையிலும் காரணமே இல்லை. அரசரேறே! நுந்தம் நிழலில் அடங்கி வாழும் என்போன்ற சிற்றரசர்க்கு இத்தகைய பரிபவம் ஏற்படுவது நும் பெருமைக்குப் பொருந்துமா? ஆகையால் என் மேலும், என் மரபின் மேலும், என் குடிமக்கள் மேலும் அருள்கூர்ந்து, இங்கிருந்து ஒரு பெரும் படையை அனுப்பி, என் நாட்டை நான் திரும்பவும் பெற்று அரசாள உதவிபுரிய வேண்டுகிறேன். மாப்பெரு மன்னரை வணங்கவைத்த மன்னர் மன்னருக்கு, இச்செயல் மிகவும் எளிதேயாம். ஆயினும், காலம் அறிந்து செய்யும் உதவியாதலால், என் நலம் கருதிற் பெரிதென்றே நான் கூறுவேன்.

சக்கரவர்த்தி:—சந்திரசேகரரே! நும் எண்ணம் நிறைவேறும். மனங்கலங்காதீர்! நாளையேநம்படை இங்கிருந்து நுமக்கு உதவி செய்யப் புறப்படும். நம் படைத்தலைவருள் மிக்க

அனுபவம் படைத்தவரும் நம் அன்புக்குரியவருமாகிய **நாகம நாயக்கர்** அப்படையை நடத்தி வருவார்.

திம்மரசு:—அரசர்பிரானே! இங்கே இன்னொரு விஷயம் நினைவூட்ட விரும்புகிறேன். வீரசேகர சோழர் சென்ற ஆண்டில் நம் அரசுக்குத் தருதற்குரிய கப்பத்தை இன்னும் கொடுத்தனுப்பவில்லை. இதைப்பற்றி என்ன செய்வதென்று நேற்றே யோசனை செய்தோம். அவர்க்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பலாம் எனவும் தீர்மானித்தோம். இப்படி வழிமுறை அறியாது செல்லும் அம்மன்னரைக் கண்டித்து ஒழுங்குபடுத்துவது நம் கடமையேயாகும். நாகம நாயக்கர் தென்னாட்டுக்குச் செல்லத்தக்க படைத் தலைவரே யென்பதில் ஒரு சிறிதும் சந்தேகமில்லை. அவர் குமாரன் விசுவநாதன் இங்கே ராஜ ஸந்நிதானத்திலேயே இருக்கலாம்.

சக்கரவர்த்தி:—ஆம்! அதனை மறந்தேன்! நாகம நாயக்கர், காசி யாத்திரை செய்து விசுவநாதர் அனுக்கிரகத்தாற் பெற்ற அச் செல்வமகன் விசுவநாதன், நம்மிடம் மிக்க அபிமானம் உடையனாய் நமக்கு வலதுகரம்போல் உதவுகின்றான். சமீபகாலத்தில் நடந்த போர்களில் அவன் நமக்கு மிகவும் உதவியாய் இருந்திருக்கிறான். அவன் இங்கேயே இருக்கலாம். அவன் தகப்பனார் நாகம நாயக்கர் படைத்தலைவராய்த் தென்னாடு போய் வரவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கலாம். பாண்டிய மன்னரே! இனி நீர் சில நாட்கள் இங்கேயே இருக்கலாம். படைஞர் கூடவே நும் நாட்டுக்குச் செல்ல விரும்புவீராயின், எம்மிடம் விடை பெற்றுச் செல்வீர் என்று நம்புகின்றோம்.

பாண்டியன்:—அரசர்க்கரசே! என் வேண்டுகோள் செவிப்படு முன்னே எனக்கு உதவிபுரியத் துணிந்து, உரிய ஆணை பிறப்பித்த நும் அருளின் திறத்தை நான் எங்ஙனம் பாராட்டுவேன்! நுமது இயல்பான உதார குணத்தை யான் புகழத்துணிவது என் அறியாமையையே விளக்கும்.

திம்மரசு:—இனி யாம் விடை பெறுவோம்!

பின்பு பாண்டியன் அரசரை வணங்கி விடைபெற்று அமைச்சருடன் அவரது காரியாலயம் வந்து தனக்கென அமைந்த விடுதிக்குச் சென்றான். அமைச்சர் அப்பொழுதே நாகம நாயக்கர்க்கு அரசராணையைத் தெரிவித்தனர். போர் என்று கேட்டவளவிலே பூரிக்கும் தோள்களையுடைய அவ் வீரர் தலைவரும், அரசராணையைக் கேட்டுப் பெரு மகிழ்ச்சி கொண்டு புறப்படச் சித்தமாயினர்.

மறுநாட் காலையில்,பாண்டியனும் நாகமநாயக்கரும் அரச ரிடம் விடை பெற்றுக்கொண்டு பெரும்படையோடு தென் னாடு நோக்கிப் புறப்பட்டனர். நாடிழந்து தனியனாய்ப் புரவி மீது ஏறிப் புறப்பட்டுச் சென்ற பாண்டியன் சந்திரசேகரன், பெரும்படையோடு மனத்துணிவு பெற்றுப் பதினைந்து தினங் களில் சோழநாடு கடந்து, மதுரைக் கருகிலுள்ள ஓரிடத்திற்கு வந்து சேர்ந்தனர். நாகம நாயக்கர் வீரசேகர சோழனுக்குத் தூது அனுப்பினர். அவன் போர்க்குத் துணிந்து புறம் போந் தான். வடநாட்டுப் படைஞரும் மதுரை நகர்க்குப் புறத்தே யிருந்ததோர் வெளிநிலத்திற் போர்க்களம் அமைத்துப் போர் செய்யத் தொடங்கினர். வீரசேகரன் தன் பெயர்க்கேற்பச் சிறந்த வீரனே யாகையால், தன் படைஞரை முறைப்படி வகுத்து நிறுத்திப் போர் புரிந்தான். அனுபவமிக்க படைவீர ராகிய வட நாட்டுப் படைஞர் முன், சோழ நாட்டு வீரர் நிற்

றற்கியலாது பின்னிடைந்தனர். வீரசேகரன் வீரசொர்க்கம் புக்கனன்.

சந்திரசேகர பாண்டியன் நாகம நாயக்கர் உதவியால் முன்னே தான் இழந்த அரசைப் பெற்றான். சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் பிற தென்னாடுகளையும் மேற்பார்க்கும் விஜயநகர அதிகாரியாக நாகம நாயக்கர் இருந்து வந்தார். பாண்டியன் தன் குடி மக்களிடமும் தனக்குக் கீழடங்கிய குறுநிலத் தலைவரிடமும் வரிகளைச் சரிவர வசூலிக்க அறியாதிருப்பதை நாகம நாயக்கர் அறிந்தார். அதனால் அவர் நாடெங்கும் சுற்றி வந்து, நாட்டின் உண்மை நிலையை உணர்ந்து, மக்களை நன்கு வாழுமாறு செய்து, தக்க அரசிறையைப் பெற்று அரச நிதிச்சாலையை வளம்படுத்தினர். நாடெங்கும் அமைதி நிலவியது.

நாகம நாயக்கர் தம் முயற்சியால் நாடு நன்னிலை பெற்றதை விஜயநகர வேந்தர் பெருமான் அறியுமாறு செய்தார். பாண்டியன் அவர் கொடுக்கும் உபகாரத் திரவியம் பெற்று அமைதியோடு வாழ்ந்து வருவதையும் தெரிவித்தார். கிருஷ்ண தேவராயர் இந்நிலைமையைப் பற்றிக் கேள்வியுற்று மகிழ்ந்தார். இவ்வாறு சில வருஷங்கள் சென்றன. தமிழ்நாடு முழுவதும் விஜயநகர மன்னர் ஆட்சிக் கடங்கிச் செழிப்புற்று ஓங்கியிருந்தது. நாட்டின் செல்வ வளர்ச்சியைக் கண்ட பாண்டியன் முன்போலவே நாடாள ஆசைகொண்டான். நாகம நாயக்கர் அவனிடம் நாட்டை ஒப்புவிப்பதால் நன்மை விளையாது என்று உணர்ந்து, கிருஷ்ண தேவராயர்க்குப் பிறகு விஜயநகர சக்கரவர்த்தியாகி ஆண்டுவந்த அச்சுத தேவராயர்க்கு நீண்டதோர் கடிதம் எழுதித், தம் அன்புக்குரிய இராமபத்திர நாயக்கரையும் அங்கு அனுப்பியிருந்தார். அதனையறிந்த

பாண்டியனும் தன் வழக்கைக்கூற விஜயநகரம் சென்றான். பாண்டிய நாட்டில் குடிமக்கள் பாண்டிய மன்னனை இன்னான் என அறியாமலே வாழ்ந்து வந்தனர்.

இரண்டாவது அத்தியாயம்
தந்தையும் மைந்தனும்

சந்திரசேகர பாண்டியன், அச்சுத தேவராயரைக் கண்டு தன் குறையை விண்ணப்பித்துக் கொள்ள விஜய நகரம் வந்தடைந்தான். அச்சுத தேவராயர் அமைச்சர், படைத் தலைவர். வீரர் முதலானோர் சூழ்ந்திருக்க அரசவைக்கண் அமர்ந்திருந்தனர். அரசவையடைந்த பாண்டியன், "அரசர்க்கரசே! யான் என் அரசைப் பெற்றும் பெறாதவனாயினேன்! இங்கிருந்து எனக்கு உதவி செய்யவந்த நாகம நாயக்கர், என்னை அரசாள அனுமதியாமல் அடிமையினும் கேவலமாக நடத்தி வருகின்றார்! நான் கூறுவதன் உண்மையைத் தக்கவர்களைக் கொண்டு விசாரித்து எனக்கு ந்யாயம் பிறப்பிக்க வேண்டுகின்றேன்!" என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

அச்சுத தேவராயர்:—என்ன! பாண்டிய மன்னரே! இன்னும் நீர் நும் அரசைப் பெறவில்லையா? நாகம நாயக்கர் நுமக்குப்பகைவராக மாறிவிட்டாரா? அமைச்சர்களே! வீரர்களே! இந்த அதிக்கிரமம் எந்நாட்டில் நடக்கும்?

அமைச்சர்:—அரசர்பிரானே! நேற்று இங்கு நாகம நாயக்கரிடமிருந்து ஒரு கடிதம் வந்துள்ளது. அவர் நண்பராகிய இராமபத்திர நாயக்கர் என்றவோர் வீரரும் வந்துளார். அவரை விசாரித்தால் உண்மை விளங்கும்.

அச்சுத தேவராயர்:—அமைச்சரே! முதலில் அக்கடிதத்தை வாசிக்கச் செய்யும்! கேட்போம்! ஒருசேவகனை அனுப்பி

இராமபத்திர நாயக்கரை அழைத்துவரச் சொல்லும்! அவர் சொல்வதையும் கேட்போம்!

அமைச்சர்:— அரசே! நாகமர் கடிதம் இதோ இருக்கிறது!

விஜய நகரச் சக்கரவர்த்தி அவர்கள் சமுகங்களுக்குத் தென்னாட்டுவிசாரணை அதிகாரி நாகமநாயக்கர் விஞ்ஞாபனம்:

இறைவன் அருளால் இங்குக் குடிகள் அனைவரும் குறையின்றி வாழ்கின்றனர். இங்குப் பாண்டிய நாடு, சென்ற இரண்டு வருஷங்களாக அமைதி பெற்றிருக்கிறது. குடிமக்கள் அரசாங்கத்துக்குச் செலுத்தற்குரிய இறைப்பொருளை ஒழுங்காகச் செலுத்திவருகின்றனர்; இந்நாடுகளிலிருந்து சென்ற சிலவருஷங்களாகவிஜயநகரத்துக்கு வருதற்குரிய கப்பம் கிரமமாகச் செலுத்தப்பட்டு வருகிறது. தான்றோன்றித் தலைவர்களாய் இருந்த சிலர் அடங்கிவிட்டனர். இப்படிநாடு செழித்து நன்றாய் இருப்பதை அறிந்த பாண்டியர், இப்பொழுது நாட்டைத் தம்மிடமே ஒப்புவிக்கும்படி வற்புறுத்துகிறார். அவரிடம் நாட்டை ஒப்புக்கொடுத்தற்கு இரண்டு முக்கிய ஆக்ஷேபங்கள் உள்ளன. அவர் அரசு பூண்டிருந்த காலத்தில், நாடு இருந்த நிலைமையை நாம் அறிவோம். குடிமக்கள் அவரது பலக்குறைவை அறிந்து, வரிகொடுக்கவும் மறுத்துவிடுவர். பிறகு நமது சமஸ்தானத்துக்கு இங்கிருந்து ஒரு செப்புக்காசும் வர வழி இருக்காது. அவர்க்கு ஞாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் பஞ்சபாண்டியர்என்றபாண்டியர் ஐவர்இங்கேதென்கோடியில் இருக்கின்றனர். அவ்வைவரும்நாட்டைக்கைக்கொள்ள எப்பொழுது சமயம்வாய்க்கும் என்றுஎதிர்பார்த்திருக்

கின்றனர். நம் அதிகாரத்துக்கும் படைப் பெருக்குக்கும் அஞ்சி அடங்கியிருக்கும் அவ்வைவரிடமிருந்து சந்திர சேகரரால் நாட்டைக் காத்துக்கொள்ள இயலாது என்பதைச் சென்ற பல வருஷங்களாக அவரிடம் நெருங்கிப் பழகி யறிந்திருக்கும் நான் உறுதியாய்க் கூறுவேன். இப்பொழுது அவர் நேரில் வந்து தம் வழக்கைத் தங்களிடம் விண்ணப்பிக்க வந்திருக்கிறார் என்று அறிகிறேன். நான் செய்திருக்கும் செய்கைகளில், தங்கள் மூதாதையர் மிக்க சிரமப்பட்டு ஸ்தாபித்த ஹிந்து ஸாம்ராஜ்யத்தின் க்ஷேமத்தையே மிகவும் முக்கியமான கருத்தாகக் கொண்டிருக்கின்றேன் என்பதை மனப் பூர்ணமாகக் கூறுகிறேன். இவ்விஷயத்தில் என் சுயநலங் கருதி நானே அதிகாரம் வகிக்க வேண்டும் என்ற இச்சையால், இங்கு நான் எதுவும் செய்யவில்லையென்று நாம் அனைவரும் வணங்கும் தெய்வத்தின் பாதமே சாக்ஷியாகக் கூறுகிறேன். நான் கூறியவற்றிலே தங்களுக்கு அபிப்பிராய பேதம் இருப்பின், இக்கடிதத்துடன் ராஜ ஸந்நிதானத்துக்கு வந்திருக்கும் என் நண்பர் இராமபத்திர நாயக்கரை நேரில் விசாரித்து, உண்மை உணர்ந்து நியாயமான முடிவுகூறி ஆணை பிறப்பித்தருள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள ஊழியன்,
நாகம நாயக்கர்.

அமைச்சர், கடிதத்தைப் படித்து முடித்தவுடன் இராமபத்திர நாயகர் அரசரை வணங்கியெழுந்து நின்றார். அவர் “விஜயநகர வேந்தர் பிரானே! நாகம நாயக்கர் ஸத்திய ஸந்தர்; தர்ம முணர்ந்தவர்; யஜமான பக்தியில் தமக்கிணை எவரும்

இல்லாதவர். பாண்டியரிடம் ராஜ்யத்தை ஒப்பிக்கவே, முத லில் எண்ணியிருந்தார். பிறகு உள்ள நிலைமையை நன்கு உணர்ந்ததும், ராஜ்யத்தின் நன்மையைக் கருதி, இந்தத் தீர்மா னம் செய்திருக்கிறார். அவர் கடிதத்தில் தெரிவித்திருக்கும் செய்தியெல்லாம் உண்மையே யென்று யான் உறுதியாய்க் கூறுகிறேன்'' என்றார்.

அரசர்பிரான் திரும்பவும் பாண்டியர் முகத்தைப் பார்த் தார். பாண்டியர் உடனே எழுந்து நின்று கைகூப்பி வணங்கி, அரசரேறே! இங்கு யான் ஒன்று விண்ணப்பிக்க விரும்பு கிறேன். முன்னாளிலே பாண்டியர் குடியிற் பிறந்த மன்னர்கள் பாண்டிய நாட்டையே யன்றி, வடவிமயமுதல் தென் குமரி வரை ஒரு குடைக்கீழ் ஆண்டு வந்ததாகப் பண்டை வரலாறு கள் உண்டு. அத்தகைய மன்னர் பெருமக்கள் குடியிற் பிறந்த யான், எமது சிறிய பாண்டிய நாட்டாரை அடக்கி ஆளும் ஆற்றலற்றவனா யிருப்பேனா? முகமதியர் படை யெடுக்கு முன்பு, என் முன்னோர் குடி மக்களிடம் முறையே அரசிறை பெற்று அரசாண்டிருக்க வில்லையா? கம்பராயர் எம் முன்னோராகிய சோமசேகரரை அரசராக்கிய போது, அவர் நாடாளத் தகுதியுடையார் என்று துணிந்து தானே செய்திருப்பர்? வீரசேகர சோழர் போர் புரிய வரு தற்கு முந்திய நாள் வரையில், நான் முறையே தங்களுக்குரிய கப்பத்தை அனுப்பி வரவில்லையா? என் ஞாதியராகிய ஐவர் பாண்டியர் திருநெல்வேலிச் சீமையில் வெகுநாளாக இருக் கின்றனர். அவர் இன்று நேற்று அங்குத் தோன்றியவரல்லர். முன்னெல்லாம் என் அரசைக் கைக்கொள்ளத் துணியா திருந்த அவ்வைவர், இப்பொழுது மாத்திரம் என்னைப் பகைத்து எதிர்த்து அரசைக் கவர்ந்துகொள்ள வந்து

விடுவர் என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்? செல்வம் செழித்து விளங்கும் என் நாட்டை என்னிடம் கையளிக்காமல் இருத்தற்குக் காரணம், நாகம நாயக்கர் மனமே அறியும். அவர் பொருளாசையாலும், நாடு ஆளவேண்டும் என்ற அதிகார இச்சையாலும், இவ்விதம் செய்கின்றார் என்று நான் கூறவேணுகில், அநேக ஆண்டுகளாகத்தங்கள் அரச பரம்பரையார் துநம்பிக்கைக்குப் பாத்திரராயிருந்த அவரிடம், நான்புதுமையாக ஒரு குற்றத்தை யேற்றியதாகத் தங்களுக்குத் தோன்றும். என்னிடம் நாட்டை அளிக்காமலே, நான் நன்றாய் ஆட்சிபுரிய இயலாதவன் என்று கூறுவது எனக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஆகையால் மன்னர் மன்ன! தங்கள் முன்னோர், எங்கள் முன்னோர்க்கும் எனக்கும் செய்த உதவி என்றைப்பாராட்டப் படுவதுபோலத், தங்கள் செயலும் பாராட்டப்படும்படியாக நியாயமான ஆணை பிறப்பிக்க வேண்டுகிறேன்'' என்று கூறி முடித்தான்.

பாண்டியர் பேச்சைக்கேட்ட அச்சுததேவராயர், இராமபத்திர நாயக்கரைப் பார்த்து, "இருவர் வாய்மொழியும் கேட்டறிந்தேன். இனி நீர் நுமது விடுதிக்குச் செல்லலாம்'' என்று கூறினர். இராமபத்திர நாயக்கர், அரசர் மனநிலையை உணர்ந்துகொண்டு உடனே விடைபெற்று மதுரையை நோக்கிப் புறப்பட்டனர்.

வேந்தர்பிரான், அங்கிருந்த சபையோரை நோக்கி, "வீரர்களே! அறிஞர்களே! அரசைப் பாண்டியரிடம் அளிக்க வேண்டும் என்று நாம் ஆணை தந்தனுப்பியும், அதனை அவமதித்து இங்ஙனம் நிருபம் போக்கிய நாகம நாயக்கரை எவ்வாறு தண்டிக்கலாம்? அவர் நம் நாட்டிலே நல்ல மதிப்போடிருந்தவர் என்பது உண்மையே. இவ்வரசுக்கு அவராற்

பெருத்த நன்மைகள் விளைந்துள என்பதும் உண்மையே. ஆயினும், அவர் எமது ஆணையை அவமதித்த குற்றத்துக்கு ஆளாயிருக்கின்றார் என்பதை நீங்கள் அறியவேண்டும்! இந் நிலைமையில் அவரைச் சாம தான பேத தண்டம் என்ற நால் வகை உபாயங்களாலும் வசப்படுத்த வல்லவர் இங்கு யாரே னும் உளரா? அவர் செய்தது குற்றம் என்று அவரே அறியு மாறு செய்யயார் முன் வருபவர்? அவர் தம் குற்றத்தை அறி யாது போர்க்கு எதிர்த்து நிற்பினும், நம் அரசின் பெருமை யைக் காக்கும் வண்ணம் அவரோடு போர் புரிந்து வெல்லும் மனவலி படைத்தோர் இங்கு ஒருவரும் இலரா? பாண்டியர் திரும்பவும் அரசு பெறவேண்டும் என்பதே எமது தீர்மானம்! ஆகையால், அதனை நிறைவேற்ற வல்லவர் இங்கு ஒருவ ரேனும் உளரா என அறிய விரும்புகிறேன்" என்று கோபத் துடன் கூறினர்.

அது கேட்ட அவைக்களத்தார் எல்லாரும் ஒன்றும் பேச அறியாது மௌனம் சாதித்தனர். நாகம நாயக்கர் குமாரனும் முன்னே கிருஷ்ணதேவராயரது அன்பைப் பூரண மாகப் பெற்றிருந்தவனுமாகிய விசுவநாதன் எழுந்து தலை வணங்கி நின்றான். அச்சுதர் அவனைப் பார்த்தார். தம் கண் களையே நம்பாமல் திரும்பவும் கவனித்துப் பார்த்துவிட்டு, "யார் அது, விசுவநாதனா? நீ உன் தந்தையோடு போர் புரியத் துணிந்தா எழுந்தாய்? அன்றி, இங்கு உன் தந்தையின் சார் பாக மன்றாட எழுந்தாயா? இங்கிருந்து பெரும் படையோடு சென்று நீயும் அவருடன் சேர்ந்துகொள்ளலாம் என்று எண்ணுகின்றாயா?" என்று கோபத்தோடு கேட்டார்.

விசுவநாதன் கூப்பிய கரத்தோடு நின்றபடியே, "அரசர் பிரானே! எங்கள் குடியில் இந்நாள்வரையில் ராஜத்துரோகிகள்

எவரும் முளைத்ததில்லை. எங்களால் இயன்றவளவு இந் நாட்டுக்கும் அரசுக்கும் பணிபுரிந்து வருகின்றோம். உடம்பில் உயிருள்ளளவும் இவ்வரசின் பொருட்டு உழைக்கவே சித்தமாயிருக்கிறோம். அரசர் பிறப்பிக்கும் ஆணை எங்கட்குத் தெய்வத் திருவருளால் எழுந்த வேத வாக்கேயாகும். நான் என் தந்தையோடு போர் புரிவேனோ, புரியேனோ என்று இங்கு எவரும் ஐயுறவேண்டா. எங்கள் குடியினர்க்கு அரசரே தந்தையும் தாயும் தெய்வமுமாவர்! அரசராணைக்கு மாறாக நடக்கும்படி அன்னையும் தந்தையும் தூண்டுவராயினும் அவர் சொற்கேளேன்! இது சத்தியம்!" என்றான்.

அரசர், அவன் பேசிய பேச்சுக்களால், அவன் உள்ளக் கருத்தை நன்குணர்ந்து அதிசயித்து, "விசுவநாத! உன் குணத்தை யான் அறிவேன். பிறரும் அறிதற் பொருட்டே இவ்வாறு உன்னுடன் பேசினேன்" என்றார். அதற்கு மறுமொழியாக, விசுவநாதன், "திருவுடை மன்ன! யான் தங்கள் உப்பை உண்டுவரும் அடிமை! என்னைத் தாங்கள் எப்படி வேண்டுமாயினும் ஏவலாம்! தங்கள் ஏவலை நான் தலையில் தாங்குதலால் என் தந்தைக்கே பகையாய் எதிர்த்து நிற்க நேரிடினும் பின்னிடையேன்! இவ்வுறுதியுரைக்கு மாறாக நான் நடப்பேன் என்று என் பகைவனும் சொல்லத் துணியான்!" என்று கூறி வணங்கினன்.

பிறகு அரசர் அவனை மிகவும் பாராட்டிப் பாண்டிய மன்னனோடு மதுரை செல்லுமாறு கூறினர். பெரும் படையொன்றை அழைத்துக்கொண்டு அரசராணைப்படியே விசுவநாதன் பாண்டிய மன்னரோடு மதுரை வந்தடைந்தனன். அடைந்தவன், உடனே தன் தந்தைக்கு ஒரு நிருபம் அனுப்பினன். அந்நிருபம் வருமாறு:

" அன்புமிக்க தந்தையே,

அரசராணையால், விஜயநகர சேனையுடன் வந்திருக்கின்றேன். பாண்டிய மன்னரிடம் அரசை அளித்து நாட்டுக்குத் திரும்பவேண்டும் என்பது தங்களுக்கு அரசர் பிரான் இட்ட ஆணையாகும். தாங்கள் அவ்வாணையின்படி நடவாமல் முன்போலவே, இந்நாட்டு அரசப் பொறுப்பை வகித்துவரவே விருப்பம் கொண்டிருப்பீர்களாயின், நான் அரசராணையாற் போர்புரிந்து தங்களைச் சிறை செய்ய நேரிடும் என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள,
விசுவநாதன் "

என்றுஎழுதியிருந்தது. இந்நிருபத்தைக்கண்ட நாகம நாயக்கர் பெரிதும் மனம் புழுங்கினர். தம் படைகளைத் திரட்டிப் போர் புரியவே துணிந்தார். விஜய நகரச் சக்கரவர்த்திகளின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, முன்னாளிலே அவர்கள் புரிந்த பெரும் போர்களில் தளகர்த்தராய் நின்று, ஹிந்து ஸாம்ராஜ்யாதிபதிக்கு வெற்றி தேடிக்கொடுத்த வீரசிகாமணியாகிய நாகம நாயக்கர், தம் இயற்கைக்கு மாறாகத் தம்மரசர் படையையே எதிர்த்து எழுந்தார். அரசர் படையை நடத்திவந்த வீரன் தம் மகனே என்பதை அறிந்தும், அவர் மனவுறுதி மாறுபடவில்லை. அவர் எழுதிய கடிதத்திற் காட்டியிருந்த காரணங்கள், பாண்டிய மன்னரிடம் அரசையளிக்க வரும் உதவி எதுவாயினும், எதிர்த்து நிற்கலாம் எனத் தூண்டின.

தந்தைக்கும் மைந்தனுக்கும் போர் தொடங்கியது. புராண இதிகாசங்களில் எங்கேனும் இதற்கு ஒப்பாகச் சொல்லத்தக்க போர் நிகழ்ந்திருக்குமோ என்று நாம் தேடிப் பார்த்தும் ஒன்றும் அகப்படவில்லை. தந்தையும் நாட்டின் நலத்தையும் அரசின் மேன்மையையும் பெரிதாய்க் கருதியே போர்க்குப் புறப்பட்டார். மைந்தனும் அரசர் ஆணை பெற்ற உரிமையால், நாட்டின் நலத்துக்குதவும் அரசர் பணி புரியும் பொருட்டே போர்க்கு வந்தான். இருவர்க்கும் இடையில் தன்னல வுணர்ச்சியும் உள்ளப்பகையும் சிறிதளவும் இல்லை யென்று துணிந்து கூறலாம். உள்ளத்தில் ஒருவர்க்கொருவர் பகையின்றியே போர்புரிதல் உண்டோ என்றால், அவ்விருவர் கடமைகளின் நிலைமை அப்படி அமைந்ததால் உண்டாயிற்று என்று தான் கூறவேண்டும்.

வில்லாளிகளிற் சிறந்த பரசுராமர் அம்பையின் பொருட்டுப் பீஷ்மரோடு பெரும் போர் புரிந்தபோது, மனத்திற் சிறிதளவும் பகையுணர்ச்சி யின்றியே மிக ஆச்சரியமான போர்புரிந்தார் என்பது பாரத வரலாறாகும். துரோணர் தம் செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் பொருட்டு அர்ஜுனனுடன் போர்புரிந்த காலங்களிலெல்லாம் அவனது, வணக்கத்தை ஏற்றுக்கொண்டு முகமலர்ச்சியோடு தம் கடமையை நிறைவேற்ற வேண்டியே போர் புரிந்தார் என்று கேள்வியுறுகிறோம். ஆசிரிய மாணவர் தந்தையு மைந்தரும் போன்ற உறவே உடையராகையால், இவ்வொற்றுமை கருதின், தமிழ் நாட்டிலே விசுவநாதனும் அவன் தந்தையும் புரிந்த போர்த்திறத்துக்கு இவை ஒருவாறு நிகராகலாம். மனத்தின்கண் பகையின்றித் தன்னலவுணர்ச்சி சிறிதளவும் இல்லாது போர்புரிந்து கடமையை நிறைவேற்ற

லாம் என்றற்கு, இப்பெரியோரெல்லாம் உரிய சான்றாக விளங்குகின்றனர்.

தந்தையும் மைந்தனும் புரியும் பெரும் போர் தன் பொருட்டாகவே நிகழ்ந்ததாகையால், பாண்டியன் படையெடாமல் நடுவில் நின்று பார்த்துக்கொண்டிருந்தான். விஜயநகரப் படைஞர் மிக்க போர்ப்பயிற்சி பெற்ற பெருங்குழுவினரா யிருந்தனர். பாண்டிய நாட்டுப் படைஞரோ, விஜயநகரத்துப் பெருந் தளகர்த்தராயிருந்த நாகமநாயக்கராற் பயிற்சி செய்விக்கப்பெற்ற உரம்பெற்ற பெருந் தொகையினராவர். படைகளை நடத்தும்தலைவர்களோ அர்ஜுனனையும் அபிமன்யுவையும் போன்ற ஆற்றலுடையார். இந்நிலைமையில் போரின் சிறப்பை விவரிக்கவும் வேண்டுமோ? போர் மிகவும் கடுமையாக நிகழ்ந்தது. இருதிறத்துப் படைஞரிலும் சிலர் விண்ணகம் புகுந்தனர்.

தலைவர் இருவர்க்கும் நாட்டம் ஒன்றேயாய் இருந்தமையால், படைஞர் வீணே அழிவது வருத்தம் விளைத்தது. அதனால் அவர்களே ஒருவரை யொருவர் எதிர்த்தனர். விசுவநாதன் இந்த சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்திருந்தானாகையால், தந்தைக்கும் தனக்கும் அதிக சிரமம் உண்டாகாதவாறு சிறிது நேரம் அற்புதமான போர்புரிந்து, அவர் எதிர்பாராத சமயத்தில் திடீரென்று அவரை நிராயுத பாணியாக்கி,'வேந்தராணை' என்று கூறிச் சிறைசெய்தான். அரசர் ஆணைக்குக் கீழ்ப்படிதலையே தம் உடம்பினுள் ஊறிய உயிருணர்ச்சியாய்க் கொண்ட நாகமர், இந்நிலை நேர்ந்ததும் ஒன்றும் செய்ய வியலாமல் தலைவணங்கி மௌனஞ் சாதித்து நின்றார்.

விசுவநாதன் உடனே அவரை உரிய மரியாதைகளோடு தன் பாசறைக்கு அழைத்துச் சென்றான். அங்கு அவரை

ஒரு உயர்ந்த இருக்கையில் அமர்த்தி அன்புடன் வணங்கினன். பின்பு, "எந்தையே! அரசர்பிரானுக்கு நீவிர் எழுதியனுப்பியிருந்த கடிதம், அங்கிருந்த அமைச்சர், வீரர், பிரபுக்கள் முதலிய பலராலும் 'தகும், தகும்' என ஏற்றுக் கொள்ளப்பட்டது. எல்லோர் எண்ணமும் ஒன்றே என்பதை நான் அவரவர் முகக்குறிகளால் அறிந்தேன். ஆயினும் அரசர்பிரான் தம் முன்னோர் பாண்டியர்க்குக் கொடுத்த வாக்குப் பொய் படலாமா என்ற எண்ணத்தாற் சீற்றங் கொண்டனர். அரசர் ஆணைக்கு எதிர்மொழி கூற நமக்கு ஆற்றல் உண்டா? உங்களை எதிர்த்துவர எவரேனும் உளரோ என்று அரச சபையில் அரசர்பிரானே கேட்ட காலத்தில் எவரும் எழுந்து முன்வரவில்லை. அது அங்குளார் அனைவர்க்கும் உங்கள் மீதுள்ள அபிமானத்தை விளக்கவில்லையா? நீங்கள் செய்த செயல் தவறு என்று அவர்களுள் ஒருவரும் கருதவில்லையென்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். வேறு எவரும் இப்பணிக்கு வராமல் நான் வர நேரிட்டதும், இன்று நாம் நிகழ்த்திய போர் இவ்வாறு நிறைவேறியதும் இறைவனருளாலேயேயாம்" என்றான்.

அதனைக் கேட்ட நாகம நாயக்கர், "குழந்தாய், நீ உன் கடமையைச் செய்தாய். நான் என் கடமையென்று கருதியதைச் செய்தேன். எவர் வரினும் அரசர் ஆணையை மதிக்க வேண்டுவது என் கடமையன்றோ? திம்மரசு நீங்கிய பிறகு விஜயநகரத்தில் அரசர்க்கு உண்மையைத் தைரியமாய் எடுத்துக் கூறும் அமைச்சரே இல்லாமற் போயினர். என் கடிதத்தை அரசர் நன்கு மதியாமையும், இராமபத்திர நாயக்கர் விண்ணப்பிக்க விரும்பியதைக் கூற இடம் தராமையும் என் மனத்தை மிகவும் புண்படுத்தின.

"அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

என்ற மெய்ம்மொழி பொய்படுமோ? நரசிம்ம தேவர், நரச நாயக்கர், கிருஷ்ண தேவராயர் என்ற மன்னர் பெருமக்கள் மூவரிடமும் நன்கு பணிபுரிந்து நற்பெயர் பெற்ற எனக்கு, இன்று அவ்வரச பரம்பரையாரிடமே சிறையிருக்கும் பதவி கிடைத்தது. இன்று நீ பாண்டியரிடம் அரசைக் கொடுப்பினும் உன் உதவியின்றி அவரால் அரசாள இயலாது. அவரும் என்னைப்போலவே வயதின் மிகுந்து தளர்ந்த பருவம் அடைந்து வருகிறார். நான் முன் கூறிய பாண்டியர் ஐவரும் இனி என்ன செய்வரோ! பாண்டியர்க்கு நன்மை செய்ய முன்வந்த நம் அரசர், தமக்கு வரும் பொருள் வருவாயை அடைத்துவிட்டார் என்றே நான் கூறுவேன். இனி எனக்கு அதைப்பற்றி என்ன கவலை? என் கடமையை நான் நிறைவேற்றியாயிற்று. உனக்கு அரசர் இட்ட ஆணைக்கிணங்க நீ வேண்டுவன செய்க" என்றார்.

விசுவநாதன், "தந்தையே உங்கள் கருத்தை யெல்லாம் அறிவேன். இனி அரசர்பிரானிடம் உங்களைக் கொண்டு போய்ச் சேர்க்கும் பொறுப்பு என்னுடையதாகும். நம் அரசர் பிரான் பாண்டியர் பேசிய சொற்களைக் கேட்டு உங்கள்மீது பெருஞ் சீற்றங் கொண்டார். ஆயினும் நீங்களே நேரில் வந்து சொல்லற்குரியவற்றைச் சொல்லும்போது பொறுத்தருள்புரிவர். நானும் அரசராணைப்படி என் கடமையை நிறைவேற்றியதற்குரிய சிறப்புப் பெறவேண்டும் அன்றோ? நான் மதுரை நகர்க்குட் சென்று பாண்டியரிடம் அரசைக் கையளித்து அவர்க்கு மகுடாபிஷேகம் செய்வித்து வருகிறேன். வரும் வரை நீங்கள் இங்கேயே இருக்க வேண்டுகிறேன். நாம் இரு

வரும் நேரிலே விஜயநகரம் சென்று அரசரைப் பணிவோம்'' என்று கூறி வணங்கினன்.

நாகம நாயக்கர் தம் புத்திர ரத்னத்தின் கடமையுணர்ச்சியைக்கண்டு மகிழ்ச்சி பூத்து, "குழந்தாய், நீ விரும்பிய வண்ணம் செய்க. என்னைப்பற்றிய கவலை உனக்குச் சிறிதும் வேண்டாம். புகழ் மிகப் பெற்று வாழ்ந்த நாட்டிலே, இகழ்ச்சி பெற்றுச் சிறையி லிருப்பதைக் காட்டிலும் இறப்பதே சிறப்பென எண்ணுகிறேன். இப்போரில் நின் கையால் இறந்திருப்பேனாயின் எனக்கு அது மனமகிழ்ச்சியையே விளைத்திருக்கும். இனி என்ன ? நடைப்பிணமாகவே உலகில் வாழவேண்டியவனாயினேன். நான் பாண்டிய நாட்டுள் இனி இப்பிறப்பிற் கால் வையேன் என்பது உறுதி. பாண்டியர் நினைத்ததை நிறைவேற்றி விட்டார். அவர் சோழனிடம் போராடி நன்மை விளைத்த என்னைப் பகைவனென்றே கருதுவாராயின் அஃது என் குற்றமாகாது. இனி நீ போய் வருக'' என்று கூறினர்.

விசுவநாதன், "தந்தையே, அரசர் ஆணையே நம்மை இவ்வண்ணம் பந்திக்கிறது. தங்கள் உயிரும் தங்கட்கு உரிமைப் பொருளன்று. உடலும் உயிரும் அரசருக்கென்றே அர்ப்பணம் செய்த தங்களுக்கு நான் இது கூறவேண்டுமா ? பாண்டியர்க்கு வேண்டுவன செய்து வருகிறேன். வரும் வரையில் இங்கேயே இருக்க வேண்டுகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டான்.

மூன்றாவது அத்தியாயம்

சந்திரசேகரரும் விசுவநாதனும்

மதுரை நகர மாந்தர் போரினால் விளைந்த விளைவை அறிந்தனர். தம்மை நன்கு அரசுபுரிந்து செல்வ வாழ்வு பெறச் செய்த நாகம நாயக்கர் சிறைப்பட்டார் என்பதை உணர்ந்தனர். சென்ற சில ஆண்டுகளாகப் பெயரளவிற் பாண்டிய மன்னனாயிருந்த தம் அரசன் முடிசூடும் நிலைமையில் இருப்பதையும், விசுவநாதன் முடிசூட்ட வருவதையும் கேள்வியுற்றனர். பாண்டியர் மரபினர் ஆட்சிபுரிதல் தகும் என்ற கொள்கையுடையார் பலர் கூடினர். அறிவிலும் வயதிலும் முதியோர் பலர் திரண்டனர். அரசராக வரும் சந்திரசேகர பாண்டியரை எதிர்கொள்ளத் தீர்மானித்தனர். அந்தணர் சிலர் பூரண கலசங்கள் ஏந்தினர். புலவர் சிலர் பூங்கொத்துக்கள் ஏந்தினர். அனைவரும் நகரத்தின் அரணுக்குப் புறத்தே வந்து அரசனை எதிர்கொள்வாராயினர்.

உதய சூரியனைத் தரிசனம் செய்து காலைக்கடன்களை நிறைவேற்றிக், கடவுளைப் போற்றிப் பாண்டிய மன்னரும் விசுவநாதனும் நகர்க்குள் நுழையத் தொடங்கினர். வழியெல்லாம் மங்கள சூசகங்கள் நிறைந்திருந்தன. மகர தோரணங்களும், துகிற் கொடிகளும்,வாழை கமுகு முதலிய மரங்களும் அசைந்தாடின. 'வையை செல்வாயில்' என்ற வடபுறக் கோட்டை வாயிலிலே எதிர்கொண்ட நகரமாக்கள் மனமகிழ, வீரசிகாமணியாகிய விசுவநாதனும்,வேப்பந்தாரணிந்த சந்திரசேகரபாண்டியனும் மதுரை நகர்க்குள் மகிழ்வோடு புகுந்தனர். புகுந்தவர் வீதிகளிலெல்லாம் ஆடவரும் பெண்டிரும் மன்னரை வரவேற்க மகிழ்வோடு குழுமியிருக்கும் காட்சியை

நோக்கியவாறே பட்டத்து யானைமீது அமர்ந்து, நகர்வலம் வந்து அங்கயற்கண்ணம்மை திருக்கோயிலை அடைந்தனர். திருக்கோயிலில் திருத்தொண்டு புரியும் பேறு பெற்ற ஆதி சைவப் பெரியாருள் முதியார் இருவர், பூரண கும்பங்களோடு அரசரை எதிர்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றனர்.

படைஞருட் சிலர் உடன் வந்தனர். நகர மாந்தரும் சிறுபான்மையோர் அகத்தே புக இடம் பெற்றனர். பாண்டிய மன்னர் தொன்று தொட்டு மகுடாபிஷேகம் செய்துகொள்ளும் மீனாக்ஷி கோயில் முன் மண்டபத்திலே, விசுவநாதன் அந்தணர் பலரைக்கொண்டு சந்திரசேகர பாண்டியர்க்கு மகுடாபிஷேகம் செய்வித்துச், செங்கோல் குடை முதலிய சின்னங்களையும் அளித்து, விஜயநகரவேந்தர் பெயரால் பாண்டிய நாட்டரசை அவரிடம் ஒப்புவிப்பதாகக்கூறி வாழ்த்தினன். அந்தணர் பலர் மலர் சொரிந்து ஆசி கூறினார்கள். அமைச்சரும் புலவரும் அறிஞரும் பிறரும் தத்தம் தகுதிக்கேற்ப அரசனை வாழ்த்தி விசுவநாதனைப் புகழ்ந்தனர். அவ்வண்ணமே அரியணையில் அமர்ந்த பாண்டியன் அடைந்த உணர்ச்சியை அவன் முகக் குறியே விளக்கியது. மங்கள வாத்தியங்கள் முழங்கின. அங்கடைந்த பலர்க்கும் உரிய சிறப்புக்கள் செய்யப்பெற்றன.

முடியும் குடையும் பெற்று அரியணையில் அமர்ந்த பாண்டிய மன்னர், அருகில் அமர்ந்திருந்த விசுவநாதனை நோக்கி முகமலர்ச்சியோடு சில சொற்கள் சொல்லலாயினர் :

"அன்புடையாய்! விசுவநாத! இன்று எனக்கு நீ செய்த இப்பேருதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்? நினது தந்தை, யான் என் நாட்டையிழந்து வீரசேகர சோழரால் பரிபவப்படுத்தப்பட்ட காலத்தே, எனக்கு உதவியாய் முன்வந்து பெரும் போர் புரிந்து, நாட்டை மீட்டுக் கொடுத்

தார். நீ நின் தந்தையோடு போர் புரிந்து இதற்குமுன் எவரும் செய்திராத அரும்பணி புரிந்து, என் அரசை எனக்குக் கொடுத்தனை. நினது தந்தை அநேக வருஷகாலம் புத்திரப் பேறின்றி யிருந்து, வடநாட்டிலேயுள்ள பல புண்ணிய க்ஷேத் திரங்களையும் தரிசித்து, வாரணாசி க்ஷேத்திரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள விசுவநாதரைத் தரிசனம் செய்து, ஒரு மண்டலம் கங்கா ஸ்நானம் செய்து, அநேகவிதபுண்ணிய தானங்களெல்லாம் செய்ததன் பயனாகப் புத்திர ரத்னமாகிய உன்னைப் பெற்றார். நினது அன்பின் உருவமே அவர்; அவரது அன்பின் உருவமே நீ. இவ்வண்ணமிருந்தும், எனது வேண்டு கோளுக் கிணங்கித் தென்னாடு செல்ல ஏவிய அரசராணையை யேற்று வந்த நினது பெருந்தன்மையை எங்ஙனம் பாராட்டுவேன்! எவரும் மனத்தால் நினைத்தற்கும் அரிய தாகிய ஒரு செயலை நீ செய்து எனக்கு இவ்வாழ் வளித்தனை! பாண்டியர் குடியிற் பிறந்தோர் என்றும் நன்றி மறந்தவராயி ருந்ததில்லை. நீ என் பொருட்டு நின் தந்தையைப் பகைத்துக் கொண்டாயாதலால், யான் நின்னை மைந்தனாகவே ஏற்றுக் கொள்கிறேன். இவ்வளவு சிரமத்தின்மேல் அடைந்த இவ் வரசு எனக்குப்பின் ஆள்வோரின்றிக் கலங்குத லாகாது. முன்னாளில் சோழரோடு புரிந்த போரில் என் மரபை விளக்க இருந்த மைந்தர் அனைவரும் இறந்தனர். இக்குடியின் புகழ் என்னோடு அழிதலாகாது. இவ்வரிய பணியைப் புரிந்தநினக்கு, யான் இன்றே இந்தத் தேவாலயத்தில் இங்கு நிறைந்திருக்கும் சான்றோர் முன்னிலையில் இளவரசுப் பட்டம் அளித்துப் பட் டாபிஷேகம் செய்து வைக்கிறேன்! யான் செய்யும் இச்சிறப்பு உன் தகுதிக்குச் சிறிதேயாயினும் ஏற்றுக்கொள்ள வேண்டு கிறேன். இங்குள்ளார் அனைவரும் அதனை ஒப்புக் கொள்வர்.

அதுகேட்ட விசுவநாதன் துணுக்குற்று எழுந்து நின்று கைகுவித்த வண்ணமே பேசுகிறான்:—

"அரசே! அன்புடைய பெரியீர்காள்! யான் இங்குக் கூற விரும்புவது ஒன்று உண்டு. எனக்கு அரசர்பிரான் இட்ட ஆணையை யான் நிறைவேற்றக் கடமைப்பட்டவன். என் தந்தையாரோடு போராடி இவ்வரசைப் பாண்டியர்க்கு வாங்கி யளித்தயான், உடனே அதனில் உரிமையை ஏற்றுக்கொள்வே னாயின் அறிஞர் என்னைப்பற்றி என்ன நினைப்பர்? இளவரச னுதற்குரிய உரிமை எனக்குச் சிறிதளவும் இல்லையென்பதை, யான் இங்குள்ள சான்றோர் பலரும் கேட்க உண்மையாகவும் உறுதியாகவும் கூறுகிறேன். முன்னாளிலே முகமதியரிட மிருந்து இவ்வரசைக் கைப்பற்றிய குமார கம்பண உடையார் என்ற வீரசிகாமணி, தாமே அரசாளத்தக்க ஆற்றல் படைத் தவராயிருந்தும், அநேக நாட்கள் சிரமப்பட்டு நாடு காடெல் லாம் தேடி, சோம சேகரர் என்ற பாண்டியரை உரிமையாளர் என்று உணர்ந்து அவர்க்கு முடிசூட்டினார். இவ்வரலாற்றை நன்கு உணர்ந்திருக்கும் அறிஞர் பலர் நிறைந்த இவ்வவைக் களத்தே, தெய்வ ஸந்நிதானத்திலே, பலிஜவாரு நாயக்கர்குடி யிற் பிறந்த யான், சந்திரவம்ச அரச பரம்பரைக்குரிய உரிமை யாகிய இவ்வரசின் இளவரசுப் பட்டத்தை ஏற்றுக் கொள்ள லாமா? அவ்வாறு ஏற்றுக் கொள்ளின், அது என் அரசா ணைக்கு விரோதமாய் நடந்ததாகும் என்பதையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். ஆகையால், அரசனே! என்னை இவ் விஷயத்தில் வற்புறுத்தாதிருக்க வேண்டுகிறேன். அன்றியும் என் தந்தை சிறையில் இருக்கின்றார். இந்நிலையில் நான் இங்கு இளவரசை ஏற்றுக் கொள்வது பொருத்தமாமா? விஜய நகர வேந்தர் பிரான் என் தந்தைக்கு என்ன தண்டனை விதிக்க

எண்ணியிருக்கின்றாரோ? அவர் மனக்கருத்தை அறிந்து, என் தந்தைக்கு நன்மை புரியுமாறு நானே அங்கு விரைவிலே செல்லவேண்டியவனா யிருக்கின்றேன். நான் விடைபெறுவது அவசியமாய் இருக்கும்போது, என் தலையிலேயே சுமையை இறக்க நீவிர் தீர்மானிப்பது நமது பெருந்தன்மைக்கு அழகாகாது. பெரியீர்காள்! எனக்கு விரைவிலே விடை கொடுத்தல் நலம் என்று உங்களுக்கே தோன்றும்.''

பாண்டிய மன்னன் சொல்லிய சொற்களையும், விசுவநாதன் உரைத்த மறுமொழியையும் நன்கு கவனித்துக் கேட்ட அமைச்சருள், முதியவர் ஒருவர் எழுந்து நின்று, சபையினரைப் பார்த்துக் கூறுகின்றார்:—

"வேந்தன் பெருமானே! விசுவநாத வீர சிகாமணியே! இங்குள்ள நகரமாக்கள் பொதுவில் வெளியிட விரும்பும் கருத்தை நான் கூறுகின்றேன். சிறிது செவி சாய்த்தருள வேண்டும். எங்கள் அரச பரம்பரை, சந்திரவம்ச க்ஷத்திரிய பரம்பரை யாகையாலும், வேறு எவரும் இடையிற் கலத்தல் பொருந்தாமையாலும் விசுவநாதர் இளவரசுப் பட்டத்தை ஏற்க மறுக்கிறார். அரச பரம்பரைகளின் தோற்றம் ஒன்றாயிருக்கும்; வளர்ச்சி யொன்றாயிருக்கும். இடையில் நேரும் போர்களாலும் குழப்பங்களாலும் பலவித மாறுபாடுகள் ஏற்படுவதுண்டு. விஜயநகரராஜ பரம்பரை ஆதியில் தோன்றியதெப்படி? இப்பொழுது இருக்கும் நிலைமை என்ன? நாகம நாயக்கர் காசியப கோத்திரத்தைச் சேர்ந்த க்ஷத்திரியர் என்று அவர் வம்சவரலாறு அறிந்த பெரியோர்கூறுகின்றனர். இங்கே சமீப காலத்தில் அவர் பெயரால் அமைந்த சாசனங்களில் இந்தவுண்மை நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. விஜயநகர ராஜ

பரம்பரையில் இந்நாட்டு அரச குமாரிகள் வாழ்க்கைப் பட்டதாக இதற்கு முன் வரலாறுகள் உண்டு. நான்கு ஐந்து வருஷங்களுக்குமுன்னே, இந்த அரசரே தம் ஒரே குமாரியை அச்சுத தேவராயர்க்கு விவாகம் செய்து கொடுத்திருக்கின்றார் என்ற உண்மை இங்குள்ளார் அனைவரும் அறிந்ததே. இப்பொழுது பாண்டிய வம்சத்தில் இவ்வரச பதவியை இனி ஏற்க உரியார் எவரும் இல்லை. தென்னாட்டில் உள்ள ஐவர் பாண்டியர் எப்பொழுது நமக்குச் சமயம் வாய்க்கும் என்று காத்திருக்கின்றனர். அரசரும் வயோதிகராய் இருக்கின்றார். அரசப் பொறுப்பை நன்கு வகிக்கக் கூடிய உதவியொன்று அவர்க்கு அவசியமே. ஆகையால், விசுவநாதர் இளவரசப் பதவியை ஏற்றுக்கொள்ளல் நலம் என்பதே எங்கள் கருத்தாம். விஜயநகர வேந்தர் ஆணையைப்பிறகு வேண்டிப் பெற்றுக் கொள்ளலாம். சொல்லிய வண்ணம் செய்த வீர திலகர்க்குத் தந்தையின் சிறை மீட்டல் சிரமசாத்தியமா யிருக்குமோ! ஆதலின், தேவாலயத்திலே இங்குள்ள எல்லா ஜனங்களும் மனத்திருப்தி யடையும்படி, விசுவநாதர் எம் அரசர் தரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று மன்றாடுகிறேன்.''

பாண்டிய மன்னர் மறுமுறையும் விசுவநாதனைப் பார்த்து வேண்டிக்கொண்டனர். விசுவநாதன் ஒன்றும் தோன்றாமல் சிறிது மௌனமாயிருந்தான். பிறகு, "இறைவன் திருவுள்ளம் அதுவாயின் அங்ஙனமே யாகுக. ஆயினும் நான் ஏற்றுக் கொள்ளும் பதவி விஜயநகர வேந்தர்பிரானால் அங்கீகரிக்கப் பெற்ற பிறகுதான் உறுதிப்படும்'' என்றான். அதற்கு மறுமொழியாகப் பாண்டிய மன்னர், அங்கு நானும் நேரிலே வந்து

விண்ணப்பித்துக் கொண்டு என் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்கிறேன்" என்று கூறினர்.

பிறகு அங்கிருந்தார் அனைவரும் விசுவநாதனுக்கு அன்றே இளவரசுப் பட்டாபிஷேகம் செய்யத் தீர்மானித்தனர். பாண்டிய மன்னர் விருப்பமும் அதற்கு ஒத்ததாயிருந்தது. முன்போலவே பலவித வாத்திய முழக்கங்களோடு விசுவநாதன் பாண்டிய பட்டத்து உரிமையைப் பெறுமாறு இளவரசாக்கப் பெற்றான். மதுரைக் கரசியாகிய மீனாக்ஷி தேவியின் திருவருள் இச்செயற்கு உளதாம் என்பது தோன்றமீனாக்ஷிக்குப் பூசனை புரியும் அர்ச்சகர் ஒருவர், அம்பிகையின் கையிலிருந்து செங்கோலும் கயற்பொறியும் பெற்றளித்துக், குடையும் கொடியும் அமைத்து, விசுவநாதனுக்கு இளவரசப் பட்டாபிஷேகம் செய்ததனை உறுதிப்படுத்தினர். எல்லாம் மங்களகரமாக நிறைவேறியது.

திருக்கோயிலிலிருந்து பாண்டிய மன்னரும், விசுவநாதரும் பட்டத்தியானையின் மீதமர்ந்து நகர்வலம் வந்து அரண்மனை சேர்ந்தனர். அன்று இரவே விசுவநாதரும் பாண்டியனும் வட நாட்டுப் பிரயாணம் செய்வது என்று உறுதி செய்து கொண்டனர். பாண்டியர் தம்மொடு வந்த அமைச்சர் முதலானோரை அருகில் அழைத்துத், தாம் விஜய நகரம் சென்று வரும்வரை அரசப் பொறுப்பை வகித்திருக்குமாறு கூறி விடை பெற்றுக் கொண்டனர். விசுவநாதனும் விடைபெற்றுக் கொண்டனன். உடனே அவன் ஆடம்பர வேஷங்களைக் களைந்து விட்டுத் தன் தந்தையிருந்த பாசறைக்குச் சென்றனன். பாண்டியர் சிறு படையொன்றோடு மெல்லச் சென்று பின்தொடர்ந்தனர்.

தந்தையைக் கண்ட தனயன் மிக்க வணக்கத்தோடு முன்னின்று அன்று நடந்த அனைத்தையும் கூறினன். அவர் எல்லாவற்றையும் கேட்டு அதிசயித்து, ஒன்றும் சொல்ல அறியாமற் சிறிதுநேரம் மௌனம் சாதித்தார். பிறகு மகன் முகம் நோக்கி, "குழந்தாய், எவ்வாழ்வு வரினும் நாம் உண்ட சோற்றுக்கு நன்கு உழைத்தல் வேண்டும். விஜயநகர வேந்தர் பெருமான் உனக்கு இப்பதவி வருவதற்கு ஆதரவு அளிப்பார் என்றே நம்புகிறேன். எந்நிலைமையில் இருப்பினும் நமக்கென விதித்த கடமைகளை நாம் தெய்வத்துக்கும் சத்தியத்துக்கும் அஞ்சி நன்கு நிறைவேற்ற வேண்டும். நாட்டை நன்னிலையில் நிறுத்தவேண்டுமாயின், நம்மிடம் மிக்க அன்புபூண்ட அரியநாத முதலியாரைக் காட்டிலும் சிறந்த உதவி புரிபவர் இல்லை. ஆகையால், அவரையே பாண்டிய நாட்டு அமைச்சருள் மிக்க நம்பிக்கைக் குரியவராகக் கொள்வதற்கு வேண்டுவன செய்வாயாக. படைஞருட்பெரும்பான்மையோர் தம் அரசர்க்கு மாறாகவே என்னோடு நின்று பொருதனராயினும், அவர்களை முன்போல ஏற்றுக்கொள்ளும்பொறுப்புப் பாண்டியரைச் சேர்ந்ததாகும். என்னால் அவர்கட்குத் தீங்கு விளையாதிருத்தல் நலம். நம்பிக்கைக்கும் பொறுப்புக்கும் தகுதியான படைஞர் வேண்டும் என்று கருதுவாராயின், பாண்டிய மன்னர்க்கு இவர்களைக் காட்டிலும் சிறந்த படைஞர் அகப்படுதல் அருமையே. எல்லாம் இறைவன் அருளியவண்ணம் ஆகுக. இனி நாம் விஜயநகரத்துக்குப் புறப்படலாமன்றோ?" என்றனர்.

விசுவநாதன், "அவ்வண்ணமே செய்வோம்" என்று கூறிப் படைஞரை ஒழுங்குபடுத்தி, நாடு காவற்குரியாரை அங்கு நிறுத்தி, விஜய நகரத்திலிருந்து வந்த படைவீரருட் பெரும்பகுதியினரை அழைத்துக்கொண்டு, பாண்டியமன்னர்

பின்தொடர்ந்து வரத்தக்க சௌகரியம் செய்துவைத்துத், தந்தையிடம் வந்து "இனி நாம் புறப்படுவோம்" என்றான்.

உடனே, எல்லாரும் புறப்படலாயினர். நாகம நாயக்கர் தம் மைந்தன் அருகிலேயே குதிரையை நடத்திக்கொண்டு வந்தார். பிறரும் அவரவர்க்குரிய இடங்களில் வந்தனர். பதினைந்து தினங்களில் அனைவரும் விஜய நகரம் சேர்ந்தனர்.

நான்காவது அத்தியாயம்

சக்கரவர்த்தியும் நாகமரும்

விஜயநகர சக்கரவர்த்தியாகிய அச்சுத தேவராயர், தென்னாடு சென்ற விசுவநாதன் செய்தியை அறிய மிகவும் ஆவல் கொண்டிருந்தார். ஹிந்து ஸாம்ராஜ்ய ஸ்தாபனம் நடைபெறும் பொருட்டுப் பெரும்போர்கள் பல நிகழ்த்திய நாகமநாயக்கர், இவ்வண்ணம் தம்மாணையைமீறி நடப்பதை எண்ணியெண்ணி அதிசயித்தார். சேர, சோழ, பாண்டியமண்டலங்களைத் தமது குடைக்கீழ்க் கொணரும் பொருட்டுத், தம் முன்னோரும் தாமும் புரிந்தபோர்களை எண்ணியெண்ணிப் பார்த்தார். சமீபத்தில் நிகழ்ந்த இவ்வதிசயப் போரின் முடிவு என்னுயிருக்குமோ என்று அறிய, விரைந்து வரும் தூதரை எதிர்பார்த்திருந்தார். முன்வந்த தூதர் சிலர் நாகம நாயக்கர் தோல்வியுற்றதையும், விசுவநாதன் அவரைச் சிறைசெய்ததையும்விளம்பினர். தந்தையை மைந்தன் சிறைசெய்ய நேர்ந்த நிலைமையை உள்ளத்துள் எண்ணி உருகினார். சிறந்த தளகர்த்தராகிய நாகம நாயக்கர், பாண்டிய மன்னர் பொருட்டாகத் தம் நாட்டுக்குப் பயன்படாது போன நிலைமையை அறிந்து

வருந்தினர். அமைச்சர்கள் அரசர்பிரானிடம் இவ்விஷயத்தைப்பற்றி ஒன்றும் பேச முன்வரவில்லை. விசுவநாதன் நாட்டை நெருங்கினன் என்ற செய்தி வந்தது. அரசர்பிரான் அவனைக் கண்டு உண்மையை உணர ஆவல் கொண்டிருந்தார். அறிஞர் பலர் புடைசூழ அவர் அவைக்கள மண்டபத்தில் அமர்ந்திருந்தார்.

விசுவநாதன் தன் தந்தையை உடன்கொண்டு அவைக்களம் வந்து புகுந்தான். பாண்டிய மன்னரும் உடன் வந்தனர். அவைக்களத்திருந்த பெரியார் அனைவரும் அக்காட்சியைக் கண்டு அதிசயித்தனர்.

அரசர்பிரான்:—விசுவநாத! சந்திரசேகரரே! நீங்கள் நினைத்த வண்ணம் நிறைவேற்றியிருப்பீர்கள் என்றே நினைக்கிறோம். பாண்டிய வேந்தரே! நீர் நும் அரசாட்சியை ஏற்றுக்கொண்டீர் அன்றோ? இப்பொழுது இங்கு வந்ததன் காரணம் என்ன?

விசுவநாதன்:—வேந்தர் வேந்தே! தேவரீர் இட்ட ஆணையை அடியேன் சிரமீது தாங்கி இயன்றளவு நிறைவேற்றி வந்துளேன். பாண்டிய மன்னரிடம் நாட்டை ஒப்பித்து விட்டேன். அவர் தாமே நேரில் தெரிவித்துக் கொள்ள வேண்டிய ஒரு செய்தியோடு இங்கு வந்திருக்கிறார். என் தந்தையார் இதோ நிற்கிறார். அவர் முன்னளிலே இவ்வரசாங்கத்திற்குத் தம்மால் இயன்ற பணியைப் புரிந்த பெரிய சேனைவீரர்களில் ஒருவர் என்பதை யான் தெரிவிக்க வேண்டா. பாண்டிய நாட்டுச்குச் செல்லு முன்பு அவர் இவ்வரசாங்கத்தின் நிதிச்சாலைத் தலைவராயிருந்தார் என்பதையும் நினைவூட்டுகிறேன். சோழமன்ன

ரோடு போர் புரிந்து பாண்டியர்க்கு நாட்டை யளிக்கத் தக்க தகுதி யுடையாரென்று, தங்கள் முன்னவராகிய மன்னர்பிரானால் தெரிந்தெடுக்கபெற்றப் பெருமையுடை யாரென்றும் வணக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசர்பிரான்:—விசுவநாத! நீ சொல்வதனைத்தும் யாம் அறிவோம். ஆயினும், அவர் இப்பொழுது செய்த குற்றம் பெரிது என்பதை நீ மறந்தாய் போலும். நம் ஆணைப் பத்திரத்தை அலக்ஷியம் செய்ததுமல்லாமல், நம் படைஞரோடு பெரும்போர் விளைத்துப் பலரைக்கொன்று ராஜத்துரோகியாய், தேசத்துரோகியாய் ஆயிருக்கின்றார்.

விசுவநாதன்:—அரசரேறே! அத்துணைப் பெரிய குற்றவாளியாக எந்தையார் இவ் வரசவையிலே தோன்றுவது என் துர்ப்பாக்கியம் என்றே கூறுவேன். அவர் செய்த குற்றம் என்ன என்பது இங்குளார் அனைவரும் அறிந்ததே. அரசர் முன்னிலையில் எத்துணைப் பெருங் குற்றவாளியாயினும் தான் செய்த செயலுக்குத் தக்க நியாயம் கூற உரிமை யுண்டன்றோ? எந்தையார் குற்றவாளியே யாயினும் அவர் தம் சார்பில் கூறவிருப்பதையும் சிறிது கேட்டருள வேண்டுகிறேன். பாண்டிய மன்னரும் இங்கே இருப்பது எனக்கு மிகச் சிறந்த உதவியாயிற்று.

அரசர்பிரான்:—நாகம நாயக்கரே, நீர் செய்த செயலைப் பற்றி இங்கு என்ன கூறுகின்றீர்? உம் மைந்தன் எமது ஆணையை நன்கு நிறைவேற்றிய உரிமையால், உமது வழக்கைக் கேட்குமாறு வேண்டுகின்றான்.

நாகம நாயக்கர்:—மன்னர் மன்ன! தங்கள் திருவுள்ளக் கருத்து யான் குற்றவாளியே என்று இருக்குமாயின் அதை

எவரால் மாற்ற வியலும்? குற்றவாளியாக முன்னிற்கும் ஒருவனது முன்னைய வரலாறுகளை ஆராய்தலும், அவன் அக் குற்றத்தில் எவ்வாறு சம்பந்தப்பட்டான் என்று தீர விசாரித்தலும், உண்மையில் அவன் செய்த செயல் குற்றந்தானா, இல்லையா என்று தக்க சாட்சிகளைக் கொண்டு விசாரித்துத் தீரத் தெளிதலும், நியாய நூற் றுணிபாம். வடகலை, தென்கலை என்ற இருமொழிப் பயிற்சியும், புலமைத் திறமும், அறநூற்றெளிவும் படைத்த அரசர் பலர் இருந்தும் அரசுபுரிந்த அரியணை மீது அமர்ந்திருக்கும் அரசர்பிரானிடம், என்னைப்பற்றி யான் என்ன கூறுவது? என் கடிதத்தை யெடுத்து நன்கு வாசிக்கச் செய்து, இராமபத்திர நாயக்கர் கூற விரும்பிய தைக் கூற இடங்கொடுத்திருந்தால், இத்துணையும் விளைந் திராதென்றே நான் உறுதியாய்க் கூறுவேன். பாண்டிய மன்னர் பாண்டிய நாட்டை அரசாளும் உரிமையுடை யாரல்லர் என்று நான் கூற முன்வரவில்லை. ஒரு நாட்டை ஆள்வது என்பது எளிதான பொறுப்பாகுமோ? பொறுப்பை வகிக்கத்தக்க அறிவும் ஆற்றலும் உடையா ரன்றே அரசராயிருத்தற்கு ஆசை கொள்ளலாம்? தம் குடிமக்கள் தரற்குரிய வரிப்பணத்தை முழுவதும் உரிய காலத்தில் வசூலிக்க அறியாத ஒருவர் அரசராயிருப் பது எப்படி? பேரரசர்க்கு அவர் கப்பம் கட்டுவ தெப்படி? உள்நாட்டிலுள்ள கலகங்களை யடக்க வலிமை யில்லாதவர் அயற்பகைவர்களைக் கண்டால் என்ன செய் வார்? எனக்கு அரசுரிமை வேண்டும் என்ற துராசை யால், யான் பாண்டியர் உரிமையை அவரிடம் கொடா விருந்தேன் என்று எண்ணலாகாது என்று, நான்

எவ்வளவோ நியாயங்களைக் காட்டித் தெரிவித்திருந்தும், என் வார்த்தையில் நம்பிக்கை பிறவாதது என் குற்றமே. நான் தென்னாட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு நாடு அடைந்த நிலைமைக்கும், முன்னைய நிலைமைக்கும் வேறுபாடு உண்டா இல்லையா, என்பதைத் தக்கவர்கள் மூலம் விசாரித்தறிய வேண்டுகிறேன். அரசர்களிடம் பல ஆண்டுகள் பணி பூண்டிருந்த சேவகர்க்கு முதுமைப் பருவத்தே சிறப்புச் செய்யப்படும் என்பர். யான் நாட்டின் நலங்கருதிச், சுயநலஞ் சிறிதும் எண்ணாது செய்த பணிக்குப் பெற்ற சிறப்பு இதுவேயாம். என்னை நேரில் விசாரிக்கு முன்பு யான் குற்றவாளியென்று தீர்மானித்தது, அறநூன் முறைமைக்குப் பொருந்தாது என்பதே என் வணக்கமான விஞ்ஞாபனம். போர் செய்தது குற்றம் என்று கூறப்படலாம். அதனால் நான் ராஜத்துரோகியானதாகக் கூறலாம். என்னை எதிர்த்துப் போர் புரிந்து கொன்றோ, சிறை செய்தோ, அரசர்க்குரிய பணியைப் புரிய வந்தவன் என் குமாரன் என்பதைக் கவனிப்பவர்கள், எங்கள் குடியினர்க்கு ராஜசேவையே குதைனம் என்றும், ராஜத்துரோகம் எமது குல இயற்கைக்கு மாறானது என்றும் தீர்மானிப்பர். யான் போரில் இறவாவிடினும், அடுத்த கணமே இறந்தொழிதற்கு வேண்டுவன செய்துகொள்ளல் எளிதாகவே இருந்தது. இவ்வரசாங்கத்துக்கு இந்நாள் வரையில் பயன்பட்ட இவ்வுடம்பு என்று பயன்படாததாகின்றதோ அன்றே அழியும். அரசர் பெருமானே! ஐம்பது ஆண்டுகளாக அரசர் பணி புரிந்து வந்த அடிமையாகிய யான், இன்று இந்நிலையில் நிற்பது குற்றமாயின் அதனைப் பொறுக்க வேண்டுகிறேன்.

பயன்படா வாழ்க்கையில் வாழும்படி செய்யாதிருக்க வேண்டுமென்பதொன்றே எனது வேண்டுகோளாகும்.

அரசர்பிரான்:—நாகம நாயக்கரே! நுமது கடிதத்தை நாம் இரண்டு மூன்று முறை பார்வையிட்டோம். நுமது மற்றச் செயல்கள் குற்றமற்றன வாயினும் ஆகலாம். நுமது மைந்தன் தலைமையில் வந்த எம்படையை நீர் எதிர்த்து நின்றது குற்றமே. அவன் எம் பெயரால் அனுப்பிய நிருபத்தை அவமதித்ததும் குற்றமே. நாம் ஒருவர்க்கு நன்மை செய்யக்கருதி ஆணை பிறப்பிக்கும்போது, அவர் அந் நன்மையை யேற்றுக்கொள்ளத் தகுதியில்லாதவராயிருப்பினும், எம் ஆணைக்கு விரோதமாக நடக்கும் உரிமை எவர்க்கேனும் உண்டா? நீர் நியாயமனைத்தும் நன்கு உணர்ந்தவர். உமக்கு என்ன தண்டனை விதிக்கலாம் என்று நீரே கூறலாம்.

நாகம நாயக்கர்:—யான் சொல்லத் தக்கவையெல்லாம் சொல்லி முடிந்தன. இனி யான் ஒன்றும் சொல்வதற்கில்லை. எப்படித் திருவுள்ளமோ அப்படி செய்யலாம்.

பாண்டிய மன்னர்:—அரசர்பிரானே! இங்கு யான் ஒன்று விண்ணப்பிக்க விரும்புகிறேன். இவர் வந்த பிறகு என் நாடு செல்வஞ் செழித்து நன்கு விளங்குகின்றது என்பது உண்மையே. என் நிதிச்சாலையிலும் இவர் முயற்சியால் மிக்க நிதிக்குவியல் சேர்ந்திருக்கின்றது என்று கூறுவேன். நாட்டிற் குழப்பங்களையெல்லாம் அடக்கி விட்டார் என்பதும் நான் அறிந்ததே. சென்ற இரண்டாண்டுகளாக அரசு சீர்திருத்தம் பெற்றிருப்பதைக் கண்டே நான் அரசுரிமையைப் பெற முயற்சி செய்தேன். முன்னே சில உட்பகைகளால் உண்டாகிய இடையூறெல்

லாம் இப்பொழுது நீங்கிவிட்டன. இவ்வளவு நன்மையும் இவராலேயே விளைந்தன என்று நான் கூறுவேன். என் உரிமையை என்னிடம் அளிக்கவேண்டு மென்றே யான் முன் மன்றாடினேன்.

விசுவநாதன்:—அரசர்க்கரசே! யான் ஒன்று விண்ணப்பித்துக் கொள்கிறேன். என் தந்தை தேவரீர் கூறுகின்ற இரண்டு காரணங்களால் குற்றவாளியே யாயினும், இத்துணை யாண்டுகளாகச் செய்துவந்த பணித்திறம் கருதிப் பார்த்துப் பொறுத்தருளத் தக்கவராவர். அவ்வாறு இல்லையாயினும், யான் புரிந்த சிறுபணிக்குக் கைம்மாறாக வேனும் அவர்க்கு அருள்புரிய வேண்டுகிறேன்.

அரசர்பிரான்:—விசுவநாத! நீ சமீபத்திற் செய்த சிறந்த பணிக்கு யாம் ஒன்றும் கைம்மாறு செய்தல் இயலாது. தந்தையை எதிர்த்துத் தனயன் அரசராணையாற் போர் செய்யச் சென்றதாக முன்னெங்கும் நாம் கேள்வியுற்றதில்லை. இப்புகழே உனக்குச் சிறந்த பூணாகும். உன் தந்தையின் குற்றங்கள் பொறுக்கப்பட்டன. அது மாத்திரமன்று. அவர் முன்போலவே நம் அரசாங்கத்தில் நிதிச்சாலைத் தலைவராகவும், தளகர்த்தருள் ஒருவராகவும் இருக்கும்படி இன்றே ஆணை பிறப்பிக்கிறோம். அவரும் வயோதிகரா யிருத்தலால், இனி இந்நாட்டை யகன்று எங்கும் செல்லவேண்டா. இங்கேயே இருந்து தம்மால் இயன்றன புரிவாராக. நாகம நாயக்கரே! நீர் செய்த குற்றம் இரண்டுக்கும் நாம் விதித்த தண்டனையும் இரண்டேயாயின. நும் மைந்தன் நும்மைச் சிறை செய்தான் என்று வருந்தாதீர். நாமே சிறையிட்டோம். இத்துணை யாண்டுகளாக எம் முன்னோரால்

அன்பென்னும் தளையால் சிறைபிடப்பட்ட இணையற்ற சேவகராகிய உமக்கு யாம் இடும் கட்டளை யிதுவே. இனி நீர் அதிகமாகப் போர் புரிய வேண்டா. வருவா யற்றிருந்த பாண்டிய நாட்டிலே நிதிச்சாலையை வளர்த்த நும் திறமையை நம் நிதிச்சாலைக்குப் பயன் படுத்த வேண்டுமென்றே நாம் ஆணையிடுகிறோம். எம் அரசாங்க நிதிச்சாலையே யாம் உம்மை அடைக்கும் சிறைச்சாலை யாம். அப்பதவிக்குரிய இப் பொற்பூணேயாம் உமக்கு இடும் தளையாம்.

நாகம நாயக்கர்:—அரசர் பிரானே,

> 'அருளு மேலர சாக்கு மன் காயுமேல்
> வெருளச் சுட்டிடும் வேந்தனும் மாதெய்வம்
> மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
> அருளி யாக்கல் அழித்தலங் காபவோ'

என்று பெரியார் அருளியது பொய்படுமோ?

பாண்டியர்:—அரசர்பிரானே! எனக்கும் இம்முடிவு உண்மை யானமகிழ்ச்சியை விளைக்கின்றது. தந்தையும் மைந்தனும் போர் புரிந்த காட்சியைக் கண்ணுற் கண்ட யான், இத னையும் காண நேரிட்டது என் நல்வினைப் பயன் என்றே கூறுகின்றேன். விரும்பி வந்த விண்ணப்பத்தை இனித் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கும் செவிசாய்த்து அருள்புரிய வேண்டுகிறேன். யான் மிக்க வயோதிகனயி னேன். என் மைந்தரனைவரும் முன்னைப் போரில் இறந் தனர். இனி என்னரசுரிமை எனக்குப்பின் எவரிடம் சேருமோ என்று என் மனம் கவலையுறு வண்ணம், யான் ஒரு முடிவு செய்தேன். பாண்டிய நாட்டின் நிலைமையை

நன்குணர்ந்து, முன் ஒரு முறை இரண்டாண்டு அதன் அதிகாரியாய் இருந்தவனும், இப்பொழுது என் வேண்டுகோளால் தன் தந்தையோடு எனக்கு அவ்வரசுரிமையை அளித்தவனுமாகிய விசுவநாதனுக்கு,யான் செய்யத்தக்க கைம்மாறு ஒன்றும் இல்லை. எனக்குப்பின் என் அரசுரிமையை ஏற்றுக் கொள்ளுமாறு அவனை வேண்டிக் கொண்டேன். அரசராணை பெற்றே முடிவு செய்யவேண்டும் என்று அவன் கூறினன். என் நாட்டு மக்களனைவரும் அவன் தமக்கு அரசனுக வருவதில் மிக்க ஆவலுடையராயிருக்கின்றனர். தேவரீர் எனது இந்த வேண்டுகோளுக்கு இணங்கி, இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு விசுவநாதனைப் பாண்டிய நாட்டுக்கு அனுப்பியருள வேண்டுகிறேன். அவனது தந்தையும் இதற்கு இணங்க வேண்டுமாறு மிகவும் கேட்டுக் கொள்கிறேன்.

அரசர்பிரான்:—பாண்டிய மன்னரே! இதென்ன அதிசயம்! இவ்வளவு பெரும் போர்புரிந்து, இத்துணைப் படைவீரரைக் கொன்று உமக்காக இவ்வளவு பாடுபட்டதும் கடைசியில் இப்படியா முடிந்தது? தந்தையிடம் இருந்த பொறுப்பை மைந்தனிடம் கொடுக்க நீர் இவ்வளவு சிரமப் பட்டிருக்க வேண்டா. நடந்தது நடந்து விட்டது. பாண்டிய வம்சம் உம்மோடு முடிந்து விட்டதா? விசுவநாதனுக்கு உம்மரசைக் கொடுக்க நீரே விரும்புவீராயின் நாம் அதற்குத் தடை சொல்வது தகுமோ? உமது விருப்பம்போற் செய்யலாம்.

பாண்டியர்:—என் காலத்திற்குப் பிறகு விசுவநாதனை விசுவநாத பாண்டியன் என்று அழைக்கவும், அப்பெயரால் எம் நாட்டில் நாணயங்கள் செய்விக்கவும் ஆணை

பிறப்பித்தருள வேண்டுகிறேன். நான் எண்ணிய எண்ணம் நிறைவேறவும் என் பகைவர் தலையெடுக்காது அடங்கவும் அதுவே வழியாகும்.

அரசர்பிரான்:—அவ் வண்ணமே ஆகட்டும். நாகம நாயக்கரே! உமக்கும் இது சம்மதம் தானே!

நாமக நாயக்கர்:—அரசர்பிரான் பிறப்பிக்கும் ஆணை எதுவாயினும் இனி யான் மறுத்துப் பேச வழி உண்டோ? ஒரு முறை பேசி அடைந்த தண்டனையை இதற்குள் மறந்து விட வியலுமோ? என் மைந்தன் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள ஆற்றல் உடையவனே. ஆயினும் தெய்வத் திருவருளால் எல்லாம் நலமாய் முடியவேண்டும்.

விசுவநாதன்:—தெய்வத்திருவருளும், அரசர்பிரானின் பூரண அருளும், தந்தையார் ஆசீர்வாதமும் அடியேனுக்கு வேண்டுவதே.

அரசர்பிரான்:—இனிச் சபை கலையலாம்.

ஐந்தாவது அத்தியாயம்
தமிழ் நாட்டுத் தலைமை

விஜய நகரத்தின் சிறப்பை அந்நாளிற் கண்ட அயல் நாட்டவர் சில்லோர் எழுதிய குறிப்புக்கள் இந்நாளிற் கிடைக்கின்றன. சிலப்பதிகாரத்திலே மதுரை நகரமும், காவிரிப்பூம் பட்டினமும் முற்காலத்தில் இருந்த நிலைமையைப் பற்றிச் சித்திரிக்கும் பகுதிகளைப்பார்த்தறிந்த தமிழர்களுக்கு, விஜயநகரத்தின் உன்னத நிலையின் சித்திரமானது அதிசயம் விளைப்பதாயிராது. எனினும், பொன்னும் நவமணிகளும் தக்க காவலின்றியே வெளிப்படையாகக் கடைவீதிகளில் விற்கப்பட்டது ஒரு பெருஞ் சிறப்பென அயல்நாட்டார் பாராட்டியிருக்கின்றனர்.

தெருக்களிலெல்லாம் யானைகளும் குதிரைகளும் சாமானிய மாகச் சஞ்சரித்தன என்பர். படைகளின் தொகுதிகளைப் பற்றிக் கூறுவதைப் பார்ப்போமாயின், கௌரவ பாண்டவ சைனியங்களைப்பற்றிப் பாரதத்தில் வரும்செய்திகள் போ லவே தோன்றும். அரசர் நிதிச் சாலையில் இருந்த செல்வத் திற்கும் நவமணிக்கும் அளவே இல்லை. போர்க் களங்களிலே அரசர்கள்,படைஞர்களுக்குத் தாராளமாகப் பொன்னும்மணி யும் வழங்கினர்கள் என்று கேட்குஞ் செய்தியை இந்நாளைய வறிய வாழ்வோடு கருதிப் பார்த்தால், அது பொய்யாகவே தோன்றும். இவ்வளவு சிறப்புடன் வாழ்ந்த விஜய நகரச் சக் கரவர்த்திகளுள் எல்லாப் பெருமையும் நிறையப்பெற்றிருந்த, கிருஷ்ண தேவராயர்க்கு அடுத்தபடியாக அரசு புரியவந்த அச்சுத தேவராயர், அப்பெருமைகளிற் குறைவற்றவராகவே யிருந்தார். அடைந்தோரைக் காத்தருளலும், பகைத்தோரை அடக்கியழித்தலும் அரசர்க்கு இயல்பாய் இருக்கும் குணங்க ளாம். அக்குணங்களில் அச்சுத தேவராயர் குறைவற்றவர்.

நாகம நாயக்கர் அரசர்பிரான் அருளால் முன்போலவே உயர்பதவியில் உரிய மரியாதைகளைப் பெற்று வாழ்ந்தார். பாண்டிய மன்னரும் விசுவநாத நாயக்கரும் சில தினங்கள் விஜயநகரத்தில் இருந்தனர். ஒருநாள் அரசர்பிரான் அவ் விருவரையும் தம் சமுகத்தில் அழைப்பித்தனர். அங்கு நல் லோர் பலர் முன்னிலையில் பாண்டிய மன்னர் விசுவநாத நாயக்கர்க்கு இளவரசுப்பட்டம் அளிப்பதில், அன்று வரை யில் அபிப்பிராயம் மாறுபடாமல் இருந்தாரா என்று விசாரித் தார், பாண்டியர் தம் மனவுறுதி மாறுபடவில்லை என்று யாவ ரும் அறிய உரைத்தார். அது கேட்ட அச்சுத தேவ ராயர் விசுவநாத நாயக்கரை மனமார நாவார வாழ்த்தி,

அவ்வுரிமையை யேற்றுக்கொள்ளுமாறு ஆணையிட்டார். அப்பொழுது அவர், "விசுவநாத! இந்நாள்வரையில் நாம் நின்னை நமது சேவகருள் ஒருவனாகக் கொண்டிருந்தோம். இனி நாம் வேண்டுங் காலங்களில் உதவிபுரிய வல்ல துணைவருள் ஒருவனாகக் கொண்டோம். இப்பொழுது சோணாட்டில் எவரும் அரசில்லை யென்பதை நீ அறிவாயன்றே. பாண்டிய நாட்டின் அரசர் தம் நாட்டின் ஆட்சியைக் கவனித்திருப்பர். அங்கு அவர்க்கு வேண்டும் உதவி செய்வதோடு, சோணாட்டரசையும் நன்கு நடத்திக்கொண்டு வருக. தென்னாட்டில் நமது ராஜப்பிரதிநிதிக்குரிய சில சின்னங்கள் இன்று உனக்கு உரிய அதிகாரிகளால் வழங்கப்படும். எமது அன்பின் அறிகுறியாகப் பிறர் எவர்க்கும் இல்லாத ஒரு சிறப்பை உனக்கு இன்று செய்ய விரும்புகிறோம். நாம் திருவோலக்க மண்டபத்தே அமரும் சிங்காதனத்தைப்போல், பொன்னும் மணியும் அமைந்ததொருசிங்காதனம் நமது நிதிச் சாலையில் உள்ளது. அதனை நினக்கெனவே உதவுகிறோம். உன் விருப்பம்போலத் தஞ்சாவூரிலேனும், மதுரையிலேனும் அச் சிங்காதனத்தை வைத்துக்கொண்டு அரசப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு நீடு வாழ்க! தெய்வத்திருவருளால் எவரும் எத்தகைய வாழ்வும் அடையலாம். ஆகையால் அந்நாட்டில் உள்ள தேவாலயங்களுக்கு உரிய திருப்பணிகளையும், சிறப்புக்களையும், தக்க வண்ணம் மேற்கொண்டு நடத்துவாய் என்று எதிர்பார்க்கிறோம். இனி நீங்கள் இருவரும் தமிழ் நாட்டுக்குச் செல்லலாம். நாம் ஆந்திரரேயாயினும் தமிழ் நாட்டில் தலைமை தாங்கும் நிலைமையில் தமிழராகவே இருக்கவேண்டும் என்பதை நினைவூட்டுகிறோம்" என்று கூறினர். இவ்வருள் மொழிகளைக்கேட்ட விசுவநாத நாயக்கர் அடைந்த மகிழ்ச்சிக்கு

எல்லையில்லை. பாண்டிய மன்னரும் தாம் கொடுக்கக் கருதிய பதவியைக் காட்டிலும் பெரும்பதவி, தம் அபிமான புத்திரர்க்கு வந்தது கண்டு பேரானந்தம் கொண்டார்.

பிறகு அவ்விருவரும் அரசர்பிரானிடம் விடைபெற்றுக் கொண்டு, நாகம நாயக்கரிடம் சென்று அவரது நல்லுரையும் கேட்டுக்கொண்டு, புறப்பட்டனர். விரைவாகவே மதுரை நகர் வந்தடைந்தனர். மதுரை நகர மாந்தர் தம் அரசரையும் இளவரசரையும் அன்பு கனிந்த நல்வரவு கூறி எதிர்கொண்டு உபசரித்தனர். இருவரும் அரண்மனை புகுந்தனர். விசுவநாத நாயக்கர்க்கு மதுரை நகரிலே தனித்து ஒரு அரண்மனை அமைத்துக் கொடுக்கப்பட்டது. அவர் அங்கிருந்து கொண்டு தமிழ் நாடு முழுவதையும் சுற்றிப் பார்த்து வந்தார். சென்று கண்ட நகரங்களிலெல்லாம் மங்கள மகிழ்ச்சியோடு வரவேற்று உபசரிக்கப் பெற்றவராய்த், தஞ்சாவூரிலும் திரிசிரபுரத்திலும் வல்லத்திலும் பெரும்பான்மையாகத் தங்கியிருந்தார். நகரங்களை யெல்லாம் நன்கு கவனித்துத், திரிசிரபுரமே அரசிருக்கைக்குரியதாய் இருப்பதாய்த் தீர்மானித்துத், தம் உறைவிடத்தை அங்கு அமைக்க விரும்பினர்.

மதுரை நகரில் இருந்தவாறே சுற்றிலும் உள்ள தேவாலயங்களைப்பார்த்து வந்தார். திருவரங்கம், திரிசிரபுரம், திருவானைக்கா முதலிய தலங்களிலே கோயில்களுக்கு மிக்க பொருட் செலவிற் பல திருப்பணிகள் செய்தார். மதுரை மீனாக்ஷி சுந்தரேசுவரர் கோயிலில் புறமதில் மிகவும் பழுதுபட்டிருந்ததால், அதைத் தகர்த்துப் புதியதாக ஒரு பெரிய மதில் எழுப்பினர். கோயிலுக்குள்ளே பழமையாய்ச் சிதிலமாயிருந்த மண்டபங்களை யெல்லாம் நன்கு அமைத்தார். நித்திய நைமித்திக பூஜைகள் நன்கு நிறைவேறற்கு வேண்டிச்

சில கிராமங்களைத் தர்ம சாசனம் செய்தார். அரியநாத முதலியாரும் இத் திருப்பணிகளுக்கு வேண்டுமளவு உதவி செய்து வந்தார். மதுரை நகரத்துப் புறமதில் மிகவும் பழமை யாய்ப் பழுதுபட்டிருந்ததால், அதை மிக்க பொருட்செலவு செய்து சீர்திருத்தி யமைத்தார். அம்மதிலில் எட்டு வாயில் களும் எழுபத்திரண்டு கொத்தளங்களும் அமைத்தார்.

இங்ஙனம் இவர் வாழ்ந்து வருகையில் விஜயநகர வேந்தர்பிரான், தமது மைத்துனராகிய சேவப்ப நாயக்கரைத் தஞ்சை மன்னராக நியமித்துத் தென்னாட்டுக்கு அனுப்பினர். அவர் சோழ நாட்டுத் தலைமையை ஏற்றுக்கொண்டதும், விசுவநாத நாயக்கர் அவரைக் கண்டு தம் நோக்கங்களைக் கூறித், திரிசிரபுரத்தைப் பாண்டிய நாட்டுக்குக் கொடுத்து, அதற்குப் பிரதியாக வல்லத்தைத் தஞ்சாவூரோடு சேர்த்துக் கொள்ளும்படி கேட்டார்; அவரும் அதற்கு இணங்கவே திரிசிரபுரம் பாண்டிய நாட்டில் சேர்ந்தது.

திரிசிரபுரத்தை நன்கு அழகுபெற அமைக்கவேண்டும் என்ற கருத்துக் கொண்ட விசுவநாத நாயக்கர், அநேகம் பணியாளர்களைக் கொண்டு வீதிகளை ஒழுங்கு செய்து, ஒரே அளவாயமைந்த பல சிறு கட்டடங்களை அமைத்து, அவற் றுக்குநடுநாயகமாய்ப் பெரியதோர் அரசமாளிகையும் அமைத் தார். கோட்டைப்புறமதில் புதிதாய் அமைக்கத் தொடங்கி, மதுரை நகரத்து மதிலைக் காட்டினும் நன்கு அமையும் வண் ணம் வேண்டுவன செய்தார். நகரத்துக்குள்ளே பலவகையான தொழிலாளர்களையும் உயர்ந்த இனத்தார்களையும் செல்வ வந்தர்களையும் குடியேறி வாழச் செய்தார். காவிரியின் இரு கரைகளிலு முள்ள காடுகளை வெட்டி நிலங்களைப் பண் படுத்தி, வேளாளர்க்குக் கொடுத்து உழுது பயன்பெறும்படி

செய்தார். நகர் நடுவில் புதியதோர் தெப்பக்குளம் அமைத்து அங்குத் தாயுமானேசுரர் தெப்பத்திருவிழாக் கொண்டருளச் செய்தார். இவ்வாறு பலவகைச் சீர்திருத்தங்களும் செய்து, கோயிலிலே நித்திய நைமித்திக பூஜைகள் நன்கு நிறைவேறும் படி செய்துவிட்டு மதுரையை நோக்கிப் புறப்பட்டார்.

விசுவநாத நாயக்கரை எப்பொழுது காண்போம்என்ற ஆவலோடு முதுமைப்பருவத் தளர்ச்சியாற் படுத்திருந்த பாண்டிய மன்னர், அவரைக் கண்டதும் தம் அரச சின்னங்களை அவர் கையில் அளித்து, முத்திரை மோதிரத்தையும் உதவிச் சொக்கேசர் அடிமலர்களைத் தியானம் செய்து கொண்டே சிவ பதம் அடைந்தார். விசுவநாத நாயக்கர் தம் பொறுப்பு வளர்ந்ததை உணர்ந்து, பாண்டிய மன்னர்க்குச் செய்தற்குரிய கடன்களைச் செய்துமுடித்துப் பின்னர், அமைச்சர் பலர் முன்னிலையில் தாம் அரசுரிமையை ஏற்றுக் கொண்டதாகக் கூறி, அதிகாரம் பெறுதற்கு விஜயநகரம் சென்று வருதல் வேண்டும் என்று சொன்னர். தளவாய் அரியநாத முதலியாரும் தளகர்த்தர் கேசவப்ப நாயக்கரும், அரசுக்குரிய பொறுப்பை விசுவநாத நாயக்கர் விஜயநகரம் சென்று திரும்பிவரும் வரையில் மேற்பார்த்திருப்பது என்று தீர்மானமாயிற்று.

விசுவநாதர் நல்லோர் பலர் ஆசிபெற்று விஜயநகரம் சென்றார். அப்போது அச்சுததேவராயர் மிகவும் விருத்தாப்பிய தசையில் இருந்தார். ஆதலின் அவர் அமைச்சர்களோடு அரசாங்க காரியங்களைக் கவனிப்பதை ஒருவாறு சுருக்கிக் கொண்டு, வித்வான்களோடு சாஸ்திர விசாரணை செய்வதிலேயே உற்சாகமாய்ப் பொழுது போக்கிக் கொண்டிருந்தார். விசுவநாதர் சேவகராற் செய்திசொல்லியனுப்பிப் பிறகு நேரில் சென்று கண்டார். அரசர்பிரான் அவரைக் கண்டதும் மிக்க



விசுவநாத நாயக்கரால் வெட்டப்பட்ட தெப்பக்குளம்

மகிழ்ச்சியடைந்து, தம் உள்ளக்கருத்தை வெளியிட்டு மன முற ஆசீர்வதித்தார். பிறகு விசுவநாதர், "அரசர்பிரானே, தெய்வத் திருவருளால் தென்னாட்டில் குடிமக்கள் சுகமாக வாழ்கின்றனர். தேவாலயங்களிலெல்லாம் கிரமமாகப் பூஜை கள் நடந்து வருகின்றன. நான் திரிசிரபுரத்திலிருந்து, அந்நக ரத்தை அலங்கரித்து அழகுபடுத்த ஆவன செய்துவருகிறேன். இப்பொழுது யான் மதுரைக்கே சென்று வாழ்வதற்குரிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. மீனாக்ஷி சுந்தரேசுவரருடைய பூரண அனுக்கிரகத்துக்குப் பாத்திரராக வாழ்ந்து வந்த பாண்டிய மன்னர், வயோதிக தசையில் மனவமைதி பெற்றுச் சிவபதம் அடைந்தனர். ஆகையால், இனி யான் செய்தற்குரிய செயல் களுக்கு ஆணை பிறப்பித்தருள வேண்டுகிறேன்.

அரசர்பிரான்:—பாண்டியர் சிவபதம் சேர்ந்தனரா? அவரோடு பாண்டிய மரபு அழிந்துபோகிறது. தென் காசிக்கருகில் வாழும் சிலர் தாங்கள் பாண்டிய வம்சத்தார் என்று கூறிக்கொள்வதாகக் கேள்வியுற்றோம். அவர்கள் கிரம மான அரசமரபிலே பிறக்கவில்லையென்று அறிஞர் கூறுகின்றனர். அதைப்பற்றி நாம் இங்கு விசாரிப்ப திற் பயன் இல்லை. நாம் முன்னே பாண்டிய மன்னர்க் குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும். அவரது விருப்பத்திற்கிணங்க உமக்கு விசுவநாத பாண் டியன் என்ற பட்டம் அளிக்கிறோம். விசுவநாத நாயக் கரே, நீர் மிகவும் இளம்பருவ முதலே நம் அரசருக்கும் நாட்டுக்கும் புரிந்தபணியின் பயனாக உமக்கு இப்பதவி அளிக்கப்படுகிறது. இன்று முதல் நீர் பாண்டிய நாட்டிலே உமது பெயரால் 'விசுவநாத பாண்டியன்' என்று நாணயங்கள் முத்திரித்து வழங்கவும் ஆணை

தந்தோம். நாகம நாயக்கர்க்கும் நாம் செய்வது திருப்தியை அளிக்குமென்றே நம்புகிறோம்.

நாகம நாயக்கர்:—அரசரேறே, பரம்பரையாக இவ்வரசின் நன்மைக்காக முயன்றுவரும் சேவகர்கள் சிறப்புப் பெறுவது, அரசர் பெருமக்கள் குணத்தை விளக்குகின்றதேயன்றி, அப்பெருமையை அடைவோர் தகுதியை விளக்குவதில்லை. சில ஆண்டுகட்கு முன்பு விசுவநாதனைத் தென்னாட்டு ராஜப் பிரதிநிதியாக அனுப்பினீர்கள். இன்று அவனுக்குப் பாண்டிய ராஜ பதவி அளிக்கின்றீர்கள். கொடுத்தற்குரியார் கொடுக்கும் கொடை எதுவாயினும், ஏற்றற்குரிய நிலையில் இருக்கும் எம்போன்றவர் ஏற்றுக்கொள்ள வேண்டுவது முறைமைதானே ?

விசுவநாதன்:—அரசர்பிரான் அருளிச் செய்யும் ஆணை எதுவாயினும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கின்றேன் ?

அரசர்பிரான்:—விசுவநாத நாயக்கரே, இப்பாண்டிய நாடு முன்னாளில் நும் தந்தையாரால் ஆளப்பட்டது என்பதை நீர் அறிவீர். நும் முயற்சியாலே அது பாண்டிய மன்னர்க்கு உரிதாயிற்று. அவரும் நும்மை அபிமான புத்திரராக நம் முன்னிலையில் ஏற்றுக்கொண்டு, பாண்டிய மரபில் நும்மைச் சேர்த்தார். மேலும் முன்பு ஒரு சந்தர்ப்பத்தில், நம் நாட்டுப் பொது மக்களுக்குத் தீங்கு செய்துகொண்டிருந்த ஒரு காட்டெருமைக் கடாவைக் கொன்று துர்க்காதேவிக்கு அர்ப்பணம் செய்தீர். வடநாட்டிலிருந்த பல மன்னர்களோடு போர் புரிந்து அவர்களை நம் அடியில் வணங்கித் திறையளக்கச் செய்தீர் அவர்கள் நாடுகள் அனைத்தும் நம் ஹிந்து ஸாம்ராஜ்யத்தினுள் அடங்கச் செய்தீர். வடநாட்டுள் சில மன்னர்

திறையளக்க மறுத்தபோது, அவர்களைக் காடாளச் செய்து நம் நாட்டின் அளவை வளர்த்தீர். இவை யெல்லாவற்றுக்கும் மேலாக, நும் தந்தையார் நமது ஆணைக்கு அடங்காது எதிர்த்து நின்ற காலத்தில், எம்மாணைக் கிணங்கித் தந்தையோடு போராடிப் பாண்டியர்க்கு அரசளித்தீர். நும் தந்தையாரையே சிறை செய்து இங்குக் கொணர்ந்தீர். நாம் முன்னே நுமக்குத் தென்னாட்டுத் தலைமை யளித்தகாலத்தில், நம் நிதிச்சாலையிலிருந்து எடுத்துக் கொடுத்த ரத்ன ஸிம்ஹாஸநம் இன்று நுமக்கு ராஜபதவியை அடைவித்தது. பாண்டியர் நும்மைச் சுவீகரித்துக்கொண்டு அரசுரிமைக்குரிய சின்னங்களையும் முத்திரை மோதிரத்தையும் அளித்திருக்கின்றார் என்று அறிகின்றோமாகையால், அவர் விருப்பிற் கிணங்க இன்று முதல் நீர் பாண்டிய நாட்டரசுரிமையை ஏற்றுக்கொள்வீராக. வழக்கம்போல் முப்பது லக்ஷம் பொன் கப்பம் செலுத்தி வருவீராக. வளனேங்கிய காலங்களில் நாற்பத்தைந்து லக்ஷம் பொன் செலுத்தலாம்.

விசுவநாதர் :—எமது பரம்பரைத் தெய்வமாகவுள்ள அரசர் பிரான், எப்பதவி யளிக்கினும் நான் ஏற்றுக்கொள்ள வேண்டியவனே யன்றோ?

நாகம நாயக்கர்:—விசுவநாத! அரசர் பிரானது மனப்பூர்வ ஆசியோடு பெறும் இப் பதவியை, நாட்டில் வாழும் மக்களுக்கு மேன்மேலும் நன்மை பெருகுமாறு தாங்கி வருவாயாக. குடிகளின் நலமே அரசன் நாட்டமாயிருத்தல் வேண்டும். உழவர், வியாபாரிகள், தொழிலாளிகள் முதலிய பொதுமக்கள் க்ஷேமமாயிருப்பதே அரசின்

பெருமைக்கு அறிகுறியாகும். இறைவன் திருவருளால் மேலும்மேலும் சிறந்த நன்மைகள் நின் வாழ்விலே உண்டாகும் வண்ணம் நல்லோர்க்கு நல்லனாய், தீயோர்க்குக் காலனாய், எளியோர்க்குத் தந்தையாய் நடந்துகொள்வாயாக. நாடு அரசின்றி அதிகநாள் இருத்தலாகாது. இனி விரைவிலே சென்று வருவாயாக.

விசுவநாதர்:—அரசர்பிரானே! இக்காலத்தில் நான் இங்கு அருகில் இருந்து,இந்த ஹிந்து ஸாம்ராஜ்யத்துக்கு என்னால் இயன்ற பணி செய்யக்கூடாமல் இப்பதவி எனக்கு வாய்த்தது. நான் ஆளச் செல்லும் நாடு சிறிதேயாயினும் எனது பொறுப்பு மிகவும் சிரமசாத்தியமானதே. தென்னாட்டில் வாழ்ந்து வரும் பாண்டிய மரபினர் இனி என்ன செய்வரோ? நாட்டினுள் பல தலைவர்கள் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் தனியரசு நடத்த வேண்டும் என்ற அவாவுடையராகவே இருக்கின்றனர். சேரநாட்டு மன்னர் எந்தச் சந்தர்ப்பத்திற் பாண்டிய நாட்டிற் படையெடுப்போம் என்று காத்திருக்கின்றார். கடலோரங்களில் வாழ்கின்ற பரவர் என்ற ஜாதியாரால், முன்னே பல குழப்பங்கள் ஏற்பட்டன. இன்னும் ஏற்படுமென்றே தோன்றுகின்றது. அவர்கள் நம் அரசன் கீழ் வாழ்கின்றாராயினும், முன்னொரு சந்தர்ப்பத்திலே அயல் நாட்டவர் சிலருடைய உதவி பெற்றுப், புறச் சமயத்தில்சேர்ந்துகொண்டு நம் அரசையே மதிக்காமல், எங்கோ பல்லாயிரக் காவதங்களுக்கு அப்பால் இருக்கும் ஒரு வேற்றரசர் குடிகள் என்று தம்மை அழைத்துக் கொள்கின்றனர்.அரசர்பிரானே நேரில் ஒரு முறை வந்தும், இந்த வழக்கு ஒழுங்குக்கு வரவில்லை. கடற்றுறை

வருவாயில் நம் நாட்டுக்கு உரிமையென்பது சிறிதுமில்லையென்று, அயல் நாட்டார் சிலர் கூறி வருகின்றனர். இவ்வளவு குழப்பங்களுக் கிடையில் அரசுரிமை என் தோளில் ஏறியது. இறைவன் திருவருளாலும், அரசர் பிரானது ஆசியின் பலத்தாலும், என்னால் இயன்றன புரிந்து சீர்திருத்தங்கள் செய்ய முயல்கின்றேன்.

நாகம நாயக்கர்:—சொல்வன அனைத்தும் மெய்யே. சிரமம் என்பது ஒன்று தோன்றுவது வென்று மேம்படும் பொருட்டேயென்று கருதுதல் வேண்டும். வீரர்க்கு ஒருநாளும் மனத்தளர்ச்சி உண்டாகலாகாது.

அரசர்பிரான்:—இவையனைத்தும் யாம் அறிவோம். நம் அமைச்சருள் மிக்க புகழ் படைத்த தளவாய் அரியநாத முதலியார் மதுரையில் இருக்கின்றார். இராமபத்திர நாயக்கர், கேசவப்ப நாயக்கர் முதலிய நண்பர்களும் இருக்கின்றனர். இவர்கள் உதவியைக் கொண்டு இயன்றன செய்க. அவசியம் இருப்பின் நம் படைகளையும் அனுப்புவோம்.

விசுவநாதர்:—அரசர்பிரானே! இனி யான் விடை பெறுகின்றேன். என் தந்தையாரின் விருத்தாப்பிய தசையில் அவர்க்கு உதவியாக இங்குநிற்றற்கு இயலாது போனது பற்றி என் மனம் வருந்துமாயினும், ஹிந்து ஸாம்ராஜ்யத்தின் பெருமையைத் தென்னாட்டிலே நிலைநிறுத்தும் பணியை ஏற்றுக்கொண்டேனாகையால், அதனை நிறைவேற்றும் பொருட்டாக அங்குச் செல்கிறேன். நண்பர் பலர் உதவி இருப்பதாலும் நன்மை பெறலாம் என்ற மனவுறுதி யுள்ளவனாகவே யிருக்கிறேன்.

நாகம நாயக்கர்:—விசுவநாத ! எத்தகைய பெரும்பதவி வரி னும் தெய்வ பக்தியில் மனம் ஈடுபடவேண்டும். முன் போலவே தேவாலயங்களை நன்கு கவனித்து வருவாய் என்று நம்புகிறேன். எந்த மதத்தைச் சேர்ந்தவரா யிருப்பினும் அரசரால் ஒரு நிகராக மதிக்கப்படவேண் டும் என்பதை என்றும் மறவாதே. இறைவன் திரு வருள் நினது பெரும் பொறுப்புக்கு நல்லுதவியாக முன்னிற்கும். இனி நாம் புறப்படுவோம். அரசர் பிரான் சிரமபரிகாரம் செய்து கொள்ளட்டும்.

ஆறாவது அத்தியாயம்

விசுவநாத பாண்டியன்

இயற்கை யழகிலும் செயற்கை நலத்திலும் எந்நகர்க்கும் பின்னிடாது மேம்பட்டு விளங்கும் மதுரைமாநகரம், அன்று புதிய அணிகள் பல பூண்டு தன் மணமகன் வரவை எதிர்பார்த்திருக்கும் மணப்பெண் போல விளங்கியது. நகர மாந்தர் புதுப்பூம் பட்டாடை அணிந்து, புதுமலர் சூடிப் பொன்னணி மணிப்பணி பூண்டு முகமலர்ச்சியுடன் வீதி களில் நிறைந்தனர். பெரிய வீதியாகிய மாசி வீதியில், இடை யிடையே அழகு விளங்க அலங்கரிக்கப்பெற்ற பந்தல்கள் பல விளங்கின. வடக்குக் கோட்டை வாயிலருகே பெரிதும், வேலைப் பாடு மிக்கதுமாகிய ஒரு தோரணவாயில் அமைக்கப்பட்டது. அங்கிருந்து தொடங்கி வடக்கு மாசி வீதி வரும் வரையில், நூறு கஜத்துக்கு ஒரு பூம்பந்தலும், பத்து கஜத்துக்கு ஒரு மாவிலைத் தோரணமும் அமைக்கப்பட்டிருந்தன. வாழை, கமுகு முதலிய பசிய மரங்கள் குலைகளுடன் வழியெல்லாம்

இருபுறமும் கட்டப்பட்டு வரிசையாய் நின்று அழகு விளைத்தன. பூம்பந்தர்களிலே தேவ கந்தருவர் போன்றமைக்கப்பட்டிருந்த பாவைகள் சில மலர்மாலைகளை ஏந்திநின்றன.விண்ணிலிருந்து மலர்சொரியும் பாவனையாகப், புஷ்பவருஷம்பொழியுமாறு சில சிறு பாவைகள் சூத்திரக் கயிற்றோடு இணைத்து அமைக்கப்பட்டிருந்தன.மாசிவீதி முழுவதும் அரசராக வருவோர் நகர்வலம் செய்து, மீனாக்ஷியம்மை திருக்கோயிலுக்குச் சென்று பட்டாபிஷேகம் செய்து கொள்ளவேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தனர். காலக்கணிதர் பட்டாபிஷேகத்துக்குப் பொருந்தும் எனக் கூறிய நாளிலே, விசுவநாதர் வைகை வடகரை வந்து சேர்ந்தார்.வைகையாற்றிலே நீராடித் தெய்வம் தொழுது, தம் சிறு மாளிகையிலே சிறிது நேரம் சிரமபரிகாரம் செய்துகொண்டார். பிறகு நகர மாந்தர் வரவேற்றற்குரிய காலம் குறுகவே, தக்கவாறு அலங்கரித்துக்கொண்டு, பெருவெள்ளம் நிறைந்தோடிய வைகைப் பேரியாற்றை அரசர்க் கென்றமைத்த சிறிய ஓடத்தின் உதவியாற் கடந்து, தென்கரை வந்து சேர்ந்தார். தென் கரையிலே கோட்டை வாயிலை நெருங்குமுன்,நகரமாக்கள் எதிர்கொண்டு வரவேற்று உபசரித்துப் பட்டத்து யானையில் அமர்த்தினர்.

படைவீரர்கள் தத்தமக்குரிய படைக்கலங்களைத் தாங்கி அணியணியாக முன்னடைந்தனர். அரியநாத முதலியார் பெரியதோர் வெண்குதிரை மீதமர்ந்து விசுவநாதர்க்கு வலப் பக்கத்தில் வந்தனர். இராமபத்திர நாயக்கரும் அவ்வண்ணமே இடப்பக்கம் வந்தனர். தளகர்த்தர் முன்னும் பின்னும் சென்று படைஞரை அணி குலையாது நடத்திச் சென்றனர். அமைச்சப் பெரியோரும், மகாஜனத் தலைவரும், பிறரும் தம்தம் பதவிக்குரிய அங்கிகளை அணிந்து, குதிரைகளின்

மீதமர்ந்து பின்னே வரிசை வரிசையாக வந்தனர். நகர மாந்தர் இருபுறமும் விலகிநின்று, இவ்வாறு அரசர் வரும் காட்சியைக் கண்டு கண் குளிர்ந்தனர். முதல் தோரண வாயிலில் நுழைந்ததும், விசுவநாதர் கந்தருவப் பாவைகளாற் செய்யப் பெற்ற மலர் மாரியில் மூழ்கினர். அநேகம் மலர் மாலைகள் நாற்புறங்களிலிருந்து அவர் கழுத்தில் வந்து விழுந்தன. மெல்ல நடந்து மேற்சென்று கொண்டிருந்த அப் பவனியில், ஒவ்வொரு பந்தர்க்கருகிலும் ஒவ்வொரு விதமான சிறப்பு நிகழ்ந்தது. பட்டாபிஷேகத்துக்கு உரிய வேளை குறுகு முன்பு, திருக்கோயில் சேர்தல் வேண்டும் என்று, இயன்றவளவு மாசி வீதியில் நடந்த மரியாதைகளை விரைவிலே ஏற்றுக்கொண்டு மீனாக்ஷி கோயிலுக்கு வந்துற்றனர். ஆவணிமூல வீதியிலும், சித்திரை வீதியிலும் சில இடங்களில் அபூர்வமான மலர் விருந்துகள் நிகழ்ந்தன. அம்பிகை கோயில் வாயில் வழியே விசுவநாதர் திருக்கோயிலினுட்புகுந்தனர். உடன்வந்தோருள் முக்கியமான உத்தியோகஸ்தரும், அந்தணப் பெருமக்களும், மகாஜனத் தலைவர்களும், புலவர் பெருமக்களும், நகரமாந்தருட் பெரியோரும் கோயிலுள் உடன் சென்றனர். படைஞர் கோயில் வாயில்களை யெல்லாம் காவல் செய்து நின்றனர்.

விசுவநாதர் அங்கயற்கண்ணம்மையின் திருவோலக்க மண்டபம் அடைந்தனர். அங்கு முன்னமே வந்து நிறைந்திருந்த நகர மாந்தர் அனைவரும், எழுந்து நின்று மனமார வாழ்த்தி வரவேற்றனர். அந்தணப் பெரியார் பலர் முன்னின்று மகுடாபிஷேகச் சடங்கை நிறைவேற்றத் தொடங்கினர். வையை நீரும், சேது முதலாகிய புண்ணிய தீர்த்தங்களின் நீரும், தாமிரவருணி நீரும் தனித்தனியாகப் பொற்குடங்களில் வைக்கப் பெற்றிருந்தன. அந்தணர் பலர் அருமறை ஓதிப்

பரிசுத்தப்படுத்தி யிருந்த பொற்குட நன்னீரும் இருந்தது. மீனாக்ஷியின் அரசிருக்கையாகிய மதுரை நகரிலே, அவ்வம்பிகையின் அருள் பெற்றே இம் மகுடாபிஷேகம் நிறைவேறுகின்ற தென்பதைக் குறிக்க முதலில் அர்ச்சகருள் முதியோர் ஒருவர், அரசராக வந்த விசுவநாதர்க்கு அபிஷேகம் செய்தனர். பிறகு மற்ற அந்தணப் பெரியோர்களும் பிறரும் வேத மந்திரங்களைக் கூறி அபிஷேகம் செய்தனர். அபிஷேகம் ஆனபின் விசுவநாதர் அருகிலிருந்ததோர் அறைக்குச்சென்று அலங்கரிப்போர் உதவியால் அரசர்க்குரிய சகல சின்னங்களும் பொற்பட்டாடையும் பொற்பூணும் விளங்கப், பூமாலைகளும் பூண்டு வந்தனர். மீனாக்ஷி யம்பிகை சிங்காதனக்காட்சி கொடுத்த மண்டபத்திலே, அம்பிகைக் கருகிலே, விஜய நகர வேந்தர் விசுவநாதர்க்கு முன்னாளிலே கொடுத்த சிங்காதனம் வைக்கப்பெற்றிருந்தது. பேரிளம் பெண்கள் வாழ்த்துப் பாட, அந்தணர் வேத வாழ்த்துக் கூற, விசுவநாதர் அச் சிங்காதனத்தில் அமர்ந்தனர். மீனாக்ஷி யம்பிகையின் அர்ச்சகருட் பெரியோர், அப்பொழுது தாம் அணிதற்குரிய பொன் முடியும், பொற்பூணாலும், பொற்பட்டாடையும் பூண்டு முன் வந்து, மீனம்பிகை பாதத்தில் வைத்திருந்த மலர் மாலைகளை எடுத்து விசுவநாதர்க்கு அணிந்தனர். அங்கிருந்து குங்குமப் பிரசாதம் எடுத்துக் கொடுத்தனர். அப்பொழுது அருகில் நின்றுகொண்டிருந்த அரியநாத முதலியார் கொடுத்த பொன் முடியைப் பெற்று விசுவநாதர்க்குச் சூட்டினர். அம்பிகை கையில் இருந்த செங்கோலை வாங்கி அரசர் கையிற் கொடுத்தனர். வெண்குடை ஒன்று சிங்காதனத்துக்குப் பின் பிடிக்கப் பட்டது. விசுவநாதர் பக்தி விநயத்தோடு தமக்கு அவர் செய்த சிறப்பை யெல்லாம் ஏற்றுக்கொண்டார். பிறகு அங்கு

நிறைந்திருந்த நகர மாந்தர் அனைவரும் தத்தமக்குத் தோன்றியவாறு அரசர்க்கு ஆசி கூறினர். பிறகு அரியநாத முதலியார் எழுந்து நின்று, பேசத் தொடங்கினர் :

"அரசர் பெருமானே! அன்புடைப் பெரியீர்காள்! நம் பாண்டிய நாட்டில் வாழும், மக்களுக்கு இந்நாள் ஒரு நன்னாளாகும். சென்ற சில ஆண்டுகளாக இந்நாட்டில் அரசர் பாண்டியரா யிருப்பினும்,விஜய நகரத்துப் பிரதிநிதி யொருவர் கூடவேயிருந்து அரசப் பொறுப்பை தாங்க உதவி செய்திருக்கின்றூர் என்று அறிகிறோம். இன்று முதல் அந்நிலைமை மாறுபடுகின்றது. பாண்டிய வம்சம் மிகவும் பழமையான காலந்தொட்டே இந்நாட்டை ஆண்டு வந்தது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையே. சமீபத்திலே சில ஆண்டுகளாகப், பாண்டிய வம்சத்தார், தமக்கு முன்னாளில் இருந்த அத்துணைப் பெருமையோ டிருக்கவில்லை யென்று கூறுவது பொய்யாகாது. தென் காசியிலும், இராஜபாளையத்திலும், திருநெல்வேலியிலும் சிலர் தோன்றித் தாமே உண்மையான பாண்டிய மரபினர் என்று கூறிக்கொண்டனர். நம் நாட்டின் உரிமையைக் குமார கம்பண உடையாரிடம் இருந்து பெற்றுக்கொண்ட சோமசேகர பாண்டியரே, உண்மையான பாண்டிய வம்சத்திலே பிறக்கவில்லை யென்று பலர் கூறுகின்றனர். பிறகு பிந்திய காலத்திலே, விஜய நகரப் பிரதிநிதிகளாக இங்கே இருந்த லக்கன்ன, மாதன்ன என்ற ஆந்திர சகோதரர், அரசுரிமைக்கு எவரையாயினும் நியமிக்க வேண்டுமே யென்று எண்ணி, முன்னைய மன்னரது காமக்கிழத்தியின் புத்திரர்களைப் பாண்டிய ராக்கியதாகவும் ஆந்திரர் கூறுகின்றனர். இவ்வாறு,

பல வழிகளாலும் பாண்டிய ராஜ பரம்பரை தற்காலத்தில் முன்னைய பெருமையை யிழந்திருக்கிறது. சந்திரசேகர பாண்டியர் விஜய நகர வேந்தரிடம் நேரிலே விண்ணப்பித்துக் கொண்டு, தமது மரணத் தறுவாயிலே முத்திரை மோதிரத்தைக் கொடுத்து அரசை அளிக்க அதனை யேற்றுக்கொண்ட விசுவநாதர் இன்று நமக்கு அரசராக வருகிறார்.

இவர் இவ்வரசுரிமையை ஏற்றுக்கொள்ளல் எவ்வகையாற் பொருந்தும்? இவர் பாண்டியர் மரபினரல்லரே என்று சிலர் நினைக்கலாம். முன்னே பாண்டியரிடம் அரசுரிமையைக் கொடுக்காமல் ஆண்டுகொண்டிருந்த நாகம நாயக்கரை அறியாதவர் இங்கு ஒருவரும் இரார். அவர் செய்த சீர்திருத்தங்களால், இந்நாடு முழுவதும் நன்மை விளைந்திருப்பதை நாம் அறிவோம். அவர் தம் சொந்தப் பொருளைக்கொண்டே இங்கே பல கண்மாய்களும், நீர்ப்பாசன வாய்க்கால்களும் வெட்டிப் பலர்க்கும் பயன் படுத்தியதை நாம் அறிவோம். இப்பொழுது சென்ற சில வருஷங்களாக, இங்கே நகரத்திலும் கோயிலிலும் நடந்துவரும் சீர்திருத்தங்கள் எல்லாம், அவர் கொடுத்த பொருளைக் கொண்டே செய்யப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் கையில் இவ் விராஜ்ய பாரம் இருந்த காலத்தில், குடிகள் எவரும் எவ்வகையிலும் சிரம மடைந்ததாகக் கூறுவதற்கில்லை யென்பது நாம் அனைவரும் அறிந்தஉண்மையே. அந்தப் புண்ணிய புருஷரது குமாரராகிய இவ்வரசர், பாண்டிய மன்னரால் விஜயநகர வேந்தர் அங்கீகாரம் பெற்று, அபிமான புத்திரராக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறார். இவர் தம் தந்தையோடு எதிர்த்து நின்று போர் புரிந்து,

அவரைச் சிறையிலிட்டு விஜய நகரவேந்தர் ஆணை பெற்றுப் பாண்டியர்க்கு அரசைக் கொடுத்தார். அந்த அபூர்வ உபகாரத்தைப் பாராட்டியே, பாண்டியர் இவரைப் புத்திரராகச் சுவீகரித்துக்கொண்டு, 'தமக்குப்பின் தம் அரசை இவரே பெறுக' வெனக் கூறிச் சென்றார். இக்காரணத்தாலும், விஜய நகர மன்னர் மரபினரோடு பெண் கொடுத்தும், கொண்டும் சம்பந்தம் செய்து கொள்ளும் உரிமை பெற்ற நாயக்க வம்சத்திலே பிறந்திருத்தலாலும், நாகம நாயக்கர் இங்கு வருதற்கு முன்னர், இரண்டு வருஷ காலம் விஜய நகரப் பிரதிநிதியாக இருந்து நன்கு ஆண்டு, நாட்டின் நலத்தைப் பெருக்கி யிருத்தலாலும், அரசர்க்குரிய எல்லா வகைக் குணங்களும் பொருந்தியவராய் இருத்தலாலும், இந்நாட்டரசை ஏற்றுக்கொள்ள இவர் உரியவராகின்றார். நமக்குப் பேரரசாகிய விஜய நகர ஸாம்ராஜ்யாதிபதி அச்சுத தேவ ராயர், இவரிடம் பூரண அருள் வைத்து விசுவநாத பாண்டியன் என்று நாணயங்கள் முத்திரித்து, நாடுநகரங்களிற் பரப்பி அரசு புரியலாம் என்று ஆணையிட்டிருக்கிறார். இம்மன்னர் மீனாக்ஷி பிரசாதத்தாற் பெற்ற இவ்வரசியல் நெடுங்காலம் நிலைபெற்றிருக்கும் வண்ணம், நாம் அவ்வம்பிகையைப் பிரார்த்திப்போமாக. சுந்தர பாண்டியராகி அரசாண்ட சொக்கலிங்கக் கடவுளும் அருள் புரிவாராக.''

அரியநாதர் தம் மனக்கருத்தை வெளியிட்டுரைத்து, அரசரை வாழ்த்திவிட்டுத் தம் இருக்கையில் அமர்ந்தார். அப்பால் அந்தணர் ஒருவர் எழுந்து, "மீனாக்ஷி அம்பிகையின் பிரசாதம் பெற்று இந்நாட்டை ஆள வருவோர் எவரேயாயினும்,

அவர் எம் ஆதரவுக்கும் பக்திக்கும் உரியரே யாவர். க்ஷத்திரி யர்தான் அரசாளலாம் என்றிருந்த பழைய வரலாறுகள் இந் நாளிற் பயன்படுவதில்லை. இந்தத் தென் தேசத்தில் அநேக இடங்களிலே நாயக்கராஜாங்கங்கள் தோன்றிவிட்டன. அவை யெல்லாம், நன்றாகவே நடைபெறுகின்றன. இவரரசாட்சி ஏற்பட்ட பின்னர் தேவாலயங்களி லெல்லாம் நித்திய நைமித் திக பூஜைகள் நன்கு நடைபெறுகின்றன. தமிழ் நாடெங்கும் உள்ள கோயில்களில் இலட்சக்கணக்கான பொருளைச் செலவிட்டுப் பல ஆபரணங்களையும் செய்து, உற்சவங்களையும் நடத்திய நாகம நாயக்கர் குமாரர், நமக்கு அரசராக வருவது நம் தேசத்தார் செய்த புண்ணியத்தின் பயனே என்று கூற வேண்டும். இந்த அரச பரம்பரை அநேக நூற்றாண்டுகள் இந் நாட்டை ஆள்கவென வாழ்த்துகின்றோம்'' என்று கூறி அமர்ந்தார்.

பிறகு விசுவநாதர், முகமலர்ச்சியோடு எல்லோரையும் நோக்கிக் கையமர்த்தி, அன்புடைய நல்லோர்களே! இந்நாட் டின் அரசு பூண்பது மிகவும் சிரம சாத்தியமான பொறுப்பே என்பதை நன்கு அறிந்திருந்தும், உங்கள் பூர்ண ஆதரவையும் அன்பையும் கண்டேன்; நான் இவ்வரசாட்சியை ஏற்றுக் கொண்டேன். தென்னாட்டிற் பாண்டிய மரபினர் என்று கூறிக் கொள்வோர், இவ்வரசுரிமையை யான் ஏற்றுக்கொள்வது பொறாமற் போர்தொடுக்கச் சித்தமாயிருப்பதாக அறிகின் றேன். சென்ற சில ஆண்டுகளாக நடைபெற்று வருகின்ற கோயில் திருப்பணிகள் நன்கு நிறைவேற வேண்டும். கம்பம் என்ற ஜமீனில் இருக்கும் தலைவர் ஒருவர், என்னை அரசராக அங்கீகரியாமற் போர்க்குச் சித்தமாயிருக்கிறார். இங்கு நெடு நாளாகச் சிறு சிறு நாடுகளுக்குத் தலைவராயிருந்தோர் பலர்

உண்டு என்று அறிவேன். என்னோடு ஆந்திர நாட்டிலிருந்து இங்கு வந்து எனக்கு உதவியாய் இருப்போர் பலருளர். இவர் அனைவர்க்கும் என் தந்தையார் விருப்பிற் கிணங்க நான் என்னால் இயன்றதைச் செய்யவேண்டும். நான் எது செய்யினும் நாட்டின் நன்மை யொன்றையே நாட்டமாகக் கொள்வேன் என்பதை எல்லோரும் அறியக் கூறுகிறேன். மீனாக்ஷியம்மையின் திருவருளால் எல்லாம் நன்கு நிறைவேறவேண்டும் என்'' றார். பிறகு எல்லோர்க்கும் சந்தனம் தாம்பூல முதலியன வழங்கப்பட்டன. அரசர் நகர் வலம் வந்து அரண்மனை அடைந்தார். ஆலயம் வந்தோர் மெல்ல நடந்து தத்தம் இடம் அடைந்தனர்.

ஏழாவது அத்தியாயம்

பாளைய வகுப்பு

நாகம நாயக்கர் குமாரர் விசுவநாத நாயக்கர் மதுரைச் சிமைக்கு அரசராயினர். குடிமக்கள் எல்லோரும் புது அரசரிடம் பேரபிமானம் காட்டினர். விசுவநாதர் தாம் தொடங்கிய திருப்பணிகளை மேலும் மேலும் கவனித்து நடத்தினர். மதுரைக் கோயிலிலும், திரிசிரபுரம்,ஸ்ரீரங்கம் முதலிய தலங்களிலுள்ள கோயில்களிலும், 'விஜய நகர வேந்தர்பிரான் நல்வாழ்வு பெற்றுவாழ்க' என்று விசேஷபூஜைகள் பல நடத்தினர்;தந்தையாராகிய நாகம நாயக்கர் பெயராற் சில கிராமங்களை வாங்கி மீனாக்ஷிகோயிலுக்குத் தரும சாசனம் செய்தனர்.

அரசர்க் கரசராகிய விஜய நகர வேந்தர் ஆணைக்கிணங்க நாடெங்கும் தெய்வ பக்தி பெருகுதற்கு ஆவன செய்தார். காவிரிக் கரையையடுத்த இடங்களில் காடுகளை வெட்டி வயல் களாக்கி, உழவர்களுக்கு உதவி புரிந்தார். பாண்டிய நாட்டி

னுள்ள பிற புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் செல்லும் வழி களையும் சீர்திருத்தம் செய்தார். கள்வர் மறைந்து வாழ்ந்து வழிப்பறி செய்தற்கு இடமாயிருந்த காடுகளை யெல்லாம் அழித்தார். வியாபாரத்தின் பொருட்டுத் தென் கோடியி லிருந்து வடகோடி வரையிற் சென்று வந்த கூட்டத்தார்க்கு, அவ்வவ்விடங்களில் உள்ள தேசங்களின் தலைவர்கள் போக்கு வரவு சௌகரியம் செய்துதரும் வண்ணம், சக்கரவர்த்தியின் ஆணை பிறந்தது. அவ் வாணையை நிறைவேற்றக்கருதி வீரர் களுட் சிலரைத் தெரிந்தெடுத்து வியாபாரக் கூட்டங்களோடு காவலாகச் சென்று வருமாறு ஏற்பாடு செய்தார். காசியி லிருந்து இராமேசுவரம் வரையில் யாத்திரை செய்வோர்க்கு யாதொரு தீங்கும் இடையூறும் நேரிடா வண்ணம் காவல் அளிக்க வேண்டும் என்று எல்லா அரசர்களும் ஒரு மனத் தோடு தீர்மானஞ் செய்ததால், அதற்கிணங்கப் பாண்டிய நாட்டில் இராமேசுவரம் செல்லும் வழியில் வெகு நாளாய்க் குடியிருந்து அவ்வழியில் வருவோரை அலைத்து வந்த கள்வர் கூட்டங்களை, இருந்த இடம் தெரியாமல் அழித்தார். இவ் வாறு பலவகைப்பட்ட நன்மைகளையும் பொது மக்களுக்குப் பயன்படும்படி செய்தார்.

பிறகு, தமக்குப் போர்க்களங்களில் உதவி புரிந்த தம் இனத்தவராகிய அன்பர் பலர்க்கும் நலம் புரிய எண்ணினார். பொன்னும் பொருளும் கொடுத்துத் திருப்தி செய்துவிடலாம் என்று எண்ணிய சிலர்க்கு அவ்வண்ணம் செய்தார். பெரிய வீரர்களுக்கு அவரவர் நிலைமைக்கும் மதிப்புக்கும் தக்கவாறு மரியாதைகள் வழங்கப் பெற்றன. அன்றியும், பாண்டிய நாட் டிலேயே பலர் நெடுநாளாகச் சிறு சிறு நாட்டுத் தலைவராயிருந் தனர். அவர்களையும் பகைத்துக் கொள்ளாமல் வேண்டுவன செய்யவேண்டி யிருந்தது. நன்னாள் ஒன்றில் இவ் விருவகைத் தலைவர்களையும் தம் அரண்மனைக்கு அழைத்தார்.

பிரபுக்கள் பலரும் மதுரைக்கு வந்தனர். விசுவநாதர் பாண்டியர் அரண்மனையில் மந்திராலோசனை செய்யும் அரங்க மண்டபத்தை யடைந்தனர்; அங்கு நடுநாயகமாய்க் கருங்கல் மேடையில் அமைத்த தம் அரியணையில் வீற்றிருந்தார். அரியநாத முதலியார் அருகிலிருந்ததோர் சித்திர வேலைப் பாடு அமைந்த ஆசனத்தில் அமர்ந்தனர். மற்றுமுள்ள பிரபுக்க ளெல்லாம், சிறிது விலகிச் சுற்றிலுமிருந்த ஆதனங்களில் உட்கார்ந்தனர். வீரர் சிலர் உருவிய வாளுடன் வாயில்களைக் காவல் செய்து நின்றனர். அரியநாத முதலியார் எல்லாப் பிரபுக்களையும் வரவேற்றுபசரித்து அவரவர்க்கமைந்த இடங் களைக் காட்டி அமர்த்தினர். எல்லாரும் அமர்ந்த பிறகு பிரபுக்களுள் முதியவராய் இருந்த ஒருவர் எழுந்து அரசரை வாழ்த்தினர். அப்பொழுது எல்லோரும் எழுந்து நின்று வணங்கி அமர்ந்தனர். பிறகு அங்குப் பின்வரும் சம்பாஷணை நிகழ்ந்தது.

அரசர்:—அன்பர்களே, பிரபுக்களே, உங்களோடு இந்த ராஜாங் கத்தின் நன்மையைக் கருதி ஆலோசனை செய்யவேண்டிய ஒரு விஷயத்தை இங்குக் கூற விரும்புகிறேன். விஜய நகரத்தில் சேனைவீரர் பலர் உளர் என்பதையும், ஒவ் வொருவரும் அவரவர் மதிப்புக்குத் தக்க படைஞரை வைத்திருக்க வேண்டும் என்பதையும், அப்பொறுப்பின் பொருட்டு, அரசர்பிரான் அத் தலைவர்களுக்குச் சில சிறு இராஜ்யங்களைக் கொடுத்திருக்கின்றார் என்பதை யும், முதலில் இங்கே கூற விரும்புகிறேன். என் தந்தை யும் இத் தலைவர்களுள் ஒருவரே. நானும் ஒருவனாக இருந்தேன். விஜய நகரத்தின் சைன்யக் கணக்கு எடுப் பது சிரம சாத்தியமே. ஏனெனில், இத்தலைவர் ஒவ்

வொருவரும் நல்ல பயிற்சியோடு கூடிய பத்தாயிரக்கணக் கான படைஞரை வைத்திருக்க வேண்டும். நவராத்திரி முதலான உற்சவ காலங்களில், அரசர்பிரான் எல்லாப் படைகளேயும் பார்வையிடுவதுண்டு. அக் காலங்களில் இத் தலைவர் எல்லோரும் தம் படைகளுடன் வருவர். இவர்களின் கூட்டம் பத்துக் காதத்துக்கு மேலும் பரவி யிருக்கும். இவ்வகை ஏற்பாட்டால் அரசாங்க நிதியி லிருந்து அதிக செலவு ஏற்படாமலே பெரும்படை யிருப்பது சாத்தியமாகிறது. போர் நேரிடும் காலங்களில் எல்லாப் படைஞரும் நாட்டைக் காக்க உதவுகின்றனர். நம் நாட்டிலும் அடிக்கடி போர் நிகழ்வதால், என்றும் குறைவுபடாத பெரும்படை யொன்று இருக்க வேண்டு வது அவசியமாகும். அரசுக்குரிய அங்கங்களில் படை யையே முதலாவதாகத் திருவள்ளுவரும் கூறியிருக் கின்றார். ஆகையால் நம் நாட்டிற் போர் புரியும் பயிற்சி பெற்ற ஆண் மக்கள் அனைவரும், படைஞராயிருந்து நாட்டுக்குப் பயன்படத் தக்கதோர் யோசனையை இங் குக் கூற விரும்புகிறேன். நம் நாட்டின் கோட்டை மதில் எழுபத்திரண்டு கொத்தளங்களை உடையது. எந்தப் பகைவர் போர்க்கு வந்தாலும் முதலில் நமது நக ரத்துக்குத்தான் வருவர். இந் நகரத்துக் கோட்டை இப்பொழுது புதிதாய் உறுதியாய் நன்கு அமைக்கப் பட்டுள்ளது. அதில் உள்ள எழுபத்திரண்டு கொத்த ளங்களும், எழுபத்திரண்டு தலைவர்களாற் காக்கப்பட வேண்டும். அத் தலைவர்கள் இக் கோட்டையைக் காக் கும் பொருட்டுத் தம் உயிரையும் கொடுக்க வல்லவரா யிருக்க வேண்டும். தலைவரைக் கூறியதால் அவர் கீழ்

உள்ள ஆயிரக்கணக்கான படைகளையும் இக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். நாட்டில் உண்மையான அபிமானமின்றிக் கூலிக்கு வேலை செய்வோர் நாட்டின் மானத்தைக் காக்க உதவமாட்டார். ஆகையால் அன்பர்களே! இந் நாட்டில் எழுபத்திரண்டு பாளையங்கள் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறேன். முன்னமே இருப்பவை சிலவற்றையும் இவற்றோடு சேர்க்கும்போது புதுமையால் வருபவை நாற்பதுக்கு மேல் இல்லை. இப் பாளையங்களின் தலைமைப் பதவி நாட்டினிடம் பூரண அபிமானமுடைய உங்களுக்கு அளிக்கப்படும். இச் சிறு நாடுகள் உங்கள் தலைமைக்கும் பதவிக்கும் தக்க வருவாய் உடையனவாய் இருக்கும். நாட்டில் வரும் வருவாயை மூன்று பகுதியாக்க வேண்டும். ஒரு பகுதியை உங்கட்கே வைத்துக்கொள்ளலாம். மற்றொரு பகுதியைத் தேச க்ஷேமத்தின் பொருட்டு நீங்கள் வைத்துக்கொண்டிருக்கும் படைஞர்க்காக உபயோகிக்க வேண்டும். மூன்றாம் பகுதியை இராஜாங்கத்தின் பொது நன்மைக்கு உதவும்படி இராஜாங்க நிதிச்சாலைக்கு அனுப்பவேண்டும். நாட்டிலே போர்கள் நிகழும் காலங்களில் நீங்கள் எல்லோரும் ஒரே மனத்தோடு நாட்டைக் காக்கும்பொருட்டுப் போர்புரிய வரவேண்டும். எவரேனும் இராஜாங்கத்துக்கு விசேஷநன்மை புரிவாராயின், அவரிடம் வாங்கும் மூன்றிலொரு பங்கு அரசிறை வாங்காமல் விடப்படும். இராஜாங்கத்தார் விசேஷ சன்மானங்கள் செய்வதைப்பற்றி இங்கு அதிகம் கூறவேண்டுவதில்லை. உங்களுக்குப் பொது வகையிற் பாளையக்காரர் என்ற பட்டம் அளிக்கப்படும். சிறப்பாக அவரவர் செய்யும் பணி

கருதிப் பெறும் விருதுகள் வேறுகும். நான் கூறிய இவ்வேற்பாட்டில் உள்ள நன்மைகளை யோசித்துப் பாருங்கள். உங்கள் ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் மக்கள் நல்வாழ்வுக்குரிய சகல அதிகாரமும் உங்களைச் சேர்ந்ததே. ஆக்கவும், அழிக்கவும், காக்கவுமுள்ள அதிகாரம் முழுவதும் நீங்கள் செலுத்தலாம். உங்கள் நாடுகளில் நீங்களே அரசர்கள்போல் இருக்கலாம். உங்களில் எவரும் அடுத்துள்ள பாளையக்காரரோடு போர்புரிய எழலாகாது. உங்களிடம் உள்ள படைகள் நாட்டின் நன்மைக்காகப் பயன்பட வேண்டுமேயொழிய, உங்களுக்குள் ஒருவர்க்கொருவர் பகைத்துச் சண்டையிட்டுக் கொள்ளப் பயன்படலாகாது. இது முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். உங்களிற் பலர் மிக்க அனுபவம் படைத்த போர்வீரர்களா யிருக்கிறீர்கள். ஆகையால், நீங்கள் எல்லோரும் வெகு சீக்கிரத்தில் நம் நாட்டிற் பெரியதோர் நிலையானபடை இருத்தற்குவேண்டிய ஏற்பாடு செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். இன்னார் இன்னார் இன்னின்ன பாளையம்பெறுவர் என்ற விபரமும், உங்கள் அதிகாரங்களை வகுக்கும் அதிகாரப் பத்திரங்களும், இன்னும் ஒருவார காலத்தில் இங்கிருந்து உங்களுக்கு அனுப்பப்பெறும். நான் கூறியவற்றிலே ஏதேனும் அபிப்பிராய பேதம் இருந்தால் தெரிவிக்கலாம்.

சேதுபதி:—அரசே, இங்கிருக்கும் தலைவர்களின் சார்பாக முதலில் எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன். ஸ்ரீராமபிரான் சேதுவைக் காக்குமாறு அமர்த்திச் சென்ற மறவர்களின் வழியில் வந்த நான், மிகவும் பழ

மையான காலத்திலிருந்தே, இப் பாண்டிய நாட்டு மன்னர்க்குப் போர்நேரிடும் காலங்களில் உதவி புரிந்து வருகிற குடியிற் பிறந்தவனாவேன். ராஜ பக்தியும் தேச பக்தியும் எம்மரபுக்கு இருவிழிகளாம். எங்கள் நாட்டில் உள்ள மறவர்கள் போர்புரிவதில் எவர்க்கும் பின்னிடாத வீரமுடையவர்கள். இவர்களை இந்நாட்டின் பொருட்டுத் தம்மால் இயன்ற பணி புரியுமாறு தூண்டுவதே எனது முழு நோக்கமாகும். இப்பொழுது இங்கு அரசர் அருளிச் செய்த பாளையப்பட்டு எழுபத்திரண்டில், அவரவர்க்குரிய படைத்தொகுதியின் அளவையும் நிர்ணயித்துக்கொடுத்தால், பிற்காலத்தில் பெருமை சிறுமை முதலிய காரணங்களால் வழக்காட இடமில்லாதிருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசர்:—பாளையப்பட்டுக்கள் எல்லாம் ஒரே அளவாய் இருப்பதற்கில்லை. இராமநாதபுரம் மிகவும் பழமையான ஜமீன். ஆகையால், அதன் அளவு மற்றெல்லா ஜமீன்களைக் காட்டிலும் பெரிதாகவே இருக்கும். திண்டுக்கல், பழநி, ஆய்க்குடி முதலியவையும் பழமையான ஜமீன்களே. அந்தந்த ஜமீன்களின் வருவாய்க்குத் தக்கபடியே, படைகளின் சங்கியை இருக்கும். இந்த அளவிலேயுள்ள பெருமை சிறுமைகளால், அவரவர் பாண்டிய நாட்டின் பொருட்டுச் செய்தற்குரிய சேவையின் அளவு மதிக்கப் படும் என்று எண்ணலாகாது. புதிதாக நான் இப்பொழுது சிலர்க்கு ஜமீன்கள் கொடுப்பதாகச் சொன்னேன். என் தகப்பனாரிடம் மிக்க நண்பு பூண்டவரும், எனக்கும் அநேக சந்தர்ப்பங்களில் உதவிசெய்தவருமாகிய இராம பத்திர நாயக்கரை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

அவர்க்கும் பெரியகுளத்துக்கு அருகில் உள்ள வடகரை ஜமீனைக் கொடுக்கிறேன். எல்லா ஜமீன்தார்களிடமும் எனக்கு ஒரேவிதமான அபிமானம் உண்டு என்பதை வாயாற் கூறவேண்டா. நீங்கள் எல்லோரும் சகோதரர் போலவே பழகுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

தொண்டைமான் :—மன்னர் பிரானே, சமீப காலத்திலே செய்த உதவிகளின் பொருட்டு இங்குள்ள பிரபுக்களிற் சிலர்க்கு புதிதாகச் சில பாளையங்கள் உதவப்படுவது நியாயமே. நான் சோழ நாட்டின் அருகில் இருப் பினும், இந் நாட்டின் அரசரோடு அநேக ஆண்டுகளாகத் தொடர்புடையராயிருந்த குடியில் வந்துளேனுகையால், இந் நாட்டுச் சிற்றரசருள் ஒருவனுகவே சேர்ந்திருக்கி றேன். போர் நேரிடும் காலங்களில் நானும் எனக்குக் கீழ் அடங்கிய குடிகளும்,இந் நாட்டுக்கு எங்களால் இயன்ற உதவி செய்யச் சித்தமாயிருக்கிறோம். மூன்றில் ஒரு பங்கு வருவாயை அரசினர்க்கு அளிப்பது என்பது, நாங்கள் எல்லோரும் அங்கீகரிக்கக்கூடிய ஏற்பாடே யாகும். மூன்றில் இரண்டு பங்கு வருவாயை வைத்துக் கொண்டு எங்கள் நாடுகளை நன்கு ஆண்டு, அரசினர்க்கு வேண்டுங் காலங்களிற் படைகளைச்சேர்த்துக் கொடுத்தல் எங்கள் கடமை யென்றே கொள்வோம். நாங்கள் ஆளும் நாடுகள் சிறியவையாயினும், சக்கரவர்த்திக்கும் அரசர்க்கும் அவசிய மேற்படுங் காலங்களில், உரிய பணி யைப் புரிய என்றும் பின்னிடோம் என்று உறுதியாய்க் கூறுகிறேன்.

அரியநாதர்:—பிரபுக்களே! இப்பொழுது நான் இங்கே ஒன்று கூற விரும்புகிறேன். நம் நாட்டுக்குச் சிறிது மேற்கே

கம்பம் என்ற ஒரு சிறிய ஜமீன் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த ஜமீன்தார் தாம் சோழ பரம்பரையைச் சேர்ந்தவர் என்று கூறிக்கொள்கிறார். நம் அரசர்க்குப் பணியாமல் எதிர்த்து நிற்கிறார். அவரை முதலில் அடக்க வேண்டுவது அவசியமாகிறது. அவ்விஷயத்தில் அரசர் நேரிற் செல்வதைக் காட்டிலும், உங்களில் யாரேனும் போய் வருதல் கூடுமாயின் நன்றாயிருக்கும்.

இராமபத்திர நாயக்கர் :—என்றும் அரசர்க்கு உதவியாக நிற்க முன்வரும் பிரபுக்கள் பலர் இருக்கும் இச்சபையில், நான் முன்னே எழுந்திருப்பது குற்றமேயாகும். ஆயினும் புதிதாக ஒரு ஜமீனைப் பெறும் நிலைமையில் உள்ளவர்களில் ஒருவனாகிய நான், என்னால் இயன்ற பணியை விரைந்து செய்ய வேண்டுமென்றே முதலில் எழுந்தேன். நாளைக்கே வேண்டுமாயினும் போர்க்குச் செல்லச் சித்தமா யிருக்கிறேன்.

அரசர்:—போர்க்கு அவசரப்பட வேண்டாம். முதலில் அவர்க்குத் தூது அனுப்பி, என்ன காரணத்தால் அவர் எதிர்த்து நிற்கிறார் என்பதை அறிந்துகொண்டு, தண்டோபாயமன்றி வேறு வழியில்லை யென்று தெரிந்தால் பிறகு போர் தொடங்குவோம். உங்கள் எல்லோரையும் அடிக்கடி மதுரை நகரத்தில் சந்திக்க விரும்புகிறேன். பொது நன்மைக்கான காரியங்களையெல்லாம் உங்களோடு கலந்து யோசித்தே நிறைவேற்றக் கருதுகிறேன். சமீப காலத்திலே வேண்டுமளவு போர் புரிய அவகாசம் கிடைக்கும். எட்டையபுரம் ஜமீன்தார் உதவியை அதிகமாக எதிர்பார்க்கவேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படும்போலிருக்

கிறது. கம்பம் தலைவரை அடக்கும் பணியை என் தந்தையின் துணைவராயிருந்த உமக்கே கொடுக்கிறேன். இன்று இங்கு நாம் எல்லோரும் கூடியது, இன்னும் இவ்வாறு பலமுறை கூடி அன்போடு கலந்து பேசி, நாட்டுக்கு நன்மை செய்யத் தோற்றுவாயா யிருக்கு மென்றே நம்புகிறேன். அவசியம் நேரிடும் காலங் களில் தூதனுப்புகிறேன். இனி எல்லோரும் விடை பெறலாம்.

பிறகு சபை கலைந்தது. பிரபுக்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களை அடைந்தனர்.

எட்டாவது அத்தியாயம்

கம்பப் போர்

தளவாய் அரியநாத முதலியார், விஜய நகர வேந்தர் ஆணை பெற்றுத் தென்னாட்டுக்கு வந்தது முதல், அந்நாட்டில் வாழ்ந்த மக்களுக்குப் பலவகையிலும் நன்மை புரிந்து வந் தார்; பாண்டிய நாட்டிலே திருநெல்வேலிப் பக்கத்திலும் பிற இடங்களிலும், விசுவநாதர்க்கு அடங்காமல் எதிர்த் தெழுந்த பலரையும் அடக்கி நல்வழிப்படுத்தும் பணியை ஏற்றுக்கொண்டார்; போர்த் திறத்திலும் ராஜதந்திரத் தேர்ச் சியிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராயிருந்த அவர், காஞ்சீபுரத்துக் கருகில் இருந்த தம் சுற்றத்தாரை யெல்லாம் சோழவந்தானிற் குடியேற்றிப் பாண்டிய நாட்டின ராகவே ஆயினர்; திருநெல்வேலிப் பக்கம் செல்லு முன்பு கம்பம் கலகம் என்னவாகும் பார்ப்போம்' என்று சிறிது பொறுத்திருந்தார்.

மதுரையிலிருந்த அமைச்சருள் ஒருவரும், தர்ம சாஸ்திரங்களை நன்குணர்ந்தவருமாகிய சுந்தரேச சாஸ்திரிகள் என்பவர் கம்பத்து மன்னரோடு தூது பேச அனுப்பப்பட்டார். போர்த் தொழிலிலே பெரும் பயிற்சி பெற்றிருந்த கம்பத்து ஜமீன்தார், தர்மநெறிக் கிணங்கத் தூதராக வந்தவரை வரவேற்றார். பிறகு அவர்கள் போர் தொடங்க வேண்டுவதன் அவசியத்தைப்பற்றிப் பின்வருமாறு பேசிக்கொண்டனர்.

தூதர்:—ஐய, பிரபுவே, சந்திரசேகர பாண்டியர்க்குப் பிறகு, பாண்டிய நாட்டு அரசுரிமையை ஏற்றுக் கொண்டிருக்கும், மஹாராஜ மான்ய ராஜஸ்ரீ விசுவநாத நாயடு அய்யலுகாரு அவர்கள் அனுப்பிய தூதனை வந்திருக்கின்றேன். இங்கே தெரிவிக்குமாறு என்னிடம் கூறிய செய்திகளைக் கூறுகின்றேன். பொறுமையுடன் கேட்டுத் தக்கவாறு மறுமொழி கூற வேண்டுகிறேன்.

கம்பம் ஜமீன்தார்:—ஐயரே, நீர் பிராமணராயிருப்பதாலும், தூது வந்திருப்பதாகக் கூறுவதாலும் உம்மோடு நாம் நேரிலே பேச நேரிட்டது. அந்நாட்டிலிருந்து வரும் பறவைகள்கூட நம் நாட்டிற் பறக்கக் கூடாது என்று கண்டிப்பான ஆணையிட்டிருக்கிறோம். இனி நீர் சொல்ல விரும்புவதைச் சொல்லலாம். நாம் தரும் மறுமொழியையும் அங்கே போய்த் தெரிவிக்கலாம்.

தூதர்:—ஐயா, தலைவரே, எம் அரசர் கூறிய மொழிகள் இவை: "பாண்டிய மன்னரது ஆட்சிக்குட்பட்ட சிறு நாடாகிய கம்பம் ஜமீனின் தலைவராயிருக்கும் தாங்கள், தற்காலம் பாண்டிய நாட்டு மன்னராகச் சக்கரவர்த்தியாரது ஆணை பெற்று வந்திருக்கும்எம்மிடம் நேரில் வந்து உரிய கப்பம் செலுத்தி வணங்கிப் போகாததன் காரணத்தை அறிய

விரும்புகிறோம். சிற்றரசராகிய நீர் பெரும் படைகளைச் சேர்த்துப் போர்க்கு ஆயத்தம் செய்வதாகவும் அறிகிறோம். நமது நாட்டினுள் எம் நாட்டு மக்கள் போக்கு வரவு செய்யவும் இடந்தராமலிருக்கின்றீர். எம்மரபினரை ஏளனம் செய்ததாகவும் ஒற்றரால் அறிந்தோம். சோழ மரபிற் சேர்ந்தவராக நீர் உம்மைப்பற்றிப் பேசிக் கொள்கின்றீராம். அது காரணமாக எம்மிடம் நீர் பகைமை பூண்டிருப்பதாகவும் அறிகின்றோம். நாம் அரசுரிமை தாங்கிய நாள் முதல், இன்று வரை நீர் நம்மைக் கண்டுகொள்ளவாராததாலும், நம் தூதரை அவமதித்ததாலும், பாண்டிய நாட்டுக்குள் சுயேச்சை பெற்ற தனிநாடு என ஒன்றிருப்பது பொருந்தாமையாலும்,நீர் அடங்கிப் பணிந்து மற்றக் குறுநிலத்தலைவரைப்போன்று பாளையப் பட்டுடையார்களில் ஒருவராகச் சம்மதிக்க வேண்டும். அதற்கு இசையீராயின், உடனே போர்க்கு எழுந்து, வரும் பயனைப் பெறச் சித்தமாகவேண்டும். எம் தூதரிடம் உரிய மறுமொழி தந்தனுப்ப வேண்டுகிறோம்.''

இஃது எம் அரசர் அருளிய தூதுரையாகும் யான் உங்களிடம் வேறு என்ன கூறப்போகிறேன். வீரசிகாமணியாகிய வீரசேகர சோழரைப் போரில் வென்று, வீர சொர்க்கம் அடைவித்த நாகம நாயக்கர் குமாரர் சமானியரன்று. அவரது பகையைத் தேடிக்கொண்டு வீணில் அறிவு தேடிக்கொள்ள வேண்டா. இருக்கும் நிலைமைக் குக் குறைவு நேரிடா வண்ணம், எது யுக்தமென்று தோன்றுகிறதோ அதைச் செய்துகொள்ள வேண்டுகிறேன்.

கம்பம் ஜமீன்தார்:—ஐயா, நமது அரசர் சுத்த க்ஷத்திரியராய் இருப்பாராயின், இவ்வாறு தூது அனுப்பியிருக்க மாட்டார். நாம் யார் என்பதை அவர் இன்னும் அறியவில்லையாயின்,இன்று அறியச் செய்கிறோம். வீரசேகர சோழர் பாண்டிய நாட்டு மன்னரைப் போர்க்களத்திலிருந்து புறங்கொடுத் தோடச்செய்த போரில், அவருடன் கூட இருந்து போர் செய்த வீரருள் ஒருவர் என்று எம்மை அவர் அறிவாராக. மானமிழந்த பாண்டிய மன்னரைச், சிறையாளரினும் கேவலமாக வைத்திருந்த நாகம நாயக்கர் எமக்குப் பகைவர் என்பதையும் அறிவாராக. பாண்டியரைத் துரத்தியடித்த வீரருள் ஒருவராகிய நாம்இங்கு எப்படி வந்தோம் என்று கேட்கலாம். சோழர் இந்நாட்டைக் கைப்பற்றி யாண்ட காலத்தில், யாம் போர்க்களத்திலே செய்த தொண்டின் திறத்தை மெச்சி, அவர் இந்நாட்டை நமக்கு அளித்தார். நாகம நாயக்கர் இங்கிருந்த வரையில், நாம் அவர்க்கு ஒரு காசும் கொடுக்காமல் எதிர்த்த வண்ணமாகவே யிருந்தோம் என்பதையும் கூறுகிறோம். பாண்டியரிடம் அரசை ஒப்பிக்காமைக்குக் காரணமாக அவர் கூறியவற்றுள் ஒன்று, இந்நாட்டிற் பலர் உரியகாலத்தில் வரிகொடாமல் இருந்தனர் என்பதாகும் என்று நினைப்பூட்டுகிறோம். அவ்வாறு பலர் பணிந்து வரிகொடாமல் இருக்கும் வண்ணம். இந் நாள்வரை செய்து வருபவருக்கு நாமே தலைவரா யிருக்கிறோம் என்பதை நும் அரசர் அறிவாராக. இன்று அவர் பெற்ற தலைமையை யாம் அங்கீகரித்து, எளிதில் வணங்கிவிடுவோம் என்று அவர் எண்ணியது அவரது அறியாமையையே விளக்குகின்றது. பகை

வர்க்குப்பணிவது எம் வழக்கமில்லை. போர்க்குவருவாரா யின், பாண்டியரைப் புறங்கொடுத் தோடச்செய்த படை ஞர் எம்மிடம் இருக்கின்றனர் என்று அறிவிப்பீராக.

தூதர்:—ஐய, நீர் சோழ மன்னர் படைத் தொகுதியோடு இந் நாட்டிற் போர் புரிய வந்த காலத்திலே, உமக்கு இருந்த வலிமை பெரிதென்றே வைத்துக் கொள்வோம். நாகம நாயக்கர் போர் புரிந்து வீரசேகரரை வென்று, அவர் மரபை அழித்த காலத்தில் நீர் எங்கு ஒளித்தீர்? இந் நாள் வரையிலும் பாண்டிய மரபினரை எதிர்க்குமாறு பலரைத் தூண்டியதாகக் கூறுகின்றீர். எதிர்த்தவர் எல் லோரும் இப்பொழுது எங்கு இருக்கின்றனர்? பெரும் பான்மையோர் பணிந்தனர். சிலர் சிறைகளிற் சிக்கி வருந்துகின்றனர். சிலர் எமனுலகு ஏகினர். தங்களை ஒருவரும் அடக்க வரவில்லையென்று கூறுகின்றீர். நாக மர் படை இங்கு வந்த காலங்களில், எதிர்த்து நிற்க யாருமின்றி இங்கிருந்த மனிதரெல்லாம் உயிர்தப்ப ஓடி மலைகளில் ஒளித்துக் கொண்டனராம். அப்பொழுது தங்கள் படைஞர் தக்க போர்ப்பயிற்சி பெறவில்லையோ என்று அறிய விரும்புகிறேன். பாண்டியநாட்டுப் படை யை எதிர்த்துப் போர்புரியத் துணியும் தங்களது படை யின் அளவென்ன, வலியென்ன வென்பதை அறிவீர் கள் தங்களுக்கு நேரில் வரவிருக்கும் தீங்கை தாங்கள் அறிந்துகொள்ளாதிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதே. தாங்கள் இந்நாட்டிற் சோழரால் நியமனம் பெற்றவரா கவே இருக்கலாம். தங்களுக்கு முன் இங்கிருந்த பரம்ப ரையார்க்கு, முன்போலத் தலைமையளிக்க வேண்டுவது எம் அரசர் பொறுப்பாகும் என்பதை தாங்கள் அறிய

வேண்டும். தாங்கள் முன்னே சுதந்திரத்தோடு வாழ்ந்த தாகக் கூறுவது மெய்யாய் இருப்பினும் இருக்கலாம். இப்பொழுது பாண்டிய நாட்டில் ஒரு சிறு பகுதியில் இருக்கும் நிலைமையால், எம் அரசர்க்குப் பணிந்து வாழ்வதே தகுதியாம் என்பது தங்களுக்குப் புலப்பட வில்லையா? பாண்டிய மன்னர்க்குப் பணிந்து வாழ்தலால், எனக்கு என்ன நன்மை விளையும் என்று தாங்கள் கேட் கலாம். பாண்டிய மன்னராகி இப்பொழுது இருப்ப வர், விஜய நகரச் சக்கரவர்த்தியுடைய பூரண தயைக்குப் பாத்திரமானவர். இப்பாரத தேச முழுதும் அநேக அர சர்கள் விஜயநகர ஸாம்ராஜ்யாதிபதியைப் பணிந்து வாழ் கின்றனர் என்பதையும், பணியாதவர்கள் நாடிழந்தி ருக்கின்றார்கள் என்பதையும் தாங்கள் அறியவேண்டும். இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தில் ஒரு அங்கமாக இருக்கும் பாக்கியம் கிடைக்கவேண்டுமே யென்று, பலர் நம் சக்கரவர்த்தியின் அன்பைப்பெற விரைந்து வருகின் றனர். தேசத்தின் பொது நன்மை ஒரு பெருந்தலைவர்க்கு அடங்கியிருப்பதனால் வளரும் என்பதை, நும் அரசர் என்று தாங்கள் கூறுகின்ற வீரசேகர சோழரும் அறிந் திருந்தார். அவர் கிருஷ்ணதேவ ராயர்க்குப் பணிந்து திறையளந்ததைத் தாங்கள் அறிவீர்கள். வியாபாரமும், செல்வ விருத்திக்காகிய தொழில்களும், மனிதர் அறிவு வளர்ச்சிக்குரிய பிற முயற்சிகளும், தெய்வசிந்தனை வளர் தற்குரிய வழிகளும் நன்கு விருத்தியடைய வேண்டுமா யின், ஒரு தலைவர்க்குக் கீழே ஒரு முறைப்பட்ட ஆட்சியில் அடங்கி வாழ்வது நன்றாம். ஆகையால் போர்ப் பயிற்சியும் வீரமும் சிறந்த தங்களது படைஞர்

பலர் வீணே அழியாமல், இந்நாட்டுக்குப் பயன்படும்படி சமாதானமாக வாழ வழி தேடிக்கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். எம் அரசர் கருத்து இதுவேயாகும்.

கம்பம்:—ஐய, தூதரே, நீர் தூதர் பேசுதற்குரிய அளவுக்கு மிஞ்சிப் பேசிவிட்டீர். இனி நீர் பேசவேண்டா. எட்டினுற் குடுமியையும், எட்டாவிட்டாற் காலையும் பிடிக்கும் அற்பர் குடியில் நாம் பிறந்தோமில்லை. இன்றோடு நம் மரபே அழிந்து போவதாய் இருப்பினும், நாம் நும் அரசர்க்குப் பணிந்து வாழ இசையோம். எம் உடம்பில் உயர்ந்த வீரர் மரபின் உதிரம் ஓடுவதாக நும் அரசர் அறிவாராக. நாளையே போர் தொடங்கும். மதுரை நகரத்திலே, எழுபத்திரண்டு கொத்தளங்களோடு கூடிய நும் அரசர் அமைத்த கோட்டையின் வலிமையைச் சோதிக்கத்தக்க சந்தர்ப்பம் வந்திருப்பதாக அவர்க்கு நாம் கூறியதாகத் தெரிவிக்கலாம். இனி நீர் போகலாம்.

தூதர்:—ஐய, கோபம் வேண்டா. ஆண்மையும் வீரமும் சிறந்த ஒரு மரபு அழிய வேண்டுமா என்பதே, என் உள்ளத்தில் எழுந்த எண்ணமாம். வீரர்களை அவர்கள் திறமைக்குத் தக்க பணிகளிற் செலுத்த அறியாத தங்களோடு பேசிப் பயன் என்ன? நாளையே போர் தொடங்கும். தங்களது நாட்டைக் காத்துக் கொள்ளத் தக்க உதவிகளைத் தேடிக்கொள்ளும். நாளைக் காலையில் மதுரைப் படைஞர் தங்களது நாட்டைச் சூழ்வர். நான் விடை பெற்றுக் கொள்கிறேன்.

அத் தூதர் உடனே புறப்பட்டு வேகமாக மதுரைக்கு வந்து, அரசரையும் தளவாய் அரியநாத முதலியாரையும் கண்டு, தாம் தூதுபோய் வந்த செய்திகளைக் கூறினர். அர

சரும் அமைச்சரும் சிறிது நேரம் மந்திராலோசனை செய்தனர். பிறகு முன்னே முடிவு செய்தது போல, இராமபத்திர நாயக்கரை அங்குப் போர்புரிய அனுப்புவதாகத் தீர்மானித்தனர் இராமபத்திரர்க்கு கட்டளை அனுப்பப்பட்டது.

அவர் தம் பெரும் படையோடு வெகு விரைவில் வந்து சேர்ந்தார்; அன்று இரவே மதுரையிலிருந்து நாட்டுப் படைஞரிற் சிலரையும், தம் படைஞரோடு சேர்த்துக்கொண்டு கம்பத்திற்குச் சென்றார். கோட்டையொன்று அங்கு உறுதியாய் அமைக்கப்பட்டிருந்தது. கம்பப் படைஞர் தம் தலைவரைப் போலவே வீராவேசத்தோடு போர்புரியச் சித்தமாயினர்.

மறுநாட் காலையில் போர் தொடங்கியது. மதுரைப் படைஞர் தொகுதியில் ஐயாயிரம் காலாட்களும், இருநூறு குதிரை வீரரும், பத்து யானை வீரரும் இருந்தனர். கம்பத்துப் படைஞரும் அத்தொகைக்குக் குறையாமல் இருந்தனர். இராமபத்திரர் போர்வீரர்களை ஊக்கத்தோடு முன் செல்லுமாறு தூண்டினர். முதலில், வேல் வீரரும் வாட் படைஞரும் வரிசையாக நின்று போர் செய்தனர். குத்துக் கோற்காரர் யானைகளோடு முன்சென்று கோட்டைக் கதவைத் தகர்த்தனர். சுவர்மேல் நின்ற வீரர்கள் ஈட்டி வேல் முதலிய படைக்கலங்களை வீசினர். ஒரு முகூர்த்த காலத்தில் நான்கு புறங்களிலும் கோட்டைச் சுவர் தகர்க்கப்பட்டது. மதுரைப் படைஞர் விரைவாக உள் நுழைந்தனர். கம்பத் தலைவர் மிக்க வீராவேசமாகப் போர் புரிந்தனர். ஒரு நாழிகைப் பொழுதிற்குள் வீரரிற் பெரும்பான்மையோர் மாண்டனர். இராமபத்திரர் கம்பத் தலைவரைக் கண்டு, வில் வாள் முதலிய படைக்கலங்கள் கொண்டு அவரோடு போர் தொடுத்தனர். விதியை வெல்லவும் வீரம் உளதோ? தம் மரபினர் ஒருவரும்

எஞ்சாது போரில் அழிந்ததைக் கண்ட கம்பத் தலைவர், தம் உயிரைத் துரும்பாக மதித்து எதிர்த்து நின்றனர். நின்றும் என்ன? ஒரு நொடிப் பொழுதில் இராமபத்திரருடைய வாட் படையால் வீர சுவர்க்கம் அடைந்தனர். அக் காட்சியைக் கண்டு எஞ்சி நின்ற பகைவர் எல்லோரும் மலைகளிலும் காடுகளிலும் ஓடி ஒளித்தனர்.

இராமபத்திரர் முன்னைய தலைவர் மரபினர் யாரென விசாரித்து, ஒரு சிறுவர் இருப்பதை உணர்ந்து, அவரை அழைத்துக் கொண்டு தம் படைகளோடு மதுரையை யடைந்தனர். அரசர் அவரைக் கண்டு மிகவும் பாராட்டி அவ்விளைஞர்க்குக் கம்பம் ஜமீன்தார் என்ற பதவியைக் கொடுத்து, வெகுமதிகள் பல தந்து அனுப்பினர். இராமபத்திரர் வடகரை ஜமீனை ஏற்றுக்கொண்டு, அரசரது பூரண அன்புக்குப் பாத்திரராகித் தம் ஜமீனை அடைந்தார்.

அரியநாதர் பிறகு அரசரிடம் வந்து, கோயில்களில் நடைபெற்று வந்த திருப்பணிகளைப் பற்றிச் சிறிது நேரம் பேசியிருந்தார். அப்பொழுது தென்னாட்டிலிருந்து ஒரு ஒற்றன் வந்தான். அரசரும், அரியநாதரும் அவன் கொணர்ந்த செய்தியை விசாரித்தனர். அவன் ஒரு சிறு ஓலைச் சுருளைக் கொடுத்தான். அதனை அரியநாதர் அரசர் கேட்க வாசித்தார்:

"தென்னாட்டுக் குடிகளே,

நீங்கள் உண்மையிற் பாண்டிய மன்னர்க்கு அடங்கி வாழ்ந்த குடிமக்களா யிருந்த துண்டாகில், பாண்டிய மரபிற்கே இப்பொழுது உண்டாயிருக்கும் தீங்கைத் தவிர்க்க முற்படுங்கள். வடக்கிலிருந்து வந்த வடுகன் ஒருவன், நம் நாட்டைக் கைக்கொண்டான். உண்மைப்

பாண்டியர் மரபிற் பிறந்த எம்மை மதிக்கவுமில்லை. அவ்வளவில் நில்லாமல் மற்றச் சிற்றரசரைப் போல, எம்மையும் அவனுக்கு அடங்கி வாழும்படி ஏவத் துணிவான் போல் இருக்கின்றது. இன்றளவும் ஒருவர்க்கும் பணியாது வாழ்ந்த நாங்கள் இனி இவனுக்குப் பணிவோமா? அவ்வாறு நாங்கள் பணிய நேரிடுமாயின் அவ்விழிவு உங்களைச் சேர்ந்ததாகும். ஆகையால் வடுகன் அரசு அழிய வழி தேடுங்கள். பாண்டிய நாட்டரசு பண்டு போற் சிறக்க உதவி புரியுங்கள்.

பஞ்ச பாண்டியர்."

இதனை வாசித்த பிறகு இருவரும் ஒற்றன் முகத்தைப் பார்த்தனர். அவன் அவ்விருவரையும் நோக்கி, "இம்மாதிரித் தென்னுடெங்கும் விளம்பரங்கள் பரவுகின்றன. நம் நாட்டு ஆட்சிக்கே இடையூறு விளையும் போலிருக்கிறது" என்றான். அரசனும் அரியநாதரும், "இதற்கு வேண்டுவன செய்வோம்" என்று கூறி அவனுக்கு விடை கொடுத்தனுப்பினர்.

ஒன்பதாவது அத்தியாயம்
பஞ்ச பாண்டியர்

தென்னுட்டிற், பழமையான பாண்டியர் குடியிற்பிறந்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு ஒரு கூட்டத்தார் இருந்தனர். அவர்களில் ஐவர் ஆண்மையும் வீரமும் மிகுந்தவர்களாய் அந்நாட்டுக்குத் தலைமை வகித்து வந்தனர். சந்திரசேகர பாண்டியர் பரம்பரையார் நாடாண்டு கொண்டிருந்த காலத்தில், இவர்கள் சில காலங்களில் அவர்கட்கு அடங்கிக் கப்பங்கட்டியும், சில காலங்களில் எதிர்த்து நின்று போர் புரிந்து உள்நாட்டுக் கலகம் விளைத்தும் வந்தனர்.

நாகமநாயக்கர் பாண்டிய நாட்டுத்தலைமையை ஏற்றுக்கொண்ட காலத்தில், இவர்கள் அவரை அரசராக மதிக்கவில்லை. சந்திர சேகரர், பாண்டியர் குலத்திற் பிறந்த உரிமை யுடையவரல்லர் என்றும் கூறிக்கொண்டிருந்தார்கள்.

விசுவநாதர் அரசர் ஆனதும்,பாளையப்பட்டுக்களை ஒழுங்கு பண்ணிப் பக்க பலமாக வைத்துக்கொண்டு, இவ்வைவரையும் அடக்கிச் சிற்றரசராக்க வேண்டும் என்று கருதினர். அவ் வெண்ணத்தை நிறைவேற்றற்கு ஏற்ற முயற்சிகளைச் செய்யு மாறு,அரியநாதரைத் தென்னாட்டுக்கு அனுப்பவும் தீர்மானித் தார். இதற்கிடையில் விளைந்த கம்பம் கலகத்தால் சிறிது காலதாமதமாயிற்று. ஆயினும் விரைவிலே நாட்டின் அரசு நிலையை ஒழுங்குபடுத்தக் கருதி, ராஜ்ய தந்திரத்தில் மிக்க நிபுணராகிய அரியநாதரோடு ஆலோசனை செய்தார். ஒற்ற ரால் தென்னாட்டில் விளையும் செய்திகளை அறிந்தார். இனிப் பொறுத்தல் தகாது என்று எண்ணிப், போர்ப் பயிற்சியிற் சிறந்த அரியநாதரைத் தென்னாட்டுப் பாளையக்காரர் சிலரது படைகளோடு அங்கு அனுப்பினர்.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட காலாட்களும், இரண்டா யிரம் குதிரை வீரரும், நாட்டுப் பீரங்கிகளும், வெடிகளும், பிற யுத்த தளவாடங்களும் கொண்டு அரியநாதர் திருநெல் வேலி சென்றார். பாளையக்காரர்களும் தம் தம் படைகளோடு வந்து கலந்து கொண்டனர். முதலில் அரியநாதர் சில பெரி யோர்களைத் தூதராக அனுப்பினர். அக்கடிதம் ஒரு அந்தண ரால் ஐவரிடம் கொண்டு செல்லப்பட்டது. ஐவருள் தலைவ ராகிய குலசேகரர் அக் கடிதத்தைப் பார்த்தார்.

பாண்டிய மரபினராகிப் ஐவர்க்கும், பாண்டிய நாட்டர சர் விசுவநாதர் ஆணைபெற்றுத் தளவாய் அரியநாத முதலி யார் எழுதும் நிருபம்:

"ஐயன்மீர்,

சேர சோழ பாண்டியர் என்ற மூன்று வகுப்பினர், இத் தமிழ் நாட்டை ஆண்டு பெரும்புகழ் படைத்திருந் தனர் என்பது சரித்திரப் பிரசித்தமே. இக்காலத்திலே உண்மையான சேர மரபுக்குரிமை யுடையார் ஒருவரு மில்லை. திருவாங்கூர் மன்னர் தமிழர் அல்லர் என்பதை நான் கூறவேண்டுமோ? சோழர் மரபும் சமீபத்தில் நடந்தபோரினால் அழிந்துவிட்டது. முன்னமே அம் மரபிற் பலவகைக் கலப்புக்கள் உண்டாயின என்று கேள்வியுற்றோம். சந்திர வம்ச க்ஷத்திரியர் என்று, சரித் திரங்களிலே சொல்லப்படுகின்றஉண்மையான பாண்டிய மரபு அழிந்துவிட்டது என்று கூறுவதுபொய்யாகுமோ? இந்நாளிலே கள்ளர் மறவர் குடிகளிற் பிறந்த சிலர், தம் நாட்டின் அளவையும் தம் தலைமையின் நிலையையும் எண்ணிப்பாராமல், தாமே பாண்டிய மரபினர் என்று கூறிக்கொள்கின்றனர். ஒரே மரபினை உரிமை பாராட்டு பவர்கள் பல நாடுகளில் வாழ்ந்தாலும், ஒரே குலத் தவராக இவக்கவேண்டுமன்றோ? குலத்தால் மாறு பட்ட நான்கைந்து கூட்டத்தார், ஐந்தாறு சிற்றூர்களில் இருந்து கொண்டு,தம் பெருமையை வளர்ப்பதாக எண் ணிப், பழம் புகழ் படைத்த பாண்டியர் மரபின் பெரு மையை அழிக்கலாகுமா? நீங்கள் ஐவரும் இந்நாட்டிற் பாண்டியர் என்றும், உண்மையான மரபினர் என் றும் கூறிக்கொள்கின்றீர்கள். முன்னாளிலே, பாண்டிய நாட்டுக்கு அரசு இல்லாமல் எவரையேனும் அரசராக்க வேண்டுமே யென்று, விஜயநகரப் பிரதிநிதிகள் முயன் றார்கள் என்பது நீங்கள் அறிந்த விஷயமே. அந்நாளில்

உங்கள் குலத்தினர் எங்கு இருந்தனர் என்றும், இன்று நீங்கள் கொண்டாடும் உரிமையை, அன்று அவர்கள் ஏன் கொண்டாடவில்லையென்றும் அறிய விரும்புகிறேன். நீங்கள் முன்னே மதுரையில் அரசாண்ட பாண்டிய மன்னர்களுக்குக் கப்பம் கட்டி வாழ்ந்ததாக, அரசாங்கப் பத்திரங்கள் மூலம் நன்கு விளங்குவதால், இப்பொழுது பாண்டிய மன்னரது பரம்பரைக்கு உரியவராகச் சக்கரவர்த்திகளால் ஏற்றுக்கொள்ளப் பெற்றுப், பாண்டிய நாட்டை ஆண்டுகொண்டிருக்கும் விசுவநாத நாய்க்கர்க்கு முறைப்படி பணிந்து, கப்பம் கட்டிப் பாளையக்காரராய் வாழ்ந்து வரவேண்டும். பெரும்படை திரட்டிப் போர் புரிந்து வெல்வோம் என்று எண்ணியிருப்பீராயின், படைஞர் வீணாக அழிவதையன்றி வேறு நன்மையொன்றும் விளையாது. அன்றியும், உள்ள நாட்டையும் இழக்க நேரிடும். ஆகையால் இன்று மாலைப் பொழுதுக்குள் நீங்கள் ஐவரும் நன்கு ஆலோசனை செய்து, உங்களுக்கும் உங்கள் நாடுகட்கும் நன்மை விளைக்கத் தக்க முடிவு செய்து மறுமொழி தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அரியநாத முதலியார்,
பாண்டிய நாட்டு முதலமைச்சர்."

குலசேகரர் இக்கடிதத்தை ஒரு முறைக்கு இரு முறை பார்த்து விட்டுப் "போர் தொடங்குவதே யாம் கூறும் மறுமொழியாம்" என்று அந்தணரிடம் சொல்லியனுப்பினர்.

கயத்தாற்றூரிலே பெரியதோர் கோட்டையைக் கட்டி, ஐவருள் தலைவர் வாழ்ந்து வந்தார். மற்ற நால்வரும் அருகிலிருந்த சிறு நகரங்களிலே கோட்டைகளை அமைத்திருந்தனர். ஐவர் படைகளும் கயத்தாற்றூர்க் கோட்டைக்குள் வந்து நிறைந்தன. அவ்வச் சிறு நாடுகளைக் காக்க வேண்டுமளவு

அங்கங்குச் சிறு சிறு படைகள் நின்றன. பிறகு அரியநாதர் கயத்தாற்றூர்க் கோட்டையை முற்றுகையிடத் தொடங்கினார். போரிற் பெரும் பயிற்சியும் அநுபவமும் படைத்தவராயிருந்தும், பத்துப் பாளையக்காரரது படைஞரின் உதவி பெற்றிருந்தும், ஒரு மாதகாலம் கோட்டையைத் தாக்கியும் பயன் பெறவில்லை. இதற்கிடையில், அவ்வைவருக்கு உதவியாக வந்த வேறு சில படைகள், அரியநாதர் படைகளைப் புறத்திலே சூழ்ந்து தாக்கத் தொடங்கின. முன்னும் பின்னும் பல கொடிய படைகளால் தாக்கப்பட்ட அவரது படை, நிற்க வழியறியாது நிலைகுலைந்தது. இந்நிலையைக் கண்ட பாண்டியர் ஐவரது படைஞர் கோட்டைக்குப் புறத்தே வந்து மதுரைப் படைஞரை ஓட்டத் துணிந்தனர். எந்நாளும் கேளாத இகழ்ச்சிப் பேச்சு உண்டாகும்படி, அரியநாதர் படை ஒழுங்கு குலைந்து மதுரையை நோக்கி ஓடியது.

தென்னாட்டில் நிகழ்ந்த செய்திகளை ஒற்றர்களால் அடிக்கடி அறிந்துகொண்டிருந்த விசுவநாதர், மதுரைப் படைஞர்க்கு ஏற்பட்ட பரிபவத்தைக் கேட்டதும், வெகு விரைவிலே பெரும்படையோடு மதுரையினின்று புறப்பட்டு அரியநாதரை வழியிற் சந்தித்து, நடந்த உண்மைச் செய்தியை அவரால் நேரில் அறிந்துகொண்டு, கயத்தாற்றூரை விரைவில் அடைந்தார். புறங்கொடுத்தோடிய படைகள், தலைவரைக் கண்டதும் திரும்பிவந்து வீராவேசத்தோடு போர்செய்யத் தொடங்கின. விசுவநாதர், அரியநாதரை ஐவர்க்குரிய மற்ற ஊர்களை அழிக்க அனுப்பிவிட்டுத், தாமே நேரிற் பெரும்படையோடு நின்று கயத்தாற்றூரைத் தாக்கினார். அவர் தம்முடன் கொணர்ந்த வெடிகளும் பீரங்கிகளும், பிற கொடிய படைக்கலங்களும் கடுமையாகப் போர் வீரரால் உபயோகிக்கப்பட்டன. அரியநாதர் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து,

அவ்விடமெல்லாம் பாழாயிருக்கக் கண்டு கயத்தாற்றாருக்கே வந்து சேர்ந்தார்.

ஐம்பெருந் தலைவர் கோட்டையினகத்தே நின்று, புறத்திருப்பார் தம் அருகில் அணுகாவண்ணம், மதில் மேலமைத்திருந்த பலவகைப் பொறிகளையும் பிரயோகித்தனர். புறத்தில் நின்ற இரு பெருந்தலைவரும் தம் போர்த் திறமையெல்லாம் காட்டி, மக்களை ஆயிரமாயிரமாகக் கொன்று குவித்தனர். ஆறுமாத காலமாகியும் வெற்றி தோல்விகள் இன்னார்க்கென உறுதிப்படவில்லை. கோட்டைக்குட் செல்லும் உணவுப் பொருள்கள் தடைசெய்யப்பட்டன. அப்படிச் செய்தும், பின்னும் ஆறுமாத காலம் சமாளிப்பார் என்னுமாறு அவ்வைவரும் வீராவேசத்தோடு போர்புரிந்தனர்.

போர்க்களத்தைச் சுற்றிப் பெண்டிர் அழுகுரல் வீரர் செவிகள் செவிபட எழுந்தது. "தந்தையை இழந்தோமே, இனி எம்மை ஆதரிப்பார் இல்லையே" என்று மக்கள் சிலர் கதறினர். "மக்களை இழந்தோமே, முதுமைப் பருவத்தில் எம்மைப் போற்றுவாரில்லையே" என்று முதியோர் சிலர் புரண்டழுதனர். "எமது உயிரினுக்குயிராயிருந்த கொழுநரை இழந்தோமே, இனி யாம் எங்ஙனம் இப் பாழுலகில் வாழ்வோம்" எனப் பைங்கொடிபோன்ற பாவையர் பலர் பதறிக் கதறினர். இவ்வண்ணமாக எத்திசை நோக்கினும் துயரக் குறியே தோன்றியது.

இக்காட்சியை விசுவநாதர் கண்டனர்; மனம் புண்ணுயினர். அரியநாதரை நோக்கி, "அன்பரே, யான் ஒருவன் பேரரசு பெற்றுப் பெரு வாழ்வு பெறுவதன் பொருட்டு, இத்துணை மக்களின் துயர்கோலத்தைக் காணவேண்டுமோ? இப்போர் இனி இருதிறத்தார்க்கும் அவமான மின்றி

வேறு வழியில் முடிய இயலாதோ? அனுபவ மிக்க நம்மால் இதற்கு ஒரு வழிகூற இயலாதாயின் வேறு எவர் கூறுவர்?'' என்று கேட்டார்.

அதற்கு மறுமொழியாக அரியநாதர், "அரசே, ஐவரையும் படைஞரின்றித் தனிப்போர் புரிய அழைக்கலாம். அவரும் இணங்குவர். அவரது வலியும் குறைந்தது என்றே அறிகிறேன்'' என்று கூறினர்.

விசுவநாதர் அதுவே பொருத்தமென் றெண்ணி, ஒரு நிருபம் எழுதி வெண்கொடி பிடித்த தூதர் ஒருவர் மூலம் அனுப்பினர். கோட்டைக்குள் இருந்த ஐவரும் அத் தூதரை வரவேற்றுக், கடிதத்தை வாங்கிச் சம்பிரதியை வாசிக்கச் செய்தனர்.

பஞ்சவர்க்கு மதுரை நாட்டு அரசர் விசுவநாதர் நிருபம்:
"ஐயன்மீர்,

நீவிர் ஐவர் ஆவீர். நானோ ஒருவன். நாம் பகைத்ததன் பயனைக நம் நாட்டினுள் மிக்க துயர்க்குறியும் அழுகைக்குரலும் காண்கிறோம். இப்படி அழியும் காட்சியை நாம் கண்டு கொண்டிருப்பது நன்றெனத் தோன்றவில்லை. நம் இருதிறத்துப் படைஞரையும் போர்புரிய வேண்டாமென்று நிறுத்துவோம். போர்க்களத்திலே இரு படைகளும் நின்ற நிலைக்கு இடை நிலத்திலே ஒரு கற்றாண் நிறுத்துவோம். நம் இருவர்க்குள்ளும் ஒரு ஒப்பந்தம் செய்து அதனைச் செப்புப் பட்டயத்திற் பொறித்து, அத் தூணின்மேல் வைப்போம். பிறகு நீங்கள் ஐந்து வீரர்களும் உங்களுக்கு இஷ்டமான ஆயுதங்களை எடுத்துக் கொண்டு முன்வரலாம். நான் ஒருவனே தனித்துநின்று உங்களோடு போர்புரிகிறேன். இப்போரில் நான் உங்களை

வென்று விட்டால், நீங்கள் உங்கள் உடுத்த உடையோடு நாட்டினின்று அகலவேண்டும். உங்கள் நாடுகளையும் நிதி களையும் பிற பொருள்களையும் என்னிடம் அளித்துவிட வேண்டும். நான் தோற்றேனாகில், என் நாட்டையும் என் உரிமை யெல்லாவற்றையும் உங்களுக்கே அளித்துவிட்டு வெளியேறி விடுகிறேன். இவ்வண்ணம் நாம் இருவரும் தெய்வ சாட்சியாக வாக்குத்தத்தம் செய்து, கையொப்ப மிட்டு, ஒப்பந்தம் முடித்துக் கம்பத்தின்மேல் வைத்து விட்டுக், கம்பத்தினடியில் நின்று போர் புரிவோம் இதற்கு உங்கள் சம்மதம் அறியவிரும்புகிறேன்.

விசுவநாத நாயக்கர்."

இக் கடிதத்தைக் கண்டதும் ஐவர் மிகவும் அதிசயித்துச் சிறிது நேரம் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்து, பின் வருமாறு மறுமொழி எழுதியனுப்பினர்.

மதுரை யரசர்க்கு ஐவர் பாண்டியர் விடுக்கும் நிருபம்:

"ஐயா,

நுமது கடிதத்தைக் கண்டோம். அதனால் வெளி யாகும் நும் நற்குணத்தைப் பாராட்டுகிறோம். நீர் ஒருவரே எம் ஐவரையும் ஒரு சேர எதிர்த்து நிற்றல் முறையாகாது. எமக்குள் ஒருவர் நும்மோடு போர் புரிய வருவார். நீர் அவரை எதிர்க்கலாம். போரின் பிறகு விளையும் பயனைப்பற்றி நீவிர் கூறிய முடிபு எமக் குச் சம்மதமே.

ஐவர் பாண்டியர்."

இக்கடிதம் தூதர் மூலம் விசுவநாதர் கையகம் அடைந் தது. அவர் அதுகண்டு மகிழ்ந்து மற்றும் ஒரு கடிதம் எழுதி அனுப்பினர்.

மதுரை மன்னர் விசுவநாத நாயக்கர் ஐவர்க்கு விடுத்த நிருபம்:

"ஐயன்மீர்,

நுமது கடிதம் கண்டேன். அதன் மூலம் அறியலாகும் நுமது பெருந்தகைமையைப் பாராட்டுகின்றேன். ஆயினும் நான் கூற விரும்புவது ஒன்றுண்டு. நீங்கள் ஐந்து நாடுகளின் தலைமை பூண்டிருக்கும் ஐவர் ஆகின்றீர்கள். நான் ஒருவனாகவே உங்களை வென்று, அந் நாடுகளை அடையவெண்ணி வந்துளேன். ஆகையால், யான் ஒருவனேயாயினும், நீங்கள் ஐவரும் என்னை எதிர்த்துப் போர் புரிய வருதல் நியாயமேயாகும். உடனே போர்க்கு வர வேண்டுகிறேன்.

விசுவநாத நாயக்கர்."

இக் கடிதத்தைத் தூதர் ஐவரிடம் கொண்டு போய்க் கொடுத்தார். அதைப்படித்த பின்னரும் அவர்கள் ஐவரும் எதிர்த்து நிற்க இணங்கவில்லை. தங்களுள் மிகவும் பராக்கிரம சாலியாகிய ஒருவரைத் தெரிந்தெடுத்துப் போர்க் கோலம் பூணச்செய்து, வாள் கைக்கொடுத்துக் குதிரைமீதமர்த்திப் போர்க்களத்துக்கு அழைத்து வந்தனர்.

இப்போர் நெடுநேரம் நடைபெறவில்லை. விசுவநாதரும் பாண்டிய வீரரும் போர்க்கு எதிர்த்து நின்ற காலத்தில், முன்னவர் பின்னவரை நோக்கிப் போர்க்கு அழைத்தார்.

விசுவநாதர், "நீரே முதலில் வாளை வீசும்" என்றனர். அவர் அங்ஙனமே செய்தனர். விசுவநாதர் அவ்வாள் வீச்சுத் தம்மேலே படாமற் காத்துக்கொண்டார்; பாண்டிய வீரர் பிறகு விசுவநாதரை அங்ஙனமே வாளால் வீசச் சொன்னார். அவர் அதற்கு இணங்காமல் அவரையே மூன்று முறை வீசத்

தூண்டினர். பாண்டிய வீரர், அவ்வண்ணமே மிக்க சாமர்த்தியமாக விசுவநாதர் தலை சிதறி விடுமோ என்று கண்டோர் அஞ்சும்படி வாளை வீசினர். அம்மூன்று முறையும் தம் கைத்திறமையாலும், வாட் பயிற்சியின் நுட்பத்தாலும் விசுவநாதர் தம்மைக் காத்துக்கொண்டார்.

பிறகு அவர் பாண்டிய வீரரை நோக்கி, "ஐய, இனி நீர் நும்மைக் காத்துக் கொள்ளும்" என்று கூறித், தமது வாளினல் தம் முழுவலிமையும் காட்டி வீசினர். அவ்வாள் பாண்டியர் ஐவரின் தலைவராக வந்தவரை இரு பிளவாக்கிக் கீழே வீழ்த்தியது.

இதனல் ஐவர் பாண்டியரும் தாம் செய்து கொண்ட ஒப்பந்தத்திற் கிணங்க நாடிழந்தவராயினர். எஞ்சி நின்ற அரசர் நால்வரும், விசுவநாதரிடம் அரசையளித்து நாட்டை விட்டு வெளியேறினர். இப்போரின் பிறகு பஞ்ச பாண்டியர் என்ற குழுப் பெயரே நம் நாட்டில் வழங்கவில்லை. ஆயினும், விசுவநாதர் இப்பாண்டியர் ஐவருக்கு நெருங்கிய உறவினர் ஒருவரைத் திருநெல்வேலிச் சீமைக்குச் சிற்றரசராக்கித், தமக்குக் கப்பங்கட்டி வாழ்ந்திருக்கச் செய்தனர். அப் பாண்டிய மரபினர் தென் காசியிலிருந்து தமிழ் வளர்த்து அரசு செலுத்தியிருந்தனர். வேள் என்ற பட்டமும் பிறகு அவர்கள் பெறலாயினர்.

பத்தாவது அத்தியாயம்

உள்நாட்டு நிலைமை

பாண்டிய நாடு, பல்லாயிர ஆண்டுகளாகக் கல்வி வளர்ச்சியிலும், அரசியல் முறைகளிலும், நாகரிகத் துறைகளிலும் புகழ் மிக்கது. அரசுரிமை யேற்றுக்கொண்ட பாண்டியரும், களப்பரும், முகம்மதியரும், நாயக்கரும், பிறரும் முன்னளில்

இருந்த முறைகளையே பெரும்பாலும் தழுவி, அதிக மாறு பாடு தோன்றாவண்ணம் அரசுபுரிந்து வந்தனர். கிராமங்கள் கல்விக்கும், நல்லொழுக்கத்துக்கும், அமைதியான வாழ்க்கைக்கும் இடமாயிருந்து வந்தன. நகரங்கள் பல, அறிஞர்கள் சந்தர்ப்பம் நேர்ந்தபோதெல்லாம் கூடிப் பொது நலத்துக்கு ஆவன புரிதற்கு உரிய நிலைக்களங்களா யிருந்தன. கிராமங்களிற் சிறு சிறு கல்விச்சாலைகள் அரசாங்க உதவிபெற்றுக் கல்வி அபிவிருத்தி செய்து வந்தன. சில புலவ ரகங்களிலும் தமிழ்க்கல்வி வளர்வுற்றது. நகரங்களில் இருவகையான கல்விச் சாலைகள் இருந்தன. அந்தணர் வைதிக வாழ்க்கைக்குரிய வேதசாஸ்திரங்களைக் கற்பிக்கும் பாடசாலையைப் பெரிதும் மதித்தபடியால், அப் பாடசாலைகளும் பல ஏற்படுத்தப் பெற்றன. பொது ஜனங்களுக்கு எண்ணும் எழுத்தும் கற்பிக்கும் பெரிய கலாசாலைகள் நகரங்களில் அரசர்ஆதரவால் வளர்ந்தன.

நிலத்தைப்பற்றிய வழக்குக்களும், பொருள் கொடுக்கல் வாங்கல் முதலிய வழக்குக்களும், களவு கொள்ளை கொலை முதலிய வழக்குக்களும், அவ்வவற்றின் உண்மையை ஆராய்ந்தறியக்கூடிய அறிவுபடைத்த அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டன. கிராமங்களில் எழுந்த வழக்குக்கள் அங்கங்குள்ள பஞ்சாயத்தாரால் முடிவு செய்யப்பெற்றன. நகர சபையார் நகர வழக்குக்களை ஆராய்வர். இவற்றுள் மிகவும் சிக்கலான பெரிய வழக்குக்கள், பிரதம மந்திரியிடமும் அரசரிடமும் வருவதுண்டு. பலவகையான தொழில்களும் வியாபாரங்களும் ஏற்பட்டிருந்ததால், தனித்தனி நூற்றுக் கணக்கான சிறு சிறு வரிகள் ஏற்பட்டிருந்தன. தேவாலயங்கள் பெரும்பான்மையும் ராஜாங்கப் பொருளுதவியாலும், சிறுபான்மை பிறருடைய தருமப் பொருளாலும் நடைபெற்றன. மதங்

களைப்பற்றிப் பிரசாரம் செய்வதில் சில அரசர் ஒரு சார்பு பற்றி இருந்ததுண்டாயினும், பெரும்பான்மையான அரசர்கள் நடு நிலைமையில் இருந்து நன்மை விளைத்தனர். அநேக நூற்றாண்டுகளாக இவ்வாறே தமிழ் நாட்டின் நிலைமை இருந்தது.

விசுவநாதர் தாம் ஏற்றுக்கொண்ட அரசப்பொறுப்பை, முன்னோர் சென்ற முறைபற்றியே வகித்து வந்தனர். நாட்டில் அவர் தாம் நேரில் மேற்பார்வையிடாத செயல் ஒன்றும் இல்லாதிருக்கும் வண்ணம் எங்கும் போய் வருவார். கல்விச் சாலைகளில் தக்க நன்னோக்கங்களைக் கொண்டு புதிய சீர்திருத்தங்கள் செய்ய விரும்பிச், சில ஆணைப் பத்திரங்களை நாடெங்கும் பரப்பினார். அவை நடைபெற்று வரும் முறையைச் சிற்சில சமயங்களில் நேரிற் சென்று பார்வையிட்டும் வந்தார்.

ஒரு நாள் மதுரை நகரத்துப் பெரிய கலாசாலைக்கு விசுவநாத வேந்தர், எவரும் எதிர்பாராமல் வந்து சேர்ந்தார். அக் கலாசாலைப் பெருங்கணக்காயர், பரம்பரையாக அத் தொழிலே புரிந்துவந்த ஒரு நற்குடியிற் பிறந்தவர். அவர் அரசரை அன்போடும் மரியாதையோடும் வரவேற்றுத், தமது கலாசாலையைச் சுற்றிக் காட்டி வந்தார்.

அரசர்:—ஐய, இக் கலாசாலையில் இப்பொழுது எத்தனை மாணவர் கல்வி பயில்கிறார்கள்?

கணக்காயர்:—அரசே, இங்கு இப்பொழுது எழுநூற்றைம்பது ஆண்களும் நானூற்றிருபது பெண்களும் கல்வி பயில்கின்றார்கள்.

அரசர்:—இங்கு எத்தனை வகுப்புக்கள் உண்டு?

கணக்காயர்:—வேந்தரே, இக்கலாசாலையில் ஆறு வகுப்புக்கள் உண்டு. முதல் வகுப்புக்குக் கீழே பாலர் வகுப்பென ஒன்று உண்டு.

அரசர்:—ஒவ்வொரு வகுப்பிலும் இவ்வளவு காலந்தான் படிக்க வேண்டும் என்ற நியதி உண்டா, இல்லையா?

கணக்காயர்:—அரசே, அந்தந்த வகுப்பிற்குரிய கல்விப்பயிற்சி நிரம்பப் பெற்றதும் மேல் வகுப்பிற்கு மாற்றப்படும். அதற்குக் கால வரையறை கணக்கிடப்படவில்லை. எல்லா மாணவரும் ஒரே மாதிரியாக மேலே போதல் இயலாது. அவரவர் அறிவின் தரத்திற்குத் தக்க பாடங்களே கற்பிக்கப்படும்.

அரசர்:—இங்கே பொதுவாகக் கற்பிக்கப்படும் பாடங்கள் என்ன? சிலர்க்கென்று சிறப்பான பாடங்கள் எவையேனும் உண்டோ?

கணக்காயர்:—அரசே, பொதுவாக முதல் மூன்று வகுப்புக்கள் வரையில் தமிழ், கணக்கு, பொதுவறிவு வளர்ச்சிக்குரிய விஷயங்கள் முதலியன கற்பிக்கப்படும். பிறகு தமிழ் இலக்கிய இலக்கணங்களும், சோதிடம், வைத்தியம்,சைவ வைஷ்ணவ மத சாஸ்திரங்கள் முதலியனவும் கற்பிக்கப்படும்.

அரசர்:—இங்கே தெலுங்கும் ஸம்ஸ்கிருதமும் கற்பிக்கப்படுவதில்லையோ?

கணக்காயர்:—அரசே, ஸம்ஸ்கிருதம் வேதசாஸ்திர பாடசாலைகளிலேதான் கற்பிக்கப்படுகிறது. தெலுங்கு, அம்மொழியைக் கற்க விரும்புகிற சிலர்க்கே கற்பிக்கப்படுகிறது.

அரசர்:—விஜய நகர ராஜாங்க சம்பந்தம் ஏற்பட்ட காலம் முதலே, இந்நாட்டில் தமிழைப்போலவே தெலுங்கும் கற்பிக்கப்பட வேண்டும் என்ற விதி ஏற்பட்டிருக்கிறதே. தெலுங்கு ஏன் நன்கு பரவவில்லை. சம்ஸ்கிருதத்தை

இந்தக் கலாசாலையில் விருப்பமுள்ள சிலர்க்கேனும் கற்பிக்கலாமே. விஜய நகரத்திலுள்ள ஆண் பெண் மக்கள் எல்லோரும் ஸம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் சிறந்த கல்விப் பயிற்சி உள்ளவர்களா யிருக்கிறார்கள். வித்தையை இன்னார்தான் பெறலாம், இன்னார் பெறக்கூடாது என்று சொல்வது நியாயமாகாது. எவரும் எந்த வித்தையும் கற்கலாம். கற்றுப் பயன்பெற வல்லவர்களே கற்க வருவார்கள். பெண் குழந்தைகளும் நன்கு கற்றல் வேண்டும். நம் ராஜ்யத்தில் கல்வி பயிலாதவர்களே இருக்கக்கூடாது.

தமிழ் மொழியில் இல்லாத சாஸ்திரங்கள் வடமொழியில் அநேகம் உண்டு. அவற்றை யெல்லாம் தெரிந்தவர்களைக் கொண்டு, தமிழ் நாட்டார்க்குப் பயன்படும்படி செய்ய வேண்டும். இரண்டு மூன்று மொழிகளில் நல்ல பயிற்சி யுள்ளவர்களை இந்த வேலைகளில் அமர்த்தி நம் தேசத்துக் கல்வியை வளர்க்க வேண்டும். ஐய, நீர் நம்மால் இயன்றளவு நம் நாட்டுச் சிறவர் உள்ளத்திலே தாய்மொழிப் பற்றினை உண்டாக்கி, நம் பெரியோர்கள் நமக்கு வைத்துச் சென்ற கல்விப் பொருளை அனுபவிக்க ஆசையுள்ளவர்களாகும்படி செய்யவேண்டும்.

கணக்காயர்:—அரசே, அரசர்கள் ஆதரவிருக்கும் வரையில் நான் செய்தற்குரிய செயல் ஒன்றும் குறைபடாது.

அரசர்:—இவை யனைத்தையும் விடச் சிறப்பாக வேண்டுவது ஒன்றுண்டு. நம் குழந்தைகளுக்கு தெய்வத்தினிடமும் தேசத்தினிடமும், பெற்றோர் முதலிய பெரியோர்களிடமும் பக்தியிருக்கும் வண்ணம் போதிக்க வேண்டுவது உமது கடமையாகும்.

கணக்காயர் :— நாங்கள் எப்பொழுதும் பொதுவாகப் போதித்து வரும் பாடம் இதுவே. ராஜாங்கத்தினிடம் பக்தியும் அபிமானமும் பெருகும் வண்ணம் உரிய பாடங்களையும் புகட்டி வருகின்றோம்.

அரசர்:—சரி. இனிப் பின் ஒரு சமயம் வந்து பார்க்கிறேன்; போய்வருகிறேன்.

அங்கிருந்து புறப்பட்ட அரசர் நியாய ஸ்தலம் ஒன்றை அடைந்தார். அங்கே அறிவும் அனுபவமும் படைத்த பெரியோர் பலர் நியாய விசாரணை செய்திருந்தனர். வழக்காளிகள் சிலர் நின்று கொண்டிருந்தனர். நியாயத் தீர்ப்புக்குரிய சட்ட நூல் நுட்பங்களை அறிந்த வழக்கறிஞர்கள் இருவர் அங்கு இருந்தனர். அரசரைக் கண்டதும் அனைவரும் உரிய மரியாதை செய்து ஆதனம் அளித்தனர். அங்கு நடந்த வழக்கை அரசரும் கவனித்தனர்.

முதலில் ஒரு சிறு நிலத்தைப்பற்றிய வழக்கு வந்தது. அவ்வழக்கில் வாதி தன் கட்சியை விபரமாகக் கூறினன். பிரதிவாதியும் தன் கட்சியை எடுத்துரைத்தான். நியாய சபையார் இருதிற வழக்கையும் கவனித்துக் கேட்டனர். நியாய வாதி பொதுவகையில் உள்ள நியாயத்தை விளக்கினர். சாட்சி ஒருவர் விசாரிக்கப்பட்டார். நியாய சபையார் நெடுநேரம் ஆலோசித்த பிறகு அவ்வழக்கில் அரசரையே நியாயம் கூறும்படி வேண்டிக் கொண்டனர்.

அரசர் "வாதி தமது பூமியின் அளவையே அறியாமற் பல வருஷகாலம் இருந்திருக்கிறார். வரிசெலுத்தும்போது, தம் நிலத்தின் அளவை அவர் சரி பார்த்திருக்கவேண்டும். இந்தப் பூமி, அவர்க்கு அவருடைய தாயாதிபர் ஒருவரிட மிருந்து வேறு உரிமையாளர் இல்லாமையால் தமக்குக் கிடைத்த

தாக வாதிக்கிறார். அந்தப் பூமியை அவர் அடைந்தபோது, அதன் நான்கெல்லைகளையும் அளவையும் அறிந்துகொண்டிருக்க வேண்டும். சென்ற பன்னிரண்டு வருஷங்களாகப், பிரதிவாதியே பூமியின் பயனை அனுபவித்திருக்கிறார். அவர் தம் நிலத்தை அடுத்திருந்த வாதியின் நிலத்தை எந்த எண்ணத்தோடு சேர்த்துக்கொண்டாலும், ராஜாங்கத்துக்கு வரிசெலுத்தாமலே அனுபவித்திருக்கிறார். ராஜாங்கமும் நஷ்டப்படவில்லை. வாதியின் அறியாமையால் இது ஏற்பட்டதாகும். ஆகையால், அவர் தேவாலயங்களுக்குப் பயன்படும்படி பத்து வராகன் கொடுத்துவிட்டுப், பிரதிவாதியிடமிருந்து பூமியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். பிரதிவாதி, இந்தப் பன்னிரண்டு வருஷங்களாக அடைந்த பயனைப் பற்றிய வழக்குத் தள்ளப் படவேண்டியதே'' எனத் தீர்ப்புக் கூறினர்.

பிறகு வேறொரு சிறு வழக்கு விசாரிக்கப்பட்டது. ஒரு வைசியர் வீட்டில் இரவிலே திருடன் ஒருவன் புகுந்து பொருள்கள் பலவற்றைத் திருடினான். அக் கள்வன் தான் களவாடிய பொருள்களை மூட்டை கட்டிக்கொண்டு வெளியேறுமுன் வைசியர் விழித்துக்கொண்டார். பலர் கூடி அத் திருடனை நையப் புடைத்தனர். பிறகு வைசியர் திருடனைப் பற்றி வழக்குத் தொடுத்தார். திருட வந்தவன் தன் வழக்கையும் கூறினான். வைசியர், திருடன் கட்டிய மூட்டையை நியாய சபையில் அவிழ்த்துக் காட்டினார். திருடன் தன் உடம்பெல்லாம் பட்டிருந்த அடித் தழும்புகளைக் காட்டி நின்றான். நியாய சபையார் விசாரணையில் அதுதான் அவன் செய்த முதல் திருட்டு என்று விளங்கியது. அரசர் வழக்கைக் கவனித்துப் பின்வருமாறு தீர்ப்புக் கூறினார்:

"வாதியான வைசியர் மிக்க பொருளுள்ளவரா யிருந்தும், பிறர்க்கு உதவாமல் லோபியாக இருந்தாராகையால், பிரதிவாதியான இக் கள்வன் அவரது வீட்டிற் புகுந்து களவாட நேரிட்டது. இனியேனும் அவர் தரும சிந்தையுடையவரா யிருக்கவேண்டும். பிழைக்க வேறு வழி அறியாமல் திருடச் சென்ற இக் குற்றவாளி, சிறைச்சாலைக்கு அனுப்பப்பட வேண்டுவது நியாயமே. ஆயினும் இவனுக்குச் சிறைச்சாலை அனுபவத்தால் நன்மை விளையாது. ஆகையால் இவன் நல்ல நடத்தையோடு வாழ்ந்து வருவதாக, ஒரு வருஷ காலம் நகர அதிகாரிகளுக்குத் தன் வாழ்வின் மூலம் அவ்வப்பொழுது தெரிவிக்கவேண்டும். குற்றவாளியை நல்லவனுக்குவதற்கு வழி அவனிடம் அன்பு காட்டுவதே. ஆகையால் இவ் வைசியரே இவனைத் தம் சேவகனாக வைத்துக்கொண்டு, தக்க சம்பளம் கொடுத்து இவன் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும். இவன் உடம்பிற்பட்ட புண்கள் ஆறும் வரை இவன் குடும்பத்தைக் காக்கும் பொறுப்பும் அவரைச் சேர்ந்ததே."

பின்பு வேறு சில வழக்குக்கள் விசாரிக்கப்பட்டன. அதன்மேல் அரசர் அங்கிருந்து புறப்பட்டு மீனாக்ஷி கோயில் சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு, இரவில் அரண்மனை சேர்ந்தார். இவ்வண்ணம் நாட்டு மக்களுக்குப் பல வகையிலும் அவர் நன்மை புரிந்து அரசியற்றி வந்தமையால் அவரது புகழ் நாடெங்கும் பரவியது. நாட்டில் வியாபாரம், கைத்தொழில், விவசாயம் என்ற மூன்றும் நன்கு விருத்தியடைந்தன.

நாட்டு மக்கள் எல்லோரும் உயர்ந்தோர், இழிந்தோர், செல்வர், வறியோர் என்ற பேதமின்றி அரசரை நேரிற் கண்டு தமக்குவேண்டும் நன்மைகளை விண்ணப்பித்து வந்தனர். சேனை

களை நன்கு வகுத்து நாட்டின் பலத்தைப் பெருக்கும் முயற்சியில் வடகரை ஜமீன்தாராகிய இராமபத்திர நாயக்கர், தம்மால் இயன்ற உதவிகள் எல்லாம் செய்து வந்தார். நவராத்திரி காலங்களில் அநேக தேசங்களிலிருந்து சிறந்த வித்துவான்கள் வந்து, மீனுக்ஷி கோயிலிலும் அரண்மனையிலும் அரசரைக் கண்டு பல மொழிகளிலும் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றுச் சென்றனர். ஸம்ஸ்கிருத வித்துவான்கள் பலர் சாஸ்திர ஆராய்ச்சி செய்து அரசரால் நன்கு சன்மானிக்கப் பெற்றனர். இவ்வாறு பாண்டிய நாட்டில் நாயக்கர் ஆட்சி எல்லார்க்கும் நலம் விளைப்பதாய் நடைபெற்று வந்தது.

பதினோராவது அத்தியாயம்
சேர நாட்டுப் போர்

சேர சோழ பாண்டிய மரபுகள் ஒன்றுக் கொன்று நெருங்கிய தொடர்புடையவையாக முன்னுளில் இருந்தன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தென்னுட்டில் அரசு செலுத்தி வந்திருக்கும் இம் மரபுகள், ஒன்றோடொன்று பகைத்துப் போர் விளைத்த வரலாறுகள் பல உண்டு. இம் மன்னர் பெருமக்கள் ஆண்ட நாடுகளின் எல்லே, சில காலங்களில் மிகக் குறைவாகவும், சில காலங்களில் மிக விரிவாகவும் இருந்தது. இவர்களுக்குள் மரபின் மானம் காத்தல், நாட்டின் நலம் வளர்த்தல், புலவராற் புகழப்பெறுதல் முதலிய காரணங்களே போர் புரியத் தூண்டுதல்களாயிருந்தன. சமீப காலத்தில் இம்மன்னர்கள் தம் உரிமையும் தலைமையும் இழந்து, விஜய நகர வேந்தர்களுக்குக் கப்பங் கட்டுவோராய் வாழ நேரிட்டது. இக் காலத்திலுங்கூட இவர்கள் ஒருவர்க்கொருவர் போர் புரியாதிருக்கவில்லை.

விசுவநாத நாயக்கர் மதுரை நகரத்தில் அரசுரிமை பூண்டிருக்கையில், சேர நாட்டாரோடு பெரும் போர் ஒன்று புரிய நேரிட்டது. அப்போர் நிகழக் காரணமும், அதனால் விளைந்த பயனும், அதற்குச் சிறிதுமுன் நிகழ்ந்த சில செய்திகளோடு தொடர்புடையனவாயுள்ளன. விஜயநகரத்திலே கிருஷ்ண தேவராயர் ஆட்சி முடிந்து, அச்சுததேவராயர் அரசுரிமையை யேற்றுக் கொண்டதும், அவர் தென்னாட்டில் நிகழ்ந்த ஒரு கலகத்தை அடக்க வந்தார். கிருஷ்ண தேவராயர் காலத்திலேயே இக் குழப்பம் தொடங்கியது.

இக் குழப்பம் தொடங்கிய காலத்தில், மதுரை நகரிலே அய்யக்கரை வையப்ப நாயக்கர் என்பவர் விஜய நகரத்துப் பிரதிநிதியாய் இருந்தார். விசுவநாதர் மதுரைக்கு வருமுன்பு, இவர் இப் பதவியில் இருந்தார். கிருஷ்ண தேவராயர் சக்கரவர்த்தியா யிருக்கையில், தென்னாட்டில் அவர் ஆதரவு பெற்றுத் தலைமை பெற்றிருந்த செல்லப்பன் என்பான் எதிர்த்துக் கலகம் செய்தான். விஜய நகரத்திலிருந்து பெரும் படையொன்று அவனை யடக்கும் பொருட்டு வந்தது. சேர நாடு இக்காலத்தில் விஜய நகரத்துக்குக் கப்பம் கட்டும் நாடாயிருந்தது. விஜய நகரப் படையைக் கண்டு அஞ்சியோடிய செல்லப்பன், சேர நாட்டின் அரசரிடம் சரண்புகுந்தான். சேர நாட்டின் அரசராயிருந்த சேர உதய மார்த்தாண்ட வர்மா என்னும் அரசர், அவனோடு சேர்ந்து கொண்டு பாண்டிய நாட்டைத் தாக்கி, அதன் அரசரை நாட்டைவிட்டு ஓடச் செய்தார். திருநேல்வேலியின் தென்கீழ்ப் பகுதியில் உள்ள நாடுகள் இந்நாளிற் சேரரால் கைப்பற்றப்பட்டன. சேரர், இந்நாடுகள்முன்னாளில் தமக்கே உரியனவாய்இருந்தன வென்றும், பாண்டியர் அதிக்கிரமமாகக் கைக்கொண்டனர்

என்றும் கூறினர். இவ்வாறு பெற்ற நாடுகளில் உள்ள நகரங்களாகிய சேரமாதேவி, வள்ளியூர் என்ற இடங்களில் இம்மன்னர் சிலகாலம் வாழ்ந்திருந்தார். இவர்க்குப் பிறகு இந்நாட்டைப் பெற்றுக் கொண்ட பூதல ஸ்ரீவீர உதயமார்த்தாண்ட வர்மா, திருநெல்வேலிச் சீமை முழுவதையும் தம் நாட்டுடன் சேர்த்துக்கொண்டார். கிருஷ்ண தேவராயர் இந்நாளில் மரணமடைந்தார். இக் காலத்திற் பாண்டிய நாட்டு அரசராயிருந்தவர் ஸ்ரீவல்லப தேவர் என்ற பெயர் பூண்டவராவர். அவர் தாம் நாடிழந்ததை உடனே விஜயநகர வேந்தர்க்கு விண்ணப்பித்துக் கொண்டார்.

அச்சுததேவராயர் சக்கரவர்த்தியானதும், தென்னாட்டின் அரசுநிலையை ஒழுங்குபடுத்தும் பொருட்டுப் பெரும் படையோடு வந்தார். அவர் சந்திரகிரியிற் சிலநாள் இருந்தார்; திருப்பதிக்குச் சென்று திருவேங்கட முடையானைத் தரிசித்தார்; ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு இரத்தின கிரீடமும் மணிகள் பதித்த பொற்காதணியும் பொற்பாதுகையும் சமர்ப்பித்தார்; பிறகு அங்கிருந்து புறப்பட்டுத் தென்றிசை நோக்கி வந்து, திருக்காளத்தி யடைந்தார். காளத்தி நாதரை வணங்கிப் பொன்னும் நவமணியும் பிறபொருள்களும் சமர்ப்பித்தார்; சில நாட்கள் அங்கே தங்கியிருந்த பிறகு, புறப்பட்டுக் காஞ்சீபுரம் அடைந்தார்; அங்கு முத்து நிறைத்துத் துலாபாரம் வைத்து அம்முத்துக்களைப் பலர்க்கும் தானம் செய்தார். பல குறுநில மன்னர்கள் காஞ்சி நகரத்திலே அவரைக்கண்டு வணங்கித் திறையளந்தனர். அரசர்பிரான் அவர்களையும் அழைத்துக்கொண்டு திருவண்ணுமலை அடைந்தனர். அங்கும் கடவுள் வழிபாடு செய்து, சில நாட்கள் கழித்துப் புறப்பட்டுச் சோழ நாட்டிற் புகுந்து திருவரங்கம் என்ற பெரிய கோயிலை

அடைந்தார். அந் நகரிலே வடமொழி வித்துவான்கள் பலர் அவரைக் கண்டு வாழ்த்தினர். அரசர்பிரான் தம் படைத் தலைவரைச் சேர நாட்டுக்குப் போகுமாறு அனுப்பி விட்டு, அங்கேயே கலாவிநோதராய்ப் பொழுது போக்கி யிருந்தார்.

விஜய நகர சேனை விரைவாக நடந்து மதுரையைக் கடந்து திருநெல்வேலிச் சீமையை அடைந்தது. சேனையின் தளகர்த்தர், தம் கீழ் அடங்கிய ஒரு சேனாதிபதியைச் சேர நாட்டுக்கு அனுப்பி அங்கேயே பாளையம் இறக்கினர். சேர மன்னர் பெரும் படையோடு வந்து போர் புரிந்து தோல்வியுற்றார். அவர் அங்கே யானை குதிரைகளையும், பிற அரும் பொருள்களையும் கொணர்ந்து, விஜய நகர சேனா நாயகரை வணங்கினர். அவ்வீரர் சேரரையும், செல்லப் பனையும் வேந்தர் பிரானிடம் அழைத்துச் செல்லவேண்டிய ஏற்பாடுகள் செய்து, திருவனந்தபுரத்துத் திருமாலைத் தரிசனம் செய்துகொண்டு தம் அரசரைக் காணத் திருவரங் கம் நோக்கிப் புறப்பட்டார்.

விஜய நகர வேந்தரான அச்சுத தேவராயர், சேரவேந்தரும் செல்லப்பனும் வந்த காட்சியைக் கண்டு செல்லப்பனைச் சிறை யிலிட ஆணையிட்டார். சேரரைப் பாண்டியர்க்குரிய அர சைக்கொடுத்துவிட்டு, விஜயநகர வேந்தருக்கு முறையே கப்பங் கட்டி வருமாறு கூறி, அவர் செய்த குற்றத்துக்காக அபராத மும் விதித்தார். சேரவரசர் அவ்வண்ணமே செய்வதாக ஏற்றுக்கொண்டு பேரரசரை வணங்கினர். அச்சுத தேவ ராயர் தென்னாட்டுக்குத் தாம் வந்த காரியம் நிறைவேறியதால், விரைவாகப் புறப்பட்டு முன்போலவே பல ஸ்தலங்களையும் தரிசித்துக்கொண்டு, தம் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

அந்நாள் முதலாகச் சேர மன்னர், விஜய நகர வேந்தர்க்குக் கிரமமாகக் கப்பம் கட்டி வாழ்ந்து வந்தார். பாண்டிய நாடு முன்போன்ற பெருமையை அடைதற்கும் சேரர் தம்மால் இயன்ற உதவிகள் புரிந்தார்.

சில வாண்டுகள் சென்றன. அச்சுத தேவராயர், உலகம் புகழப் பல வாண்டுகள் அரசு புரிந்து முதுமைப் பருவமுற்று மரணமடைந்தார். அக்காலத்திலே விஜய நகரத்தில் மிக்க பராக்கிரமசாலிகளா யிருந்த மூன்று சகோதரர்கள், தங்கள் சாமர்த்தியத்தால் சகல அதிகாரத்தையும் தங்கள் கையில் இருக்கும்படி செய்துகொண்டார்கள். இவர்களுள் மூத்தவர் ராம ராயர் என்ற பெயர் பூண்ட வீரதிலகர் ஆவார். இவர் சதாசிவ ராயர் என்பவரை அரசராக்கி, எல்லா அதிகாரங்களும் உடையவராய் அரசை நடத்தினர். பாண்டிய நாட்டிலும் சோழ நாட்டிலும் பிற தமிழ் நாடுகளிலும் இருந்த நாயக்க அரசர்கள், இவர் ஆணைக்கடங்கி நடந்தனர். இந்நாளில் சேரவரசராய்த் திருவனந்தபுரத்தில் இருந்த உன்னி கேரள வர்மா என்பவர், விஜய நகர வேந்தரது வன்மை குறைந்ததாக எண்ணிக்கொண்டு, முன்னே ஏற்றுக்கொண்டபடி கப்பம் கட்டிவர மறுத்தார்; பாண்டிய நாட்டிற் புகுந்து திருநெல்வேலிச் சீமையிற் பெரும் பகுதியைக் கைக்கொண்டார்.

பாண்டிய நாட்டு அரசராயிருந்த விசுவநாதர், தம் நாட்டில் உள்ள நிலைமையை விஜயநகர வேந்தர்க்கு தூதர் மூலம் அறிவித்தார்; சேர வேந்தரோடு செய்தற்குரிய பெரும்போர்க்குப் படை திரட்டவும் தொடங்கினர். இக் காலத்தில் கீழைக் கடற்கரையில் வேறோர் குழப்பம் நேரிட்டது. இவ் விரண்டையும் கவனித்து, நாட்டின் நன்மைக்கு வேண்டுவன

செய்தல் சக்கரவர்த்திக்கு உரிய கடமையாகும் என விசுவநாதர் தெரிவித்துக் கொண்டார். இச் செய்திகளை அறிந்த ராமராயர், தம்மருகருள் ஒருவரும் சிறந்த வீரருமாகிய விட்டலர் என்பாரைப், பெரும்படை யொன்றுடன் தென்னாட்டுக்கு அனுப்பினர்.

விட்டலர் என்ற அப் படைத்தலைவர், அரசராணைக்கிணங்கத் தென்னாட்டுக்கு வந்தார். சோழ நாட்டிற் சில நாள் இருந்து, அங்கிருந்த நாயக்க அரசர் கொடுத்த படைத்தொகுதியை உடனழைத்துக் கொண்டார். பிறகு பாண்டிய நாட்டுக்கு வர, விசுவநாதரும், அவர் குமாரரும், பாளையக்காரரும், அரியநாத முதலியாரும், பிற வீர சிரேஷ்டர்களும் தம்தம் பெரும் படைகளோடு விஜய நகர சைனியத்தில் சேர்ந்து கொண்டார்கள். விட்டலர் சகோதரராகிய திம்மய்யா என்பவரும் தம் படைகளோடு துணைபுரிய வந்தார். கீழை நாட்டுத் தலைவராகிய சதாசிவ நாயக்கரும் தம் சைனியத்தோடு வந்து சேர்ந்தார். திருவிடைமருதூர்த் திருச்சிற்றம்பல பட்டன் என்ற பிராமணர் ஒருவர், இச் சைனியத்தில் ஒரு வகுப்பின் தலைவராய்ச் சேர்ந்தார். (இவ்வந்தணர் இப்போரின் பயனாகப், பின்னாளிலே இரண்டு கிராமங்களை சர்வமானியமாக அடைந்தார் என்று சரித்திரம் கூறுகிறது).

விட்டலர் சிலகாலம் மதுரையில் இருந்தபிற்பாடு, திருவாங்கூர் நோக்கிப் புறப்பட்டார்; அருவாய் மொழிக் கணவாய் வழியே சேர நாட்டினுள் நுழைந்தனர். விஜய நகர வேந்தர் பெரும்படையோடு போர்புரியவந்த செய்தி நாடெங்கும் பரவியது. அச் செய்தியைக் கேட்டதும் நாட்டு மக்களின் மனம் பதைக்கத் தொடங்கியது. அடுத்த கணத்திலே என்ன விளையுமோ என்ற நடுக்கமே ஒவ்வொருவர் உள்ளத்திலும்

நிறைந்தது. தெற்குத் திசையில் உள்ள கிராமங்களில் வாழ்ந்த குடிமக்கள் பலரும், தம் உடைமைகளை எடுத்துக் கொண்டு வடதிசை நோக்கி ஓடலாயினர். சிலர் கடற்பக்கம் ஓடினர். அவ்வாறு ஓடியவர்களிற் பெரும்பான்மையானவர் எளியவர்களாகிய கிறிஸ்தவர்களும் ஹிந்துக்களுமே யாவர்.

ஓடத் தொடங்கிய ஏழை மக்கள் பெரும்பாலோர்க்கு வழியில் உண்ண உணவும் இல்லை. வயது சென்ற கிழவர் சிலர் கண்கெட்டுக் கோலூன்றித் தட்டித் தடுமாறி நடந்தனர். சிலர் தம் மனைவி மக்களோடு பசியால் துடித்துப் பதறியோடினர். முதல் நாள் மணம் புரிந்த மணமகனும் மணமகளும் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓட்டமெடுத்தனர். முதிர்ந்த கர்ப்பிணிகளான சில பெண்டிர், தளர்ந்த நடையோடு நடந்து சென்று வழியிடையிற் கண்ட காட்டுக் குடிசைகளில் மகப் பேறு பெற்றுக் காப்பாரின்றித் தவித்தனர். தந்தை தாயரின் முதுமை நிலையைக் கண்டு அவர்களைக் காப்பாற்றக் கருதி மிக்க சிரமப்பட்ட இளைஞர் சிலர், அவ்வழியில் வேகமாக நடந்தனர். தம்மை நெடுங்காலமாக நம்பியிருந்த வறிய சுற்றத்தாரைக் காக்க வழியின்றிப், பொன்னும் பொருளும் இழந்து ஓடிவந்த பொருளாளரும் பலர் இருந்தனர். இத்தகைய பலவகைத் துயரக்காட்சிகள் திருவாங்கூர் அரசர்க்குக் கண்டோரால் தெரிவிக்கப்பட்டன. விஜய நகரப் படை, தன்னால் விளையும் தீமையை மதியாமல் மேல் நோக்கி வந்து கொண்டே இருந்தது.

சக்கரவர்த்தியின் சேனை தம்மைத் தண்டிக்கும் கருத்தோடு தம் நாட்டிற்குள் விரைந்து வருவதாகச் சேர வரசர் அறிந்தார். தமிழ் நாட்டின் தென்கிழ்த் திசையிலே கலகம் விளைத்த பரவர்க்கு உதவியாய் நின்ற போர்த்துக்கீசியர்

படை, தமக்கு உதவிபுரிய வருமோ என்று அறியவிரும்பினர்; தம் நாட்டில் உள்ள படைஞரையும் வீரர் தலைவரையும் ஒருங்கு சேர்த்தார்; அயலவர் உதவிபெற வழியில்லை யென்பதை அறிந்தார்; பெரிதும் மனங் கலங்கினர்.

கேரள வேந்தர் தம் அரண்மனையிலே மந்திரிகளோடு ஆலோசனை செய்தார். அவர்களுள் முதியவர் ஒருவர் "போர்த்துக்கீசியராகிய கிறிஸ்தவ மத குரு சேவியர் சாமியாரைக் கண்டு பேசினல் ஏதாவது நன்மை விளையலாம்'' என்று கூறினர். அதற்கிணங்கக் கேரள வர்மா அம்மத குருவைத் தம் அரண்மனைக் கழைப்பித்தார். அவரும் விரைவிலே வந்து சேர்ந்தார். அவர் வந்ததும் கேரள வர்மா அவரை மனமாரப் புகழ்ந்து வாழ்த்தித் தம் கருத்தைக் கூறத் தொடங்கினர். அவரும் அமைதியாகக் கேட்டனர்.

கேரளர்:—சாமியார் அவர்களே, நம் நாட்டின் தற்கால நிலைமையை நீங்கள் அறிவீர்கள் என்று எண்ணுகிறேன். விஜய நகர சைனியம் நம் தேசத்திற்குள் நுழைந்து வேகமாக வருகிறது. இன்னும் இரண்டு தினங்களில் அனந்த சயனத்துக்கே வந்துவிடும்போல் இருக்கிறது. இப்பொழுது நமக்கு உதவிபுரியக்கூடிய அரசர் யாரும் இல்லை. நும் இனத்தார் உதவியைப் பெற இயலுமோ என்று அறிய விரும்புகிறேன்.

சாமியார்:—அரசே, நாட்டின் நிலைமையை அறிந்தேன். வீடு வாயில்களை இழந்து அநேக ஏழைக்குடிகள் ஓடியதையும் கண்டேன். எம் இனத்தாரை உங்களுக்கு உதவி செய்யும்படி நான் எங்ஙனம் தூண்டக்கூடும்? போர்புரிதல் போன்ற அரசியல் விஷயங்களுக்கும், துறவிகளாகி எல்லா இனத்தார்க்கும் நன்மை புரியப் போந்தவராகிய

எங்களுக்கும், யாதொரு சம்பந்தமுமில்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் கட்டுதற்குரிய கப்பத்தைக் கட்டிச் சமாதானம் செய்து கொள்ளலாமே?

கேரளர்:—சாமியார் அவர்களே! எமது நாட்டுப் பெரிய நிதிச் சாலையைத் திறந்துவிட்டு, எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னாலும் இவர்கள் கேட்க மாட்டார்கள். எப்படியும் சமாதானத்துக்கு வழிதேட வேண்டும். அதற்கும் உங்கள் உதவியே வேண்டியிருக்கிறது.

சாமியார்:—அரசே, சமாதானத்துக்கு என்னால் இயன்ற உதவி செய்கிறேன். எங்கள் சிலுவையின் உட்கருத்து, உலகு முழுவதும் அமைதியை உண்டாக்கிச் சகோதர பாவத்தை வளர்ப்பதேயாம். தூதரைப் போலச் சென்று சமாதான உடன்படிக்கையைப் பற்றிப் பேசுவதற்கு நான் தகுதியற்றவன். என்னால் இயல்வது ஒரு உதவியே. எனது உண்மையான அன்புக்குரிய தங்கள் பொருட்டாகத், தங்கள் குடிகளுக்கும் தங்களுக்கும் மனக் கலக்கத்தைப் போக்கி மனவமைதி யருளும்படி, நான் உண்மையான ஒரு கடவுளை வணங்கி வாழ்த்துவேன். தெய்வத்துதியே எனது படைக்கலம். எங்களால் போர்க்கு வேறு எவ்வகையிலும் உதவி செய்ய இயலாதிருப்பது பற்றி வருந்துகிறேன்.

கேரளர்:—சாமியார் அவர்களே, உங்களால் இயன்ற அவ்வுதவியை என்பொருட்டுச் செய்யலாமே?

சாமியார்:—அரசே, இப்போரினல் உமக்கு அவமானம் விளையாதிருக்கும் வண்ணமும், உம் நாட்டு மக்களுக்குப் பொருட் சேதம் விளையாதிருக்கும் வண்ணமும், இங்

நாட்டிலே வீணுக உயிர்ச்சேதம் நேரிடாதிருக்கும் வண்ணமும் உண்மையான தேவனை மனமார வணங்கிப் பிரார்த்திக்கிறேன். அவன் அருள் இருந்தால் ஆகாத தொன்றுண்டோ? மலைபோல வந்த இடரும் சூரியன் முன் பனிபோல நீங்கும். நீர் கவலைப்பட வேண்டாம். எல்லாம் நன்மையாய் முடியும். இனி நான் விடை பெற்றுக் கொள்கிறேன்.

கேரளர்:—அவ்வண்ணமே ஆகுக.

பிறகு சேவியர் சாமியார் தமது மடத்துக்குச் சென்று தியானத்தில் ஆழ்ந்து கடவுளைப் பிரார்த்தித்தார்; கறுப்பு உடை ஒன்றைத் தலைமுதல் கால் வரை மூடும்படி அணிந்து கொண்டார்; சிலுவை ஒன்றைக் கையிலெடுத்துக் கொண்டு, விட்டலர் சைனியம் வரும் வழியை நோக்கிப் புறப்பட்டார்.

இந்தச் சமயத்தில் விட்டலரது பெரும்படை இடைவழியில் யாரும் தடுப்பாரில்லாமல், வெற்றி முழக்கத்தோடு சேர நாட்டுள் நுழைந்து கோட்டாறு என்ற கிராமத்துக்கு அரைக் காத தூரம் வரையில் வந்து விட்டது. படைத்தலைவரிற் பெரும்பாலோர் பின்னே வந்து கொண்டிருந்தனர். முன் வந்த காலாட்படைஞர் தமக்கு முன்னே ஒரு அதிசயக்காட்சியைக் கண்டனர். கரிய உடையணிந்த பெரிய உருவமுடைய பெரியார் ஒருவர், வழி நடுவில் நின்றுகொண்டு, “இந் நாட்டில் நீங்கள் போர்புரிய வரலாகாது. திரும்பிச்செல்லுங்கள்” என்று பெருங்குரலில் யாவரும் கேட்கக் கூறினர். அச்சொல்லைக் கேட்டும், அவர் முகத்தின் பிரகாசத்தைக் கண்டும், மயங்கிய படைஞர்கள் முன்னேற மனமின்றி நின்றனர். இதற்குள் பின்னிருந்த படைத்தலைவரும் வந்து, அக்காட்சியைக் கண்டு அதிசயித்துக், கரிய உடையணிந்த பெரிய உருவமுடைய நல்

லோர் பேசிய பேச்சுக்களை மறுக்கவும் எதிர்க்கவும் சக்தியற்றவர்களாய்ப் பின் வாங்கினர். தெய்வச் செயலால் இது நிகழ்ந்தது எனவே பலரும் கருதினர்.

கோட்டாற்றிலே தம் சேனையோடு போர் புரியச் சித்தமாய் வந்திருந்த சேர வேந்தர், இச் செய்தியைக் கேட்டு அதிசயித்துச் சாமியாரைத் தம்மிடம் வரவழைத்தார். அவர் வந்ததும் அவரை மார்போடணைத்துத் தழுவிக்கொண்டு, "இன்று முதல் நீங்கள் பெரிய சாமியார்" என்று கூறிப் புகழ்ந்தார். அன்று முதல் சேர நாட்டார் எல்லோரும் அச்சாமியாரைப் பெரிய சாமியார் எனவே போற்றி, நன்றியறிவுடையராய் வாழ்ந்தனர்.

தெய்வச் செயலாலும், சாமியார் உதவியாலும் ஒருவாறு விஜய நகரத்தார் படையெடுப்பு நின்றது. ஆயினும் போர் நின்றபாடில்லை. சேர வேந்தர், விட்டலரோடு சமாதானம் செய்துகொள்ள முயற்சி செய்யலாயினர். சமாதானப் பேச்சு நடைபெறுங் காலத்தில், சேவியர் சாமியார் மத்யஸ்தராய் இருந்து உதவி புரிந்தனர். அச் சமயத்தில் விட்டலர் தூத்துக்குடியில் தண்டிறக்கியிருந்தார். சேர நாட்டிலிருந்து அந்தணரொருவர் அவரிடம் தூது பேசச் சென்றூர்.

அந்தச் சமயத்தில், விட்டலர் சைனியம் தென்னுட்டிலே கிழைக் கரையில் கலகம் விளைத்துக் கொண்டிருந்த பரவரை அடக்கும் பொருட்டு, அவர்க்கு உதவியாய் நின்ற போர்த்துக்கீசியரோடு போர் புரிந்து கொண்டிருந்தது. கேரள வர்மா அனுப்பிய சமாதான உடன்படிக்கையை விட்டலர் எளிதில் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கிடையில் உன்னி கேரள வர்மா மரணமடைந்தார். பிறகு அவர்க்குப் பின் அரசு தாங்கிய பூதலவீரர் சமாதானம் பேச நேர்ந்தது. விட்டலர் சமாதானப்

பேச்சு நீடித்துக்கொண்டிருப்பதைப் பார்த்துச் சேர நாட்டைக் கடல் வழியால் தாக்க எண்ணினர். இதனுல் கேரள நாடு மிக்க சிரமப்படும் என்பதை அதன் அரசர் அறிந்து உடனே திருநெல்வேலிக்கு வந்தார்.

பூதல வீர ஸ்ரீ கேரளவர்மா, வணக்கத்துடன் விட்டலரைக் கண்டுகொண்டு சமாதான உடன்படிக்கை பேசினர். பாண்டிய நாட்டின் தென் பகுதியாகிய திருநெல்வேலிச் சீமையில், தம் முன்னோர் கைப்பற்றிக்கொண்ட நாடுகளை யெல்லாம் கொடுத்து விடுவதாகக் கூறினர்; மேலும் தம் நாட்டு வருவாய்க்குத் தக்கவாறு கப்பம் கட்டுவதாகவும் ஏற்றுக் கொண்டார். விட்டலர் இவற்றை அங்கீகரித்துச் சேர வேந்தர்க்கு மரியாதை செய்தார். இச் சந்தர்ப்பத்தில் தாம் அடைந்த நன்மையைப் பெரிதாய் மதித்த அச் சேர வேந்தர், விட்டலரது ஜன்ம நக்ஷத்திரத்தன்று, தம் நாட்டில் உள்ள சுசீந்திரம் என்ற விஷ்ணு க்ஷேத்திரத்தில், விசேஷ உற்சவங்கள் கொண்டாடுவதாகவும் தெரிவித்துக் கொண்டார். அவ்வண்ணமே பின்னளில் நடந்து கொண்டார்.

விசுவநாதர், அரியநாதர் முதலிய வீரசிகாமணிகள் இப்போரில் முன்னின்று உதவினர் என்று முன்னே கூறப்பட்டது. விட்டலர், இப்போரால் விஜய நகர வேந்தர்க்குரியதாகிய திருநெல்வேலிச் சீமையை ஆளும் பொறுப்பை, அரசர் ஆணை பெற்று விசுவநாதர்க்கே அளித்தார். அவரும் முன் போலப் பாளையக்காரர் உதவியால் அதைத் தம் நாட்டோடு சேர்த்து ஆண்டு வந்தனர்.

தென்னுட்டிலே பழைய பாண்டிய மரபிலே பிறந்தவர்கள் என்று கூறிக்கொண்ட சிலராலும், சேரவரசராலும், சோழர் குடியிற் பிறந்தவராலும் நேரிட்ட குழப்பங்கள் சக்கர

வர்த்தியின் படைவலியால் ஒடுக்கப்பட்டு விட்டதால், விசுவ நாதர் தமிழகத்திற் பெரும்பான்மையான நாட்டுக்கு அரச ராகித், தெய்வபக்தியும் தேசபக்தியும் நிரம்பியவராய், நல் லோர் புகழ்ந்து பாராட்ட ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தார். கீழைக் கடற்கரையிலே பரவர்கள் கலகம் என்னுயிற்று என் பதை அடுத்த அத்தியாயத்தால் அறியலாம்.

பன்னிரண்டாவது அத்தியாயம்

பரவர் கலகம்

விஜய நகர வேந்தர் அச்சுத ராயரது படைத்தலைவர், சேர நாட்டிற்புக முயற்சி செய்துகொண்டிருக்கையில் கீழைக் கடற்கரையில் வேறொரு குழப்பம் தோன்றியது. மதுரையில் முகம்மதிய அரசு அழிந்ததும், தற்காப்பின் பொருட்டு அங் கிருந்து ஓடிய முகம்மதியர் சிலர் கீழைக்கரையில் வாழ்ந்து வந்தனர். நெடுநாளாக அக் கடற்கரையிலே மீன் பிடித்தும் முத்துக்குளித்தும் பிழைத்து வந்த பரவர் என்ற செம்படவ சாதியார் வாழ்வுக்கு, இம் முகம்மதியர் தீங்கு இழைக்கத் தொடங்கினர். முகம்மதியர், 'தங்கள் உத்தரவின்றிப் பரவர் முத்துக் குளித்தலாகாது' என்று கட்டாயப்படுத்தினர். பர வர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள். வெகு நாளாக மனத்துக்குள்ளே இருந்த பகை முற்றிவெளிப்படத் தொடங் கியது. ஒரு சிறு வாக்குவாதத்தில் முகம்மதியன் ஒருவன், பரவருள் ஒருவனை மிகவும் அடித்துக் காயப்படுத்தினுன். அப்பரவன் காது கிழிந்து தன் கூட்டத்தாரிடம் வந்தான். இதனைக் கண்ட பரவ சாதியார் மிக்க கோபம் கொண்டு, ஒரு நாள் இரவிலே இரகசியச் சூழ்ச்சி செய்து, தூத்துக்குடியில்

வாழ்ந்த முகம்மதியரைத்தாக்கி அநேகரைத் துன்புறுத்தினர். இக்கலகத்தாற் பல முகம்மதியர் இறந்தனர். எஞ்சியிருந்த முகம்மதியர்கடல்வழியே தோணிகளிற் சென்றுபிழைத்தனர்.

இச் செய்தியை அருகில் உள்ள நாடுகளில் வாழும் முகம் மதியர் கேள்வியுற்றனர். அவர்கள் எல்லோரும் பரவர்களைப் பகைத்துப் பழிக்குப் பழி வாங்க எண்ணி, மதுரை நாட்டில் உள்ள சில சிறு தலைவர்களின் உதவிபெற்றுப் பெருங் கூட்ட மாக வந்து, அநேகம் பரவர் குடும்பங்களை ஆண், பெண், குழந்தை என்று பாராமற் கொன்று குவித்தனர். மதுரையில் அரசு பூண்டிருந்த நாயக்க அரசர் வேறொரு பெரும்போரிலே தலையிட்டிருந்ததால், இவ்வாறு தம் நாட்டுள் நிகழ்ந்த கல கத்தை அடக்க ஏது வில்லாமற் போயிற்று. இந் நிலைமையை ஒரு கிறிஸ்தவர் அறிந்தார். அவர் கள்ளிக்கோட்டைத் தம்பி ரான் தூதராகப் போர்த்துகல் போய்வந்த பெருமை படைத் தவர். அவர் பரவர் படும் பாட்டைக் கண்டு வருந்தி, "உங் கள் மதுரை யரசர் உங்களுக்கு இப்போது உதவி செய் யாமையால், கொச்சியிலிருக்கும் போர்த்துகல் படைத்தலைவ ரிடம் உதவி கேட்கச் செல்லுங்கள். அவர் உங்களைக் காப் பாற்றுவார்" என்று அவர்களுக்கு யோசனை கூறினர். இவ் யோசனை நன்மையானதே யென்று பரவர் எல்லாரும் எண் ணினர். அதனால் அவர்களின் பிரதிநிதிகளாகப் பன்னிரண்டு பேர் கொச்சிக்குச் சென்றனர். கொச்சியிலிருந்த அப்போர்த் துகல் நாட்டுப் படைத்தலைவர், "இன்று முதல் நீங்கள் கிறிஸ் தவ மதத்தைத் தழுவிக்கொண்டு, எங்கள் அரசர் குடிக ளாவதாக வாக்குறுதி செய்வீர்களாயின், உங்களுக்கு எங்க ளால் இயன்ற உதவியைப் புரிவோம்" என்று கூறினர். பரவர் கள் சிறிது நேரம் தங்களுக்குள் யோசனை செய்து, வேறுவழி

யேதும் தோன்றுமையால் அதற்கு இணங்கினர். பிறகு இப் போர்த்துக்கீசியப் படைவீரர்கள் பெரும்படையோடு வந்து, முகம்மதியரைத் தாக்கி அநேகரைக்கொன்று பலரைநாட்டை விட்டோட்டினர். இதனுல் பரவரிற் பல்லோர் கிறிஸ்தவராயினர். அதனுல் அப்பரவர் தாங்கள் வாழும் நாட்டின் அரசரை மதியாமல், போர்த்துகல் அரசரையே தங்கள் அரசராக மதித்தனர். அதுமுதல் முத்துக் குளித்தலால் மதுரை யரசர்க்கு வரும் வருவாய் குறைந்தது. இவ்விதம் இருபதினுயிரம் பரவர்கள் கிறிஸ்தவராகித், தங்கள் குலத் தொழிலைச் சுதந்தரமாகக் கொண்டு, மதுரை மன்னரை அரசராக அங்கிகரிக்காமல் வாழ்ந்தனர்.

விஜய நகர வேந்தர் பரவரது செய்கையை அறிந்தனர். சேர நாட்டில் உரிமையை நிலைநாட்ட வந்த அப் பெரும்படை, கீழைக் கடற்கரை யோரத்தில் உள்ள பரவர் சேரியிலும் உரிமையை நிலைநாட்டப் புறப்பட்டது. போர்த்துக்கீசியர் பரவர்க்கு உதவியாக விஜயநகரப் படையை எதிர்த்துப் போர் புரிந்தனர். அப்போரில் விட்டலரது மைத்துனர் ஒருவர் பகைவர் கையில் அகப்பட்டார். அதனுல் கிறிஸ்தவர்களைச் சிறை செய்யவேண்டுமென்று விட்டலர் மிக்க வீராவேசத்தோடு போர் புரிந்தார். கிறிஸ்தவரான பரவர் எல்லோரும் போர்த்துக்கீசியர் கட்சியிற் சேர்ந்தனர். அக் காலத்திலே போர்த்துக்கீசியர் மணப்பாடு, தூத்துக்குடி, காயல் முதலிய பல ஊர்களில் வாழ்ந்தனர். அவர்களே பரவர் நாட்டுக்குரிய நியாய விசாரணை யெல்லாம் செய்து வந்தனர்.

இவற்றையெல்லாம் அறிந்த விட்டலர், தம்பெரும்படையுடன் அங்குச்சென்று, பலவகையான படைக்கலங்களைக் கொண்டு போர் புரிந்தார். போர்த்துக்கீசியர் தமக்கும் தம்மை

நம்பியிருக்கும் பரவர்க்கும் ஆபத்து நேரிடுமாயின், தப்பித்துத் செல்லும்பொருட்டுக் கடலிலே தோணிகளைத் தயாராக மிதக்க விட்டிருந்தனர். வடக நாட்டுப் படைஞர் பரவரைத் துரத்திக் காட்டுக்கு ஓட்டினர்; அவர்கள் உடைமைகளை யெல்லாம் சூறையாடினர். பரவரிற் பெரும்பான்மையோர் தோணிகளில் ஏறிக் கன்னியாகுமரிக்கு எதிரில் உள்ள சில சிறு தீவுகளிற் போய்த் தங்கினர். இக் கடல் துறையிலே வடுகர் படை இறங்கிச்செல்ல வழி நன்கமையவில்லை. இடையிடையே மணல் மேடுகள் இருந்ததால், நன்கு பழகிய பரவர்களுக்கே நினைத்த வண்ணம் ஓடிச்செல்வது எளிதாயிருந்தது.

இத்தீவுகளிற் புகுந்த பரவர்கள், உணவும் நீரும் இன்றி மிக்க சிரமமடைந்தனர். காயலில் குடியிருந்த போர்த்துக்கீசிய படைத்தலைவர் வீடு, வடுகப்படைஞராற் தீயிடப்பட்டது. அந்தப் படைத்தலைவரும் கடலில் இருந்த தீவுகளை நோக்கிச் சென்றார். தூத்துக்குடியிலும் வடுகப் படைஞர் புகுந்து கலக்கினர். விட்டலர் அங்குச் சிலநாள் தங்கி இருந்தனர். சேவியர் சாமியார், இப் போரால் வருந்திய கிறிஸ்தவர்களுக் கெல்லாம் தம்மால் இயன்ற உதவி புரிந்து கொண்டிருந்தார்.

விட்டலர் சைனியம் போர் புரிந்துகொண்டே சோழ மண்டலக் கரையில் நெடுநாள் இருந்தது. வடக்கிலிருந்த கிராமங்களை அவர் அழிக்க வில்லை; தம் மைத்துனர் மீண்டு வந்ததும் அவரை அழைத்துக்கொண்டு மதுரைக்குப் புறப் பட்டார். பிறகு தென்னாட்டு ராஜப்பிரதிநிதியாக, விட்டலர் பன்னிரண்டு வருஷ காலம் திரிசிரபுரத்தில் இருந்தார். விட்டலர் இவ்வாறு வாழ்ந்து வருகையில் பரவர்களோடு பின்னும் பல போர்கள் புரிந்தார்.

சோழமண்டலக் கரையிலே போர்த்துக்கீசியர் இராமேசுவரம் வரையிற் கைக்கொண்டிருந்தனர். இராமநாதபுரம் ஜமீனை யடுத்த ஒரு சிற்றூரிலே, அவர்கள் ஒரு மண்கோட்டை கட்டியிருந்தனர். அங்கு ஒரு சிறு படை வைக்கப்பட்டிருந்தது. கி. பி. 1549-ம் வருஷத்தில் இக்கோட்டையில் ஒரு போர்த்துக்கீசியத் தலைவன் இருந்தான். அவன் இராமேசுவரத்துக்குச் செல்லும் யாத்திரிகர்களது வழியைத் தடுத்து ஒரு பள்ளம் வெட்டி வைத்தான். அவ்வழியில் வந்த யாத்திரிகர் எல்லோரும் அவனிடம் சுங்கம் கட்டவேண்டி யிருந்தது. இதனால் இராமேசுவரத்திற்குச் செல்லும் யாத்திரைக்காரரின் தொகை குறைய இராமேசுவரக் கோயிலார்க்கு வரும் வருவாய் குறையத் தொடங்கியது. கோயில் அதிகாரிகள் தங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப்பற்றி மதுரை யரசரிடம் விண்ணப்பித்துக் கொண்டனர். விசுவநாத நாயக்கர் இது கேட்டுப் பெரும் படையோடு வந்து போர் தொடுத்தனர். போர்த்துக்கீசியப் படைத்தலைவனும் அவனுக்கு உதவியாய் இருந்த பரவரும், தோணிகளில் ஏறிக் கடலில் ஓடி முன்போலச் சிறு சிறு தீவுகளில் ஒளிந்துகொண்டனர். முகம்மதியர் பலர் இப்படையோடு சேர்ந்துகொண்டு பரவரை வாட்டினர். பரவரிற் சிலர் கொலையுண்டனர்; பலர் சிறைப்பட்டனர். கோட்டை இடித்துத் தகர்க்கப்பட்டது. இராமேசுவர வழியைத் தடுத்த பள்ளம் மூடப்பட்டது. பிறகு விசுவநாத வேந்தரும் அவருடன் வந்த படைஞரும், இராமேசுவரம் சென்று சுவாமி தரிசனம் செய்து திரும்பினர்.

அப்பால் கி. பி. 1552-ம் ஆண்டில், திருவாங்கூர் நாட்டுப் பிரபு ஒருவர் பெரும் படையோடு வந்து, கன்னியா குமரிக் கருகில் உள்ள பல கிராமங்களைத் தாக்கி அழித்தனர். அங்கு

வாழ்ந்த குடிமக்களில் எஞ்சி நின்றோர் மதுரை யரசர்க்குத் தங்கள் கஷ்டத்தைத் தெரிவித்தனர். இக் குடிமக்களிற் பெரும்பாலோர் பரவரேயாவர். விசுவநாதர் இச் செய்தி கேட்டதும் பெருத்த சைனியத்தோடு வந்து அம்மலையாள ஜமீன்தார் நாட்டைச் சேர்ந்த கிராமங்களைப் பாழ்படுத்தினர். திருவாங்கூர் மன்னர் இது கேட்டு மிக்க கோபங்கொண்டு, மதுரை யரசரை எதிர்க்காமல் அவர் போனபிறகு, விட்டலரது படைஞரின் துணைபெற்றுப் பரவர் நாட்டிற் புகுந்து பாழ் செய்தனர். போர்த்துக்கீசியர் தமக்குப் பணியாதிருப்பது கண்ட விட்டலர் மனம் புண்ணுற்றார். அவர் தம் பகைவர் கடல் வழியே தப்பியோடாதிருக்கும் வண்ணம், ஈரப்பலி என்றமுகம்மதியன் உதவிபெற்று நிலத்திலும் நீரிலும்போர்த்துக்கீசியரைத்தாக்கினர். இப்போரிலும் முகம்மதியர்விட்டலர் படைகட்கு உதவியாக வந்தனர். போர்த்துகல் படைத்தலைவர் ஒருவர் சிறைப்பட்டார். அவரை மீட்க விரும்பிய கிறிஸ்தவர்கள் லக்ஷம் பணம் கொடுக்க நேரிட்டது. இப்போரின் பிறகு பரவர் எல்லோரும் மதுரை மன்னர்க்கு முத்துக்குளித்தலால் தமக்குக் கிடைக்கும் ஒரு நாளைய வருவாயைக் கப்பம் கட்ட ஒப்புக் கொண்டனர். அது பத்தாயிரம் வராகன் என்று மதிப்பிடப் பெற்றது. இவ்வளவு போர்கள் நடந்தும், கடற்கரையிற் போர்த்துக்கீசியர் பலம் குறையவில்லை. இப்போரின் பிறகே, விட்டலர் கன்னியாகுமரியில் ஜய ஸ்தம்பம் நாட்டினர். இவ்வளவோடு பரவர்கள் போர் முடிந்ததாகக் கூறுவதற்கில்லை. ஏனெனில் 1560-ம் வருஷத்திலே விசுவநாத நாயக்கர் திரும்பவும் கடற்கரை யோரம் படையெடுத்துச் சென்று, இரண்டு நாள் வருவாயைத் தமக்குக் கட்டும்படி கேட்டார். இப்படையின் ஒரு பகுதி காயல்

சென்று வீடுகட்கெல்லாம் தீயிட்டது. ஜனங்கள் எல்லோரும் மண்கோட்டை யொன்றில் மறைந்து கொண்டனர். விசுவநாதர் வந்ததும் கோட்டையில் இருந்தோர் எல்லாரும் தந்திரமாகத் தப்பித்துக் கொண்டு கடலில் தோணிகளில் இறங்கினர். ஆயினும் விசுவநாதர் அவரனைவரையும் சிறை செய்து நகரத்தைப் பாழ் படுத்தினர்.

சிறைப்பட்டோர் எல்லோரும் பதினைந்து தினங்கள் சிறையில் இருந்தனர். ஒவ்வொருவரும் ஆயிரம் பணம் கொடுத்துப் பிறகு விடுதலை பெற்றனர். அதன் பிறகு பரவர் இரண்டு நாள் வருவாயை மதுரையரசுக்கு அளிப்பதாக ஏற்றுக் கொண்டனர். பிறகு கிறிஸ்தவர் எல்லோரும் தலைமன்ஞரில் ஒரு கோட்டை கட்டிக் கொண்டனர். விசுவநாதர் இதற்கு இடம் தரவில்லையாயினும் போர்த்துக்கீசியர் தந்திரத்தால் அது நிறைவேறியது. கிறிஸ்தவக் கோயில்கள் பல, புதுமையாக அந் நாட்டிலே தோன்றலாயின.

விசுவநாதர், இனி அவ்வாறு ஏழை மக்களை அதிகம் சிரமப்படுத்தக் கூடாது என்று தீர்மானித்து மதுரை நகரில் அமைதியாய் வாழ்ந்தார். தமக்கு முதுமைப் பருவம் நெருங்குவதை அறிந்து, தம் குமாரரை அருகில் அழைத்து அரியநாதர் உதவியைக் கொண்டு அரசப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி செய்து, தேவாலயங்களுக்குத் திருப்பணிகள் செய்வதிலும், சாஸ்திர ஆராய்ச்சி செய்வதிலுமாகப் பொழுது போக்கி வந்தார்.

விசுவநாதர், விட்டலர் தென்னுட்டில் இருக்கையில் அவர்க்கு உதவியாகச் செய்தற் குரியவை யெல்லாம் செய்து வந்தார். பன்னிரண்டு வருஷங்களுக்கு மேல் தென்னுட்டுப் பிரதிநிதியாக இருந்த விட்டலர், பரவரோடும் போர்த்துக்

கீசியரோடும் ஓயாமற் போர் தொடுத்துக் கொண்டிருந்தார். அவர் எண்ணிய எண்ணம் நிறைவேறும் வழியாய் இல்லை. போர்த்துக்கீசியர் கைக்கொண்ட நாடுகளிற் சிறிதளவேனும் விஜய நகரத்தார்க்கு வரவில்லை. பரவரும், அவரது அரசுக் குரிமை பாராட்டிய போர்த்துக்கீசிய நாட்டாரும், ஹிந்து ஸாம்ராஜ்யத்தின் பெருமையைக் குறைக்கத், தங்களால் இயன்றன வெல்லாம் செய்து வந்தனர். சேதுபதியும் மதுரை மன்னர்க்கும் விஜய நகரப் படைவீரர்க்கும் அவ்வக் காலங்களில் உதவி செய்தார். வெள்ளத்திலே நிற்கும் கோரைப்புற் போலப், பெரும் படை வரும்போது ஓடுவதும், அவர்கள் சென்றதும் திரும்ப வந்து நாட்டைக் கைக் கொள்ளுவதுமாயிருந்த பரவரோடு, போர் தொடுப்பதிற் பயனில்லை யென்றே எல்லாரும் தீர்மானித்தனர். விட்டலர் திரிசிரபுரத்திலே வாழ்ந்திருந்து கடைசியாக இயற்றிய போர் ஒன்றில், எதிரிகள் தர்ம முறைக்கு மாறாக விட்டதோர் புதிய ஆயுதப் பிரயோகத்தால் இறந்தார். தஞ்சை மன்னரும் மதுரை மன்னரும், இச் செய்தியை விஜய நகர மன்னர்க்குத் தெரிவித்து நாடெங்கும் துக்கம் கொண்டாடினர்.

பதின்மூன்றாவது அத்தியாயம்

இளவரசும் முதியவரசும்

விசுவநாதர் தமிழ் நாட்டுக்கு வந்து பல வருஷங்கள் ஆகிய தால், தம் தாய் மொழியாகிய தெலுங்கு மொழியில் தேர்ச்சிபெற்றிருந்ததுபோலவே, தாம் அரசுபுரியும் நாட்டின் மொழியாகிய தமிழிலும் மிக்க தேர்ச்சி யுடையவரானார். அரண்மனையிலே சதாகாலமும் வடமொழி வித்துவான்களும் தமிழ்ப்புலவர்களும், தடையின்றி அரசரிடம் வந்து ஸத் விஷய விசாரணை செய்து பொழுதுபோக்கிக் கொண்டிருந்த னர். சில புலவர்கள் நவராத்திரி காலங்களில் அரசரைப் புகழ்ந்து பாடல்கள் பாடிப் பரிசில் பெற்றனர்.

திரிசிரபுர அரண்மனை மிகவும் சௌகரியமாய் அமைந் திருந்ததால், விசுவநாதர் பெரும்பாலும் அங்குச் சென்று வாழலாயினர். திருவரங்கப் பெருமானைத் தினந்தோறும் தரிசித்துக், காவிரிக்கரையில் வாழும் பேறு பெறவேண்டும் என்பதே அவர் கருத்தாயிருந்தது. பாண்டிய அரசு நிலைத் திருந்த காலத்தில், மதுரையிலிருந்த ராஜாங்க விவகார நிலயங்களையெல்லாம், ஒன்றொன்றாக மெல்ல மெல்லத் திரிசிர புரம் கொண்டு சென்றார். இளவரசரும் அரியநாதரும் பெரும் பாலும் மதுரையிலேயே இருந்தனர்.

இளவரசர் தந்தையாகிய முதிய அரசரைக் கண்டு, அர சாங்க காரியங்களில் ஆலோசனை கேட்கும் வண்ணம் திரிசிர புரத்துக்கு அடிக்கடி வருவதுண்டு. அக்காலங்களில், அரிய நாதர் மதுரையிலேயே இருப்பார். ஒரு சமயம் இவ்விருவரும் மிக்க அவசரமாகத் திரிசிரபுரம் வந்து அரசரைக் கண்டனர். அப்பொழுது விசுவநாதர் தம் அரண்மனையின் தோட்டத்

திலே மாலைக் காலத்தில் வந்து காற்று வாங்கிக் கொண்டிருந் தார். அவ்விருவரையும் கண்டு ராஜாங்க விஷயங்களை விசாரித் தார். பிறகு அங்குப் பின்வரும் பேச்சு நிகழ்ந்தது.

இளவரசர்:—தந்தையே, மதுரையில் மக்கள் எல்லோரும் தங் கள் அரசரைக் காணவேண்டும் என்ற ஆவல் உடையவர் களாயிருக்கிறார்கள். தாங்கள் சிறிது காலம் அங்கு வந் திருக்கலாமே.

அரசர்:—குழந்தாய்! அரியநாதரே! இனி என்னால் மதுரை நகர்க்கு வரவியலாது. இங்கிருந்த வண்ணமே இனி அந்திய காலத்தைக் கழித்துவிடலாம் என்று எண்ணு கிறேன். குழந்தாய், அரசுக்குரிய எல்லா பொறுப்பை யும் நீயே ஏற்றுக்கொள்ள வேண்டும். அரியநாதர் உதவி யிருக்கையில் உனக்கு என்ன கவலை? முன்னாளிலே முதிய அரசர்களிடமிருந்த அரசு, இளவரசர்களுக்கு அவர்கள் ஆயுட்காலத்திலேயே வந்ததென்ற வரலாறு கள் உண்டு. பொறுப்பை யேற்றுக்கொள்ளத்தக்க ஆற்றல் படைத்த மைந்தரிடம் அரசை அளித்துத், தவம் செய்யச் செல்வதே முதிய அரசர் கடமையாய் இருந்தது. இவ்வூரில் வாழ்ந்துகொண்டு அரங்கநாதரைத் தரிசனம் செய்வதே நான் புரியத்தக்க தவமாம். மதுரை நகரத்தார் இனி அரசரைக் காணவேண்டுமென்று விரும்புவாராயின், உன்னையே கண்டு தங்கட்கு வேண்டிய வற்றையெல்லாம் பெறவேண்டும். அரியநாதரே! உமது உதவி எனக்கு இருந்ததுபோல இளவரசுக்கும் இருக் கும் என்றே நம்புகிறேன்.

அரியநாதர்:—அரசே, விஜய நகர வேந்தரிடம் என்னை அறி முகம் செய்துவைத்து, நல்ல நிலைமைக்குக் கொணர்ந்தவர்

நும் தந்தையாரே என்பதை நான் மறக்க வியலுமோ? எனக்கு இன்னும் என்னென்ன பெரும் பதவிகள் வருவதாயிருப்பினும், நுமது குடும்பத்தில் உள்ள ஆழ்ந்த அபிமானம் மாறுது. அப்படி நான் மறந்து விட்டால் என்னைக் காட்டிலும் நன்றி கெட்டவன் எவனேனும் இருப்பானு?

அரசர்:—குழந்தாய், நீயும் உன் பாட்டனுரை அறிவாய். அவர் உடம்பில் உயிருள்ள வளவும் விஜய நகர வேந்தர்க்கு இயன்ற பணி புரிந்து வந்தார். என் தாயும் தந்தையும் மிகவும் முதிய பருவம் வரையில் வாழ்ந்திருந்தனர்; திருப்பதி முதலிய திவ்ய க்ஷேத்திரங்களிலே விசேஷ பூஜைகள் எல்லாம் செய்தனர். நாம் திருவாங்கூர் மன்னரிடம் பகைமை பூண்டு போர்புரிந்து கொண்டிருக்கையில், என் தந்தையும் தாயும் ஒரே காலத்தில் பரமபதம் சேர்ந்தனர் என்ற செய்தி வந்தது. போர் நடக்கும் சந்தர்ப்பத்தில் அரசரா யிருப்போரும், அரச சேவகம் செய்வோரும் தம் குடும்பக் கவலைகளுக் கிடங்கொடுத்தல் இயலுமோ? என் தந்தையும் தாயும் இந்நாட்டுக்கு வருவதில்லை என்று ஓரே உறுதியாய் நின்றதால், அவர்களது மரணுந்த காலத்தில் நான் பக்கத்தில் இருக்க வியலாமற் போயிற்று. இனி அவற்றைப் பற்றிப் பேசிப் பயன் என்ன? உனது பாட்டனுர் தேடி வைத்த பொருள் எல்லாம், இந்நாட்டிலே பொது மக்களுக்கு உபயோகமாகும் வழியில் விநியோகிக்கப்பட்டது என்பதை நீ அறிவாய். நாம் பரம்பரையாக விஜய நகர வேந்தரது சேவகர் என்பதை நீ மரக்கலாகாது.

இளவரசர்:—தந்தையே, விஜய நகரத்திலே இப்பொழுது ஆட்சி நல்ல நிலைமையில் இல்லையென்று செய்தி கிடைக்

கின்றதே. நம் நாட்டின் அரசு அந்நாட்டோடு பிணைக்கப்பட்டிருக்குமாயின், நமக்கு இழிவு நேரிடினும் நேரிடலாம் என்று தோன்றுகின்றது.

அரசர்:—மைந்த! என்ன கூறினாய்? இப்பொழுது விஜய நகரத்திலுள்ள குறையென்ன? ராமராயர் என்ற மஹா மந்திரியைச் சாமானியரென்று நினையாதே. சதாசிவர் நம் சக்கரவர்த்தியாய் இருப்பது ராமராயரது உதவியாலேயே யாகும். விஜய நகர ராஜாங்கத்திலே முன்னாளில் வாழ்ந்த வீர சிரேஷ்டரைப் போன்று, ஒருவர் இந்நாளில் உண்டு என்று கூறவேண்டுமாயின், ராமராயரையே சொல்லவேண்டும். ராமராயரே சமீப காலத்தில் ராஜ்யபாரம் முழுவதையும் ஏற்றுக்கொள்வார் என்று தோன்றுகிறது. இப்பொழுதும் அரசர்பிரான் அவர் நிழலில் மறைந்திருக்கிறார். எதிர் காலத்தில் என்ன விளையினும், விஜய நகர ஸாம்ராஜ்யாதிபதியாய் இருப்போர் எவரேயாயினும், அவர்க்குப் பணிந்து கப்பம் கட்டி வாழ்வதே நமது கடமையாகும்.

இளவரசர்:—சேர வேந்தர் பல முறைகளில் கப்பம் கட்ட மறுத்து மிக்க சிரமம் அடைந்திருக்கின்றார் என்பதை நான் அறிவேன்.

அரசர்:—ஆம், அது மெய்யே. சேர வேந்தர்க்கும் நமக்கும் ஒரு வேறுபாடு உண்டு. சேர வேந்தர் பழமையான ஒரு அரச பரம்பரையில் வந்தவர். இடைக் காலத்திலே தோன்றிய விஜய நகரச் சக்கரவர்த்திகள் தங்கள் பராக்கிரமத்தால் அவரைக் கப்பம் கட்டச் செய்தனர். சுதந்தரமாக வாழ்ந்திருந்த ஒருவர் தெய்வச் செயலால் பிறர்க்கு அடங்கி வாழ நேரிடுமாயின், அவர் தம்

முன்னைய நிலையை எண்ணிப் பார்த்து, அதனை அடைய முயல்வது இயல்புதான். அப்படிச் சுதந்தரம் நாட்ட அவர் முயலுங்காலங்களில் எல்லாம், ஏகாதிபத்தியத் தலைவர் சக்தியுள்ளவரா யிருப்பாராயின் அடக்கிக் கொண்டே வருவதும் இயல்புதான். நமக்கும் விஜயநகர வேந்தர்க்குமுள்ள தொடர்பு அத்தகையதன்று. நாம் எந்தப் பூர்விக அரச குடும்பத்திலும் பிறந்தவரில்லை. நம் குடும்பத்தில் முன்னோர் எவரேனும் அரச மரபு என்று கூறிக்கொள்ள உரிமையில்லாத ஒரு குடியிற் பிறந்த நான், விஜய நகர வேந்தர் ஆணையாலும் அருளாலும் இப் பெரு நாட்டின் அரசன் ஆயினேன். வேந்தர்பிரான் எனக்கு அரசுரிமை நல்கியதோடு நில்லாமல், உரிமையில் லாத நம் மரபை அரச மரபும் ஆக்கினர். நமக்கு விஜயநகர மன்னர் செய்திருக்கும் உதவியை எண்ணிப் பார்ப்போமாயின், நாம் எத்தனை யாண்டுகள், தலைமுறை தலைமுறையாக இவ்வுலகில் இருப்பினும், அத்தனை யாண்டுகளும் விஜயநகர வேந்தரைத் தெய்வமாக நினைத்தே வாழவேண்டும் என்று கூறுவேன். சேரர் சோழர் பாண்டியர் முதலிய பழைய அரசர்களைப் போன்று, நாம் விஜயநகர வேந்தர்க்கு அடங்காது பிரிந்து செல்லவோ, எதிர்த்து நிற்கவோ வழியில்லை. இந்த உண்மையை நீ என்றும் மறவாதே.

இளவரசர்:—தந்தையே, தாங்கள் சொல்லும் நியாயப்படி சதாசிவ மஹா ராயர் நம் பக்திக் குரியவரே. அவரிடம் உள்ள அதிகாரத்தை யெல்லாம் கைக்கொள்ள முயற் சிக்கும் ராமராயர் நம் வணக்கத்துக்கு உரியவராவரோ? அவர் செய்யும் அதிக்கிரமச் செயலுக்கு நாமும் உதவி யாய் நிற்கலாமோ?

அரசர்:—அதை ஏன் கவனிக்கிறாய்? விஜயநகர அரச பீடத்தில் வீற்றிருப்போர் எவரேயாயினும், அவர் நாம் வணங்குதற்குரியவர் என்பதே என் உறுதியான எண்ணம்.

இளவரசர்:—தந்தையே, தாங்கள் கூறிய வண்ணமே நடந்து கொள்கிறேன்.

அரசர்:—குழந்தாய், குடிகளே அரசர்க்கு உயிர் என்று அறிய வேண்டும். நம் பரம்பரையினர் அரசர் அல்லர் என்பது குடிகள் எண்ணமாயிருக்கும். நாம் அன்பினாலேயே அவர்களை வசப்படுத்தவேண்டும். உத்தியோகஸ்தர்களாற் குடிகளுக்கு நேரிடக்கூடிய உபத்திரவங்களை அரசராயிருப்போர் எளிதில் அறிய இயலாது. உத்தியோகஸ்தரை நியமனம் செய்வதற்குமுன், அவர் தகுதியை நன்கு ஆராய வேண்டும். குடிகளின் பிரதிநிதிகள் நம்மைக் காணவருங் காலங்களில், நாம் அவர்களோடு சுலபமாய்ப் பழகவேண்டும். அரசர் எப்பொழுதும் குடிகளால் காணத்தக்கவர் என்ற புகழே நமக்கு வேண்டும். அரசாங்க நிதிச்சாலை என்றும் குறைவற்றிருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். இந்த முத்திரை மோதிரத்தையும் கொடுக்கிறேன். இன்று முதல் அரசுரிமை நின்னதே. அரியநாதரே, நாட்டின் நலத்தை வளர்க்க நும்மால் இயன்ற உதவி புரிவீராக.

அரியநாதர்:—அரசே, யான் முன் போலவே என்னால் இயன்றன செய்து வருகிறேன்.

பிறகு இளவரசரும் அரியநாதரும் விடை பெற்றனர். மதுரைக்குச் சென்றனரேனும் அவ்விருவர் மனமும் திரிசிரபுரத்திலேயே இருந்தது.

விசுவநாதர் ஒரு நாள் அரங்கநகர்க் கோயிலுடைய அழகிய மணவாளப் பெருமாளைத் தரிசித்து, ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களைப் பிறர் பாடக் கேட்டு மனமுருகினார்; பிறகு மெல்ல வந்து இரதத்தில் அமர்ந்து அரண்மனையடைந்தார். அரங்கநாதர் திருவருளால் அன்று இரவு அவர் அவன் நிலை அடைந்தார். விரைவிலே இது நிகழலாம் என்று அறிந்திருந்த இளவரசர், திரிசிரபுரம் சேர்ந்து தந்தைக்குரிய ஈமக் கடன்களை ஆற்றி அந்தணர் ஆசி பெற்றார்.

பிறகு அவர் மதுரைக்கு வந்து, அரியநாதர் முதலிய அமைச்சர் பலர் அருகிலிருக்க, மீனாக்ஷி கோயிலிலே பட்டாபிஷேகம் செய்து கொண்டார். தம் தந்தை அரச மரபிலே பிறக்கவில்லையாயினும், அரசர்க்குரிய குணங்கள் எல்லாம் நிரம்பி யிருந்தார் என்று அறிவாராகையால், அவர் புகழுக்கு மாசு நேரிடா வண்ணம், அரசுரிமையை யேற்றுக் கொண்டு பாண்டிய நாட்டுக் குடிகளை நன்கு பரிபாலித்து வந்தார்.

"எல்லாம் வல்ல இறைவன் அருளால்
விசுவ நாத வேந்தர் சரிதம்
தமிழகச் சிறார்க்குத் தக்கநன் னீதிகள்
பலவும் புகட்டி நிலவுக வினிதே."

அரும்பதவுரை

பக்கம்

1. அருள் - கிருபை.

,, அமலன் - மலங்களினின்றும் நீங்கி இருப்பவர்; இறைவன்.

,, நிர்மலமான - மேகங்களால் மூடப்பெறாத.

,, வெள்ளி - வெண்ணிறமான.

,, அரங்கில் - நடனசாலையில்; சபையில்.

,, நண்பகல் - நடுப்பகல்.

2. செவ்வி - அழகு.

3. பட்ச காலம் - பதினைந்து நாட்கள்.

,, ஸாம்ராஜ்யம் - பல சிற்றரசரை அடக்கி யாளும் தலைமை ஆட்சி.

,, அருங்கலை விநோதர் - அருமையான கல்வியைக் கற்பதையே பொழுது போக்காக உடையவர்.

4. அல்லல் - துன்பம்.

5. ஒருபால் - ஓர் இடத்தில்.

7. குடிப்பழி - குடிக்கு ஏற்படும் இழிவு.

,, பரிபவம் - அவமானம்.

8. வழிமுறை - நடக்கையின் நேர்மை.

9. புரவி - குதிரை.

,, பூரிக்கும் - உவகையால் பருக்கும்.

12. ஞாதிகள் - தாயாதியர்.

,, இறைப் பொருள் - வரிப்பணம்.

13. ஸத்யஸந்தர் - உண்மையே பேசும் நல்லோர்.

14. அரசிறை - வரிப்பணம்.

15. கையளித்தல் - கையில் கொடுத்தல்.

16. மன்றாடுதல் - வழக்கை விவரித்து நியாயம் வேண்டுதல்.
17. ஐயுறல் - சந்தேகப்படுதல்.
19. புராணம் - பழங்கதை.
,, இதிகாசம் - நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே கூறும் காவ்யம்.
,, செஞ்சோற்றுக் கடன் - உணவூட்டி வளர்த்தவர்க்குச் செய்வதற்குரிய கடமை.
20. சான்று - சாட்சி.
,, உரம் - வலிமை.
,, நாட்டம் - கருத்து; நோக்கம்.
21. இகல் வேந்தர் - வலிமை மிக்க அரசர்.
22. அகலாது அணுகாது - விலகாமலும் நெருங்காமலும்.
,, தீக்காய்வார் - தீயினிடம் குளிர்காய்கின்றவர்.
,, சேர்ந்தொழுகுவார் - சேர்ந்து பழகுவார்.
,, போல்க - போல இருப்பாராக.
,, வருவாய் - வரும்வழி.
24. மங்கள சூசகங்கள் - மங்கலக் குறிகள்.
,, அரண் - கோட்டை
,, வையை செல்வாயில் - வைகையாற்றுக்குச் செல்லும் வாசல்.
,, வேப்பந்தார் - வேப்ப மலர் மாலை; இது பாண்டியர்க் குரியது.
,, குழுமி - கூடி.
25. அரியணை - சிங்காதனம்.
26. மண்டலம் - நாற்பத்தைந்து நாட்கள்.
30. கயற் பொறி - மீன் வடிவமா யமைந்த ராஜ முத்திரை.
35. வடகலை - ஸம்ஸ்கிருதம்.
,, தென்கலை - தமிழ்மொழி (தெலுங்கு முதலியனவும்ஆம்).
,, அறநூல் - தர்ம சாஸ்திரம்.
36. ராஜ சேவை - அரசரிடம் பணி புரிதல்.

36. குலதனம் - குலத்தின் செல்வம்.
37. இடையூறு - (இடை + ஊறு) மத்தியில்நேரும் துன்பம்.
38. கைம்மாறு - பிரதிப் பிரயோஜனம்.
39. பொற்பூண் - பொன்னாலாகிய ஆபரணம்.
,, தளை - விலங்கு.
,, அரசு - அரசர்.
,, அருளுமேல் - கிருபை செய்தால்.
,, ஆக்கும் - உயர்நிலை பெறச் செய்யும்.
,, காயுமேல் - வெறுத்தால்.
,, வேந்து எனும் மாதெய்வம் - அரசர் என்ற பெரிய தெய்வம்.
,, வெருளச் சுட்டிடும் - அஞ்சும்படி அழித்துவிடும்.
,, மற்றவை - மற்றத் தெய்வங்கள்.
,, மருளி - மயங்கி.
,, வாழ்த்தினும் வையினும்-ஒருவர் தம்மை வாழ்த்தினாலும் வைதாலும்.
,, அழித்தல் - அழித்து விடுதல்.
,, அங்கு ஆபவோ - அங்கே ஆகுமோ.
42. வறிய - தரித்திர; ஏழ்மையான.
43. திருவோலக்கம் - மகா திவ்ய சபை.
,, புற மதில் - வெளி மதில்.
44. சிதலம் - இடிந்து கிடத்தல்.
,, நைமித்திக பூஜைகள் - உற்சவங்கள்.
45. கொத்தளம் - மதிற் புறம்.
46. தசை - நிலைமை.
48. திறை - கப்பம்.
51. மேம்படும் - மேன்மை அடையும்.
52. பணி - சேவகம்.

53. பாவை - பதுமை; பொம்மை.
,, காலக் கணிதர் - சோதிடர்.
,, அங்கி - சட்டை.
54. தோரண வாயில் - சித்திர கோபுர வாயில்; முதல் வாயில்.
,, பவனி - ஊர்வலம்.
,, அங்கயற்கண் அம்மை - அழகிய மீனக்கண் அம்மை; மீனாட்சி.
55. சின்னம் - குடை கொடி முதலிய விருதுகள்.
57. கண்மாய்-நீர் யாற்றிலிருந்து பிரியும் சிறு அணைக்கட்டு.
66. மரபு - வம்சம்.
68. தண்டோபயம் - தண்டித்துப் பகைவனை வெல்லும் வழி.
69. ஒப்பாரும் மிக்காருமு - சமானமானவரும் மேலான வரும்.
70. மான்ய - மேன்மை தங்கிய.
79. யுத்த தளவாடங்கள் - யுத்தத்துக்குரிய ஆயுதங்கள் முதலியன.
83. பொறிகள் - இயந்திரங்கள்.
,, கொழுநர் - (கொழு+ந்+அர்) கொழுகொம்புபோன்ற வர்; கணவர்.
87. களப்பர் - களபரர் என்ற வமிசத்து அரசர்.
89. துலாபாரம்-தன் நிறையளவு பொன் நிறுத்துத் தானம் வழங்குதல்.
103. படைக்கலம்—ஆயுதம்.
104. இடர் - துன்பம்.
121. சிறார் - சிறுவர்.

85875

The B. N. Press, Educational Printers, Mount Road, Madras.